காவேரி

விய - சித்திரை

23 APR 1946

April - 1946
As. 6

1—4—'46ல் நடந்த எனது குமாரன் **கர்னடக சங்கீத வித்வான்**

கும்பகோணம் "இசை ஒளி"

A. D. சுல்தானின்

திருமணத்தை முன்னிட்டு

ஆசிக் கடிதங்களும், தந்திகளும், கணக்கற்ற விலையுயர்ந்த சன்மானங்களும் அனுப்பித்தருளிய ஆயிரத்து இருநூறு நண்பர்களுக்கும் சங்கீத அபிமானிகளுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை இப்பத்திரிகையின் மூலம் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நண்பர்கள் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்டு எழுதி நன்றியைத் தெரிவித்துக்கொள்ள இயலாததற்கு மன்னித்தருள வேண்டுகிறேன்.

A. D. சுல்தான் & கோ.,
கும்பகோணம்.

A. அபூபக்கர் ராவுத்தர்,
Hony. Magistrate & Proprietor.

* * * *

எனது திருமணத்தன்று வந்து குவிந்த கணக்கற்ற சன்மானங்களும் ஆசித் தந்திகளும் கடிதங்களும் என்னைப் பெருமைப் படுத்துவதற்கென்று நான் எண்ணவில்லை. பொது ஜனங்கள் எனது சங்கீதத்தில் வைத்துள்ள மதிப்பிற்கறிகுறியாக அவற்றை நான் ஏற்கிறேன். இப்பெருமை உண்மையில் எல்லாம்வல்ல அந்த இறைவனையும், எனக்கு உற்சாகமும், ஊக்கமும் அளித்த முதியோரான பிரபல சங்கீத வித்வான்களையும் விரிந்த மனப்பான்மை படைத்த பொது ஜனங்களையுமே சாரும். இத்தருணத்தில் இவர்களனைவருக்கும் எனது வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இப்படிக்கு,
இசை ஒளி **A. D. சுல்தான்.**

விஜயபுரம்

கே. டி. ஆர்.

சரக்குகள்—பன்னீர், அரைக்கீரை, சந்தனாதி
தைலங்கள், கிருஷ்ணா அகர்பத்தி, ராஜா
பற்பொடி — மணத்திற்கும் குணத்திற்கும்
பெயர்போனவை — எங்கும் கிடைக்கும்

K·T·R

சந்தனாதி தைலம்

...SOLE DISTRIBUTORS...

GIRISON & Co...MADRAS

தென்னிந்தியாவிலுள்ள எல்லா ஊர்களிலும் எல்லா வியாபாரிகளிடத்திலும், வட இந்தியாவில் பம்பாய், கல்கத்தா, பூனா, குண்டூர் டிஸ்டிரிக்ட்டு முதலிய ஊர்களிலுள்ள எங்கள் ஏஜண்டுகளிடமும் கிடைக்கும். மற்ற பாகங்களிலும் ஏஜண்டுகள் தேவை.

K. T. R. என்ற விலாஸ எழுத்துக்களை எழுத்துக்கெழுத்து
— கவனித்து வாங்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம் —

23 APR 1946

குறித்த நேரத்தில் லாரிகள்

திருச்சி — மதுரை
மதுரை — திருநெல்வேலி
மதுரை — தூத்துக்குடி
திண்டுக்கல் — கோயமுத்தூர்

கோயமுத்தூர் - கள்ளிக்கோட்டை
கோயமுத்தூர் — பாலக்காடு
திருச்சி — சென்னை
திருச்சி — பெங்களூர்

யுத்தகால ஆறு வருஷங்களில்
5 கோடி பிரயாணிகளை பத்திரமாக

TVS

கொண்டுபோய் சேர்த்திருக்கிறார்கள்,
இப்பொழுது குறித்த நேரத்தில் சாமான்களை
கொண்டுபோய்ச் சேர்க்கிறோம்

TVS

போக்கு வரத்தை துரிதப்படுத்தி வியாபாரத்தை பெருக்குவது,
எடுத்துப் போவதை எங்களிடம் ஒப்படையுங்கள்

T.V.சுந்தரம் அய்யங்கார் & ஸன்ஸ் லிட்

மதுரை & சென்னை

போக்கு வரத்து சாதன மளிப்பது எங்கள் தொழில்

TVSK-20-TM



கடைசி "விக்கெட்"

வெய்யிலின் வெப்பம் அதிகரிக்க அதிகரிக்க கிரிக்கெட் விளையாடுபவர்களின் வேகமும் குறைகிறது. கடைசியாகப் பந்தடிப்பவன் விக்கெட்டை நோக்கி ஓடுகிருன். பந்தெறிபவனே விக்கெட்டைக் கலைத்துவிடுகிருன். இவன் வெளியேறுவதோடு வெளியூர்க் கோஷ்டியின் ஆட்டம் முடிகிறது.

கூடாரத்தில் விளையாடிக் களைத்தவர்களை வரவேற்கத் தேனீர் காத்திருக்கிறது. வியர்வை துடைத்து தாகசாந்தி செய்து சிறிது ஓய்வெடுக்கிருர்கள். ஒன்றிரண்டு கோப்பை தேனீர் அருந்த வேண்டியது தான். உள்ளூர்க் கோஷ்டியார் பந்து பொறுக்கி எறிந்த சிரமத்தை மறந்து பந்தடிக்கக் கிளம்புகிருர்கள்.

இடைவிடா விநியோகம்
சதா புதுமணம்

இந்தியாவிலுள்ள கிரிக்கெட் மைதானங்களுக்கெல்லாம் தேயிலை— அதிலும் தோட்டத்திலிருந்து நேராக வந்த ப்ரூக் பாண்ட் தேயிலை இன்றியமையாதது.

ப்ரூக் பாண்ட்

"இரு இலையும் ஒரு மொட்டும்"

இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக்
குற்ற மறைப்பா னுடம்பு —*குறள்*

தன்னுடைய குடும்பத்தை வறுமையினின்றும் காப்பாற்றி சந்தோஷமாக வைக்க உழைக்கும் ஒருவனுடைய உடம்பு எவ்வளவு துன்பப் பட்டாலும், அவனுடைய மனம் அடையும் சந்தோஷத்திற்கு ஈடானது ஒன்றுமில்லை.

★

உங்களுக்கும் உங்களுடைய குடும்பத்துக்கும் சந்தோஷத்தையளிக்கக் கூடிய இன்ஷ்யூரன்ஸ் திட்டங்களுக்கு எங்களுக்கு அறிவியுங்கள்.

★

பிருத்வி இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

மயிலாப்பூர் — மதராஸ்

கவனிப்பு !

புது வருஷ வாழ்த்து !!

முகூர்த்தங்களுக்கும்—விசேஷ வைபவங்களுக்கும் வேண்டிய நம்பிக்கையும், நாணயமும் — நயமும், உள்ள — உயர்வும் நவீனத்திற்கும் பெயர்பெற்ற ஏராளமான ஸ்டாக்கிலிருந்து-மனதிற்குகந்த பற்பல பட்டு & நூல் ஜவுளி தினுசுகள் பொறுக்கி எடுக்க

ராதா ஸில்க் எம்போரியம்

1/14, சன்னதித்தெரு,
மயிலாப்பூர்.
போன் நெ. 8016

119, பெரிய தெரு,
கும்பகோணம்.

அசோககிருதம்

முறை தவறிய மாதவிடாய், இரத்தம் சரியாய் வெளியாகாதிருத்தல், அக்காலத்திலுண்டாகும் வயிற்றுவலி, இடுப்புவலி, பலக்குறைவு, மலச்சிக்கல், மூத்திரத்தடை, அடிவயிறு கட்டிபோல் தோன்றல் முதலிய கர்ப்பாசய நோய்களை மாற்றி, காலம் தவறாமல் மாதவிடாயைக் கொடுக்கிறது. சந்தானமில்லாது வருந்தும் சகோதரிகள் இதில் ஒரு புட்டி மருந்தைச் சாப்பிடுவார்களாயின் புத்திரவதிகளாய், சந்தோஷமடைவார்கள்.

புட்டி 1-க்கு ரூ. 2-8-0. தபால் கூலி வேறு.

மன்மத சிந்தாமணி லேகியம்

இரத்தம் சுக்கிலம் இவைகளுக்கு விருத்தியும், சுத்தியுமளிப்பது. தாதுக்களுக்குப் பலமும், அங்கங்களுக்குப் புஷ்டியும், மறைவிட சம்பந்தமான நோய்களுக்கெல்லாம் சாந்தியும் கொடுப்பது. பத்தியமில்லாதது. உருசியும் சிறந்த குணங்களுமமைந்தது. நிகரற்ற போக சக்தியை அளிப்பது. இவ்வித குணங்களெல்லாம் ஒன்றாக அமைந்தது எங்கள் மன்மத சிந்தாமணி லேகியம்.

பவுண்டு விலை ரூ. 4-8-0. தபால் கூலி வேறு

மலையாள மெடிக்கல் ஹால்

திருவனந்தபுரம். (*TRIVANDRUM.*)

வெள்ளி பாத்திரங்கள் பவுன் வைர நகைகள்

— தேதி காலங்களில் —

தேவைக்குக் கிடைக்கக்கூடிய இடம்

A. R. விஸ்வநாத செட்டியார்

ஜுவல்லெர்

100 பெரிய தெரு, கும்பகோணம்.

எங்களிடம் ஒர்க்ஷாப் இருப்பதால்
ஆர்டர் கொடுத்த உடனேயே ஆர்டர்படி
செய்துகொடுக்க வசதி உண்டு.

★

ஸிலோன்

வெஸ்டர்ன் ஏஜன்ஸுக்கு அளித்திருந்த **ஸிலோன் ஸோல் ஏஜன்ஸீ** ரத்து செய்யப்பட்டுவிட்டது. எனவே, பிரத்தியேக இடங்களுக்கு ஏஜன்ஸி வேண்டுவோர் அடியிற்கண்ட விலாஸத்திற்கு எழுதவும்.

●

கராச்சி

Mr. R. A. நாருயணன், Southern Stores-க்கு அளித்திருந்த ஏஜன்ஸி ரத்து செய்யப்பட்டதால், கராச்சிக்கு ஒரு பொருப்புள்ள ஏஜண்ட் தேவை.

●

ஸர்க்குலேஷன் மானேஜர்,

காவேரி ஆபீஸ்,

பெஸன்ட் ரோடு, கும்பகோணம்

★

இவை எல்லாம் சென்னையிலேயே இப்பொழுது தயாராகின்றன

பதப்படுத்திய உருக்கு ஸ்பானர்கள்
அசிடிலின் ஜெனரேட்டர்கள்—மீடியம் பிரெஷர்
அசிடிலின் ஜெனரேட்டர்கள்—லோ பிரெஷர்
டெயில் போர்ட் செயின்கள்
ஸ்லாம் பூட்டுகள் (இரண்டு வகை வேலை செய்வது)
ஹெவி ட்யூடி பஸ், லாரி ஜாக்கிகள்
தூக்கிச்செல்லக்கூடிய தொழிற்சாலை கிரேன்கள்
தூக்கிச்செல்லக்கூடிய தொழிற்சாலை போர்ஜுகள்
டோரேஜ்ஸ் டாங்குகள்
உலோகத் தகடுகள் வெட்டும் ரோட்டரி மெஷின்கள்
போர்ட்டபிள் ரோலர் ஊத்தும் மெஷின்கள்
வீல் பாரோஸ்
பிளாட்பாரம் டிராலிகள்
அட்ஜஸ்டபிள் மெடல் ஸ்டூல்கள் முதலியவைகள்

தயாரிப்பவர்கள்:—

ஸிம்ஸன் அண்ட் கம்பெனி லிமிடெட்

மவுண்ட் ரோட், சென்னை.

பிராஞ்சுகள்:— பெங்களூர், திருச்சிராப்பள்ளி, உதகமண்டலம், ஹைதராபாத் (டக்கான்).

ஒரு புராதன வைத்யம்

இவ்விதமாகவே நல்ல செய்திகள் பரவுகின்றன. வுட்வர்ட்ஸ் கிரைப் வாட்டர் குழந்தைகளை நன்கு பாதுகாக்கிறது.

WOODWARD'S GRIPE WATER

keeps baby well

J-WW111-111

W. WOODWARD LTD. LONDON. ENGLAND

Agent:— **T. T. KRISHNAMACHARI,**

12A Lingha Chetty Street, :: G. T. MADRAS

காவேரி

விய மலர் 5 | "சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—" பாரதியார் | இதழ் 9 சித்திரை

வாளினால் பாகிஸ்தானா?

பிரிட்டிஷ் காபினட் தூது கோஷ்டியினர் வழக்கப்படி கட்சித்தலைவர்களையும், தம்மைப் பின்பற்றும் கோஷ்டியில்லாத போலித் தலைவர்களையும், தேச நலத்தையே பெரிதாக எண்ணியுள்ள கட்சிப்பற்றில்லாத பிரபலஸ்தர்களையும் கூட்டிப் பேசிவிட்டார்கள். இவ்வளவு ஆர்ப்பாட்டமும், பேச்சும் அவசியமா என்பதுதான் நமக்கு விளங்கவில்லை. இதற்கு முன்னோடும் பிள்ளையாக வந்த பார்லமெண்டரி தூதுகோஷ்டியினர்தாம் இவற்றையெல்லாம் செய்துவிட்டார்களே? மறுபடியும் ஏன் இந்த நாடகம்?

தூது கோஷ்டியினரின் முன்னுள்ள பிரச்னை இரண்டே. நாட்டின் நிர்வாகப் பொறுப்பை மாற்றி யாரிடம் அளிப்பது? இதைத் தீர்மானித்த பின்பு பேசவேண்டியது வெள்ளையர்களை எப்படி, எவ்வளவு சடிதியில் வெளியேற்ற வேண்டும் என்பது?

முதல் பிரச்னையைப் பரிசிலனை செய்யும் பொழுது, ஜின்னாவின் பாகிஸ்தான் பிரச்னை எழுகிறது. இதைப் பெரும்பாலோர் எதிர்க்கிறார்கள் என்பதைத் தூதுகோஷ்டியினர் உணர்ந்து விட்டனர். மேலும் அது, நாட்டிற்கே பெருத்த பல ஹீனத்தை விளைக்கும் என்பதையும் உணர்ந்துவிட்டார்கள். ஜின்னா இனி தம்முடைய புத்தி கூர்மையினால் பிரிட்டிஷாரை மாற்றமுடியாது என்று கண்டு பயமுறுத்த ஆரம்பித்துவிட்டார். ரத்த வெள்ளம் ஓடும் என்று எச்சரிக்கை செய்கிறார். ஆறு மாகாணங்களை வெட்டி அளித்தே தீரவேண்டும் என்கிறார். முஸல்மான்கள் பெருவாரியாக உள்ள பிரதேசங்களை சுயநிர்ணய உரிமைப்படி பிரித்து அளிக்கவேண்டுமென்று கூறிய ஜின்னா இன்று ஆறு முழு மாகாணங்கள் வேண்டுமென்கிறார். அதோடு நிற்கவில்லை; வடகிழக்குப் பாகிஸ்தானத்தோடு வடமேற்கிலுள்ள வங்காளம், அஸ்ஸாம் இப்பிரதேசங்களை இணைக்க ஒரு பிரதேசம் (Corridor) அமைக்கப்பட வேண்டுமென்றும், கல்கத்தா, கராச்சி இவ்விரு துறைமுகங்களும் பாகிஸ்தானத்திற்கு வேண்டுமென்றும் வற்புறுத்தியிருக்கிறார்.

பாகிஸ்தானம், ஹிந்துஸ்தானம் என்று இரு நாடுகளாக இந்தியாவைப் பிரித்துவிட்டால் என்ன நேரிடலாம் என்று சற்று ஆராய்வோம். வெளிநாட்டுக் கொள்கைகளில் பாகிஸ்தான் தனக்கருகிலுள்ள மத்தியக் கிழக்கு முஸ்லிம் நாடுகளோடு தொடர்பு வைத்துக்கொள்ளுமேயொழிய ஹிந்துஸ்தானத்துடன் உறவாட ஆசைப்படாது. ஹிந்துஸ்தானம் கிழக்கிலுள்ள சைனா முதலிய நாடுகளுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள நேரிடும். மேலும் பாகிஸ்தான் பிரதேசம் ஒரே தொடரான பிரதேசமல்ல. வடமேற்கில் ஸிந்து, பலுசிஸ்தானம், எல்லைப்புற மாகாணம், பஞ்சாப் இவை எல்லாம் ஒரு புறமும், வடகிழக்குப் பிரதேசத்தில் வங்காளம், அஸ்ஸாம் மற்றொரு பக்கமும் உள்ளன. இவ்விரண்டு பிரதேசங்

களும்தான் பாகிஸ்தானம் என்று ஜின்னு கூறுகிருர். இவைகளுக்கு நடுவே நேபாளமும் ஐக்கிய மாகாணமும் உள்ளன. இவை பெரும்பாலும் ஹிந்துக்கள் நிரம்பிய பிரதேசங்கள். ஆப்கனிஸ்தானும் ருஷ்யாவும் பாகிஸ்தானத்திற்கு அருகிலுள்ள பிரதேசங்கள். ருஷ்யாவுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் சண்டை ஏற்படுமானுல், ருஷ்யப் படைகள் ஈரானுக்குள் புகுந்து பர்ஷியன் விரிகுடா வழியாகப் பலுசிஸ்தானம், ஸிந்து இம்மாகாணங்களை அடையும். மற்றுமொரு படை ஆப்கானிஸ்தான் வழியே எல்லைப்புற மாகாணத்திற் புகுந்து பஞ்சாபை அடையும். எனவே இந்தியாவின் எல்லைப்புற வாயில்கள் பாகிஸ்தான் கையில் போய் விடுகின்றன. பாகிஸ்தானத்தின் வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்திருக்கும் நமது பந்தோபஸ்து. ருஷ்யா இன்று இஸ்லாமிய நாடுகளின் ஒத்துழைப்பை விரும்பி உறவாடி வருகிறது. ஜின்னுவின் பாகிஸ்தானத்திற்கு ருஷ்யா இன்று ஆதரவு அளிக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆசியாவில் மங்கோலியா பிரதேசம், ஐரோப்பாவில் போலந்து யூகோ—ஸ்லாவியா இருப்பதுபோலப் பொம்மை ராஜ்யமாகப் பாகிஸ்தானத்தை ருஷ்யா அமைத்துக்கொள்ள முடியும். ஆப்கனிஸ்தானம், எல்லைப்புற மாகாணம், பஞ்சாப், ஸிந்து மாகாணம் இவை மறைமுகமாகவோ நேர்முகமாகவோ ருஷ்யாவின் ஆதிக்யத்திற்கு உட்பட்டுவிட்டால், இந்தியாவைத் தாக்க வேறு வசதி தேவையில்லை. இந்நிலை கூடியசீக்கிரம் ஏற்படலாம் என்று அமெரிக்காவிலுள்ள தாரக்நாத் தாஸ் என்பவர் ஒரு கட்டுரையில் எடுத்துக் காட்டியுள்ளார்.

இது நடக்கக்கூடியதல்ல என்று பலர் நினைக்கலாம். சற்று ஆராய்ந்தால் விஷயம் தெளிவாகும். ஜின்னு கோஷ்டியினர் இதை முற்கூட்டியே யோசனை செய்து வைத்திருக்கிருர்கள் என்று வங்காளப் பிரதம மந்திரியாக வரப்போகும் ஷரவாடியின் பேச்சிலிருந்து தெளிவாகும்.

"முஸல்மான்கள் தற்பொழுது விரும்புவது இந்தியாவில் இரண்டு மூலைகள். நீங்கள் பாகிஸ்தானத்தை எதிர்த்து எங்களுடன் போர் புரிந்தால், பின்னுல் அது எதில் முடியும் என்று சொல்ல முடியாது.

"பாகிஸ்தான் உங்களுடைய கடைசிக் கோரிக்கையா என்ருல், அதற்குப் பதில் கூறமுடியாது. அது முஸ்லிம்களின் தற்போதைய கோரிக்கை என்பதை மட்டுமே இப்பொழுது கூறமுடியும்."

ஸர் பிரோஷ்கான் நூன் கூறியது குட்டை இன்னும் வெளிப்படுத்திவிட்டது. "ஹிந்துக்கள் நமக்குப் பாகிஸ்தான் அளித்தால், நமது பெரிய நண்பர்களாக இருப்பார்கள். பிரிட்டிஷார் அதை அளித்தால், அவர்கள்தான் நமது நண்பர்கள் எனக் கொண்டாடுவோம். ஆனுல் இவர்களிருவரும் அளிக்காவிட்டால், ருஷ்யா அதை நமக்கு அளிக்கும்" மேலும் அவர் கூறியுள்ளது இந்நாட்டு மக்களுக்கு விழிப்பை அளிக்கக்கூடியது.

"பிரிட்டிஷாரின் செய்கையினுல் ஒரே மத்திய அரசாங்கத்தின் கீழோ அல்லது ஹிந்து ராஜ்யத்தின் கீழோ முஸல்மான்கள் வாழ்வதை எதிர்த்துச் சண்டையிட நேரிட்டால் செங்கிஸ்கான் அல்லது ஹாலக் இவர்கள் செய்த கொடுங்கோன்மை வெட்கித் தலைகுனியும்படியான செயல்கள் புரிவோம்."

இப்பேச்சுக்களுக்கிடையேதான் ஜின்னு சீமைப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியின் விவரமும் பிரசுரமாயிருக்கிறது. இரண்டு பாகிஸ்தானப் பிரதேசங்களையும் இணைக்க காரிடார் பிரதேசம் கேட்பதோடு இந்திய ராணுவத்தையும் கூறுபோட்டு, பாகிஸ்தான் பிரதேசத்திலிருந்து வரும் சேனை, ஹிந்துஸ்தானத்திலிருந்து வரும் சேனை என்பதாகப் பிரிக்கவேண்டுமென்கிருர்.

டில்லியில் கூடிய முஸ்லிம் லீக் சட்டசபை அங்கத்தினர்கள் வீராவேசத்துடன் பேசியுள்ளார்கள். எவ்வித தியாகத்தையும் செய்வதாகவும் பிரதிக்ஞை செய்துள்ளார்கள். இவற்ருலெல்லாம் காங்கிரஸ் பயந்துவிடும் என்று நினைப்பது அறியாமையாகும். இந்நாட்டில் முஸ்லிம்களுக்குச் சலுகையெல்லாம் நாட்டின் நலத்தை

அவர்கள் கருதி நன்னடத்தையாக இருந்துவரும்வரை தான். பயமுறுத்தலினால் அவர்கள் சாதிக்கக்கூடியது ஒன்றுமில்லை. வாளினால் பாகிஸ்தான் சாதித்துவிட முடியும் என்று ஒரு வீகர் கர்ஜித்தார். முஸல்மான்கள் இவ்வழியில் இறங்கினால் அவர்களுக்கு நல்ல படிப்பினை கற்பிக்கப் படும் என்பதில் சந்தேகமில்லை. வீகர்கள் இந்தியர்கள் என்று சொல்லிக்கொண்டிருந்த வரையில்தான் இந்நாட்டில் உரிமை எல்லாம். இந்தியா இந்தியர்களுக்கே. வெள்ளையனுக்கோ, துருக்கியர்களுக்கோ இது நாடல்ல. ருஷ்யாவின் உதவியையோ, முஸ்லிம் நாடுகளின் சலுகையையோ எதிர்பார்த்து இந்நாட்டு மக்களைச் சண்டைக்கு இழுப்பார்களானால் வெள்ளையனுடன் இக்கோஷ்டியினரையும், வெளியேற்றும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடும். முஸ்லிம்களுக்கு மற்ற ஜாதியினர் சளைத்தவர்களல்ல. நியாயமாக அடைய முடியாததை வலுச் சண்டையினால் முஸ்லிம்கள் அடைய எண்ணுவது மதியீனம்.

முஸ்லிம் சட்டசபை அங்கத்தினர்களின் கூட்டம் இந்நாட்டு மக்களை விழிப்படையச் செய்திருக்கும் என்பதில் ஐயமில்லை. பிரிட்டிஷ் தூது கோஷ்டியினரும் இதை நன்கு உணர்ந்து நடந்து கொள்வார்களாக!

தூது கோஷ்டியின் முடிவைச் சீக்கிரம் எதிர்பார்ப்போம்,

நீங்கள் நடத்தும் சங்கீதக் கச்சேரிகள் பொதுக் கூட்டங்களில் ஒலிபெருக்கி செவ்வனே நடைபெற

★

கும்பகோணம்
ஸவுண்ட் ஸர்வீஸ்

★

ஒலிபெருக்கி ஸெட்டுகள்தான் பொதுஜனங்களுக்குகந்த திருப்தியைக் கொடுக்கக்கூடியவை என்று கொடுமுடி ஸ்ரீமதி **K. B.** சுந்தராம்பாள் அவர்கள் சொல்லியிருக்கிறார்.

ரேடியோ, ஸினிமா தியேட்டர் ஸர்விஸிங்களும் செய்துகொடுக்கப்படும்.

N B. மின்சார வசதி இல்லாத இடங்களுக்கு எங்களிடம் பாட்டரி ஒலிபெருக்கி சாதனம் கிடைக்கும்

ஹெட் ஆபீஸ்:
மயிலாப்பூர், மதராஸ்.

"ஸவுண்ட் ஸர்வீஸ்"
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

பிரிட்டிஷ் காபினட் தூதுகோஷ்டியினரை வைஸிராய் லார்ட் வேவல் அழைத்துச் செல்லுகிறார்.

வைஸிராய் மாளிகையில் கோஷ்டியினர் ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்டுள்ளார்கள். அவர்கள் மூளையைக் குழப்புவது ஜின்னாவின் பிடிவாதமா?



மாகாண கவர்னர்கள் தூதுகோஷ்டியினருடன் பேசித் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட்டனர். இக்கவர்னர்களின் யதேச்சாதிகாரம் இனி எத்தனை நாள்? பல்லைப்பிடுங்கின பாம்புகளைப்போலத்தான் இனி இவர்கள் கதி. வெள்ளையர்கள் வெளியேறும்பொழுது இவர்கள் அப்பிரயாணிகளுக்குக் கவர்னர்களாகவிருந்து அவர்களை இங்கிலாந்துக்குக் கடத்திச் செல்வதே இனி இவர்கள் பொறுப்பு.

★

ஜின்னுவின் பாகிஸ்தான் கோட்டைக்குத் தாய்ச்சுவர் எல்லைப்புற மாகாணம். இதில் 100-க்கு 91 பேர் முஸல்மான்கள். இவர்கள் சமீபத்தில் நடந்த தேர்தலின் மூலம் தங்களுக்குப் பாகிஸ்தானில் நம்பிக்கையில்லை என்று தெளிவாகக் காட்டிவிட்டார்கள். இவர்களின் தலைவர்தான் அம்மாகாணப் பிரதம மந்திரி, டாக்டர் கான் ஸாகிப். ஜின்னுவின் கோட்டையை இவர் வெற்றி தகர்த்துவிட்டது.

★



கதம்பம்

இசை ஒளியின் திருமணம்!

பிரக்யாதிபெற்ற கிட்டப்பா கண்டத்தி விருந்து ஒலித்த சங்கீதம் இன்னும் மறையவில்லை. ஒலிப் பதிவுகள் (Records) அதை நமக்கு நினைப்பு மூட்டிக்கொண்டேயிருக்கின்றன. கிட்டப்பாவைக் கேட்டு அனுபவித்த பலருக்கு மட்டும் அவர் பெயரை உச்சரித்த மாத்திரத்தில் அவர் பாடிய கானங்கள் ஒலிப்பதிவின்றி காதுகளில் ரீங்காரம் செய்ய ஆரம்பித்துவிடுகின்றன.

ஒரு முஸல்மான் அவருடைய சங்கீதத்தில் காதல்கொண்டு அவர்பெயரைத் தாம் தயாரிக்கும் பதார்த்தத்திற்கு அளித்து ஆனந்தமடைந்துவந்தார். இப்பித்தருக்கு ஒரு புதல்வன் பிறந்தான். பள்ளிசென்று பயின்றான். ஆனால் தகப்பனார் அனுபவித்த கானம் இவனையும் ஆட்கொண்டது. கர்னாடக சங்கீதத்தில் ஆர்வம் எழுந்தது. பயிலுவித்தார் தகப்பனார். பையன் மேதையானான். வெகு சீக்கிரத்தில் புகழ் சம்பாதித்துக்கொண்டான்.

கொஞ்ச காலமாக ஸபா மேடைகளில் தோன்றுவது இவ்வாலிபரே. நல்ல ஜாதி முஸல்மானானதால் வாக்கில் ஸரஸ்வதியின் அருள் அமைந்துவிட்டது. வாக்குச் சுத்தமும் லயதாள ஞானமும் ஒருங்கே கூடிவிட்டபடியால் இவ்விளைஞரின் கானம் அரிய இசைவிருந்தென மக்கள் கருத ஆரம்பித்தார்கள். இன்று எங்கும் இவ்விளவாலிபருக்கு வரவேற்பு. சமீபத்தில் இவர் சங்கீத மணத்துடன் திருமணமும் கலந்தது. ரமீஜாபீபி இவருடைய ஹிருதய ராணி ஆனார். இத்திருமண வைபவம் மேலக் காவேரியில் இனிது நடந்தேறியது.

இவ்வாலிபர்தான் இசை ஒளி A. D. சுல்தான். இவருக்கு நமது மனப்பூர்வமான வாழ்த்துக்களை அளிக்கிறோம். இவர் சங்கீத ஞானம் மேலும் மேலும் வளர்ந்தோங்க எல்லாம் வல்லவன் அருள்புரிவாராக!

பைத்தியக்காரரின் பிதற்றல்!

தை பிறந்தவுடன் மாப்பிள்ளை மார்க்கெட்டில் விசேஷ பரபரப்புக் காணப்படுகிறது. டிசம்பர் பிறந்தவுடன் குதிரைப் பந்தயப் பித்தர்கள் குஷியுடன் கிளம்புகிறார்கள். ஒவ்வொரு 'சீஸனில்' ஒவ்வொருவருக்கு உற்சாகம்காணப்படுகிறது. அதுபோல் கொடிய நோய்கள் கிளம்பி, பரவ ஆரம்பித்தால் டாக்டர்களுக்கு உற்சாகம் ஏற்படுவது இயற்கையே! டைபாயிட் சீஸன், இன்புளுயன்சா சீஸன் என்றால் டாக்டர்கள் உண்ணார், கண்துஞ்சார், கருமமே கண்ணாய் அலைவர். பொதுஜன பரோபகாரத்திற்காகவா டாக்டர்கள் இவ்வாறு அல்லல் படுகிறார்கள்? ஸ்ரீதேவியின் பரிபூரண அருளைப் பெற!

டாக்டர்கள் பொதுஜனங்களுக்கு ஊழியர்களாகத் தங்களை மதித்துப் பணத்தைப் பிரதானமாகக் கருதாமல் உழைக்கவேண்டுமென்று உபதேசம் செய்யப்படுவதை யாரும் நம்புவதில்லை.

இந்நிலையில் 'உலகப் பிரசித்திபெற்ற அறிவாளி' என்ற பட்டம் பெற்றுள்ள ஜார்ஜ் பிர்னாட்ஷா 'டைம்ஸ்' பத்திரிகையில் எழுதியுள்ளதைக் கவனிக்க வேண்டுகிறோம்.

"டாக்டர்கள் தனியாகத் தொழில் நடத்தி அந்தந்த வியாதிகளுக்குப் பணம்வசூலிப்பது என்ற முறையிருப்பதால், வியாதி வரவேண்டுமென்ற விஷயத்தில் டாக்டர்களுக்குச் சிரத்தை ஏற்படுகிறது! இந்த முறையை டாக்டர்கள் கைவிடவேண்டும். இதற்குப் பதிலாக ஒவ்வொரு டாக்டரும் ஒவ்வொரு குடும்பத்தாரிடமிருந்தும் வருஷத்துக்கு இவ்வளவு எனப்பணம் பெற்றுக்கொண்டு, அந்தக் குடும்பத்தை வருஷம் பூராவும் சிகிச்சை செய்து காப்பாற்ற ஏற்பாடு செய்யவேண்டும். வியாதி வராமல் தடுப்பு முறைகளை உபதேசிக்கவேண்டும். ஸ்வீடன் தேசத்தில் இப்படிப்பட்ட முறை இருக்கின்றது."

இது டாக்டர்கள், பொதுமக்கள், எல்லோரும் சிந்திக்கவேண்டிய அரிய விஷயம்.

The Time Factor—

in the ARMY



அழுத்தமான வேலைப்பாட்டிற்கும் நம்பிக்கைக்கும் வெஸ்ட் எண்டு கடிகாரத்தை எல்லோரும் மிகவும் விரும்புகிறார்கள்.

மாட்ச்லெஸ்—புதிய வடிவம்
நிக்கல் ஸிலவர் கேஸ் .. .. ரூ. 50

in the NAVY



ஸில்லிடார்
கிரிஸ்டல்
வடிவம்

நிக்கல்
கேஸ்
ரூ. 49

கால அளவு—

ராணுவத்திலும், கப்பற்படையிலும்!

யுத்த காலத்திலும் சமாதான காலத்திலும் எண்ணிக்கையிலடங்காத ஆயிரக்கணக்கான வெஸ்ட் எண்டு கடிகாரங்கள், ராணுவம், கப்பற்படை, விமானப்படை இதிலுள்ளவர்களுக்கும் மற்றும் பொது ஜனங்களுக்கும் விற்கப்பட்டுள்ளன. எல்லோருக்கும், அவர்கள் எந்த நெருக்கடியான வேலையில் ஈடுபட்டிருப்பினும், அதி நுட்பமாக வேலை செய்து, எவ்வித சீதோஷ்ண நிலையையும், இதர உபாதிகளையும் சட்டை செய்யாது இக் கெடிகாரங்கள் தன் புகழை நிலைநாட்டியிருக்கின்றன. நீங்களும் இப் படையினரைப் பின்பற்றி, **வெஸ்ட் எண்டு** கடிகாரமே வாங்குங்கள். சீக்கிரத்தில் எல்லோருடைய பொருள் சக்திக்கும் விருப்பத்திற்கும் ஏற்றவாறு ஏராளமான கடிகாரங்கள் இறக்குமதியாகும்.

வெஸ்ட் எண்டு வாட்ச் கம்பெனி, பம்பாய் & கல்கத்தா

WEST END WATCH Co.

BOMBAY **CALCUTTA**

அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்

ராமய்யா

உணவுப் பஞ்சம் நிச்சயமாகவே வந்துவிட்டது என்று கருதி, சர்க்கார் அநேகவித கட்டுப்பாடுகளையும் நிபந்தனைகளையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவைகளுள் முக்கியமானவை என்னவென்றால் நிலத்தில் விளையும் தானியங்கள் எல்லாவற்றையும் சர்க்காருக்கு ஒப்புவித்துவிடவேண்டும் என்பது ஒன்று. மற்றொன்று, சாப்பாடு விஷயமாக எந்தப் பொதுக்கூட்டத்திலும் முப்பது ஆட்களுக்குமேல் திரளக்கூடாது என்பது. இன்னும் ஒன்று, உணவுப் பொருள்களில் சேதாரம் என்பதே கூடாதென்பதை உத்தேசித்து ஓட்டல்களிலும் போஜன சாலைகளிலும் மூன்றுவித வஞ்சனங்களே வடிக்கவேண்டும் என்றும் விதித்திருக்கிறார்கள்.

இதையெல்லாம் கவனித்தபின் அம்மாஞ்சி, "பேஷ், பேஷ், நிரம்பவும் சரி. ஆனால் உணவுப் பஞ்சம் போலவே நல்ல சங்கீதத்திற்கும் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறபடியால் இதே மாதிரியான நிபந்தனைகள் சங்கீத சம்பந்தமாகவும் ஏற்படுத்தினால் நன்றாயிருக்குமே" என்கிறான். இதைக் கேட்டு நான், "சங்கீதத்தில் பஞ்சம் என்கிறாயே! கச்சேரிகளுக்கு ஜனங்கள்தான் திரண்டு திரண்டு ஓடுகிறார்களே! ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு மூலையிலும், ஒவ்வொரு வாரத்திலும் கச்சேரிகள் நடைபெறுகின்றனவே, இன்னும் பஞ்சம் எங்கு, எப்படி" என்று தர்க்கித்தேன். அதற்கு அம்மாஞ்சி சொன்னதாவது:—'சமுத்திரம் முழுதும் தண்ணீர் இருக்கிறது, ஆனாலும் மாலுமிக்கு நாட்டிலிருந்து உப்பில்லாத் தண்ணீர் எடுத்துச் சென்றாலல்லவோ தாக சாந்தி ஆகும்! அது போலவே சபைகளும் கச்சேரிகளும் ஏராளமாய் இருக்கலாம். ஆனால் அவைகளில் கிடைக்கும் சங்கீதம் உப்புக்கரிக்கும் தண்ணீர் போலல்லவோ இருக்கின்றன! அகில இந்திய ரேடியோவின் ஆதரவில் பலவித நிகழ்ச்சிகள் நடக்கலாம்! ஆனால் அந்த ஆதரவில் கிடைக்கும் சங்கீதம், வீதி ஓரத்தில் ஓடும் வாய்க்காலில் உள்ள அழுக்கு ஜலம் போலல்லவோ இருக்கிறது! சுத்தமான சங்கீதம் என்பது பஞ்சத்தில்தான் அடிபட்டுக் கொண்டிருக்கிறது! அதைச் சேமித்து, போஷித்து, ரேஷன் செய்து, ஜனங்களுக்கு வேண்டிய அளவுக்குக் கிடைக்க வைப்பது அவசியமான காரியம் ஆகும்."

"எந்தவிதமாக இதைச் செய்யலாம் என்பாயோ, சொல்லுகிறேன் கேள். சங்கீத வித்வான்களில் இரண்டு ரகம் உண்டு. உணவுப் பொருள்களில் ரேஷன் செய்யப்பட்ட பொருள்கள் (rationed articles) என்றும், இதர ரேஷன் செய்யப்படாத பொருள்கள் (other articles) என்றும் இருப்பது போலவே, அரிசி, கோதுமை, ரவை, மாவு இவைகளுக்குச் சமானமான வித்வான்கள் நல்ல முதல்தர வித்வான்கள் ஆவார்கள். சுத்த சங்கீதத்தைக் கைப்பற்றினவர்களாகவும், சம்பிரதாயத்தை ஒதுக்காமல் நிர்ணயத்துடன் வித்தையை அனுஷ்டிப்பவர்களாகவும், சினிமா, டாக்கி, டிராமா, தெருக்கூத்து, சின்னமேளம், அல்லா பண்டிகை வேஷம் இத்தகைய சில்லறை விவஹாரங்களில் தலையிட்டுக் கொள்ளாதவர்களாகவும் நடந்துகொள்ளும் வித்வான்கள் பங்கீடு செய்யப்பட்ட (rationed) வித்வான்கள் ஆவார்கள்!

சில்லறை வியாபாரங்களை வைத்துக் கொண்டு வியாபகத்துடன் இருப்பவர்கள் கடலைப்பருப்பு, சர்க்கரை, போன்ற பங்கீடு செய்யப்படாத ஆனால் ஒழுங்குபடுத்தப்பட்ட (non-rationed but regulated) சாமான்கள் ஆவார்கள்.

சபைகளில் முக்கியமான சிலவற்றிற்குப் பதிவு செய்யப்பட்ட பங்கீட்டுக் கடை (registered ration shops)களுக்கு உரிய அந்தஸ்தைக் கொடுத்து அவர்கள் மூலமாகக் கச்சேரிகளைப் பங்கீடு (ration) செய்ய வேண்டும்.

அகில இந்திய ரேடியோவில் சில்லறை சாமான்கள்போன்ற விஷயங்களை மாத்திரம் வியாபாரம் செய்யவேண்டும்; அதாவது, தாள வாத்தியம், நவீன சங்கீதம், சங்கீதாப்பியாசம், லயசித்திரம், கவிதாவாசகம், ஹாஸ்ய நாடகம், அசட்டுப் பரிகாஸம், முரட்டுப்பேச்சு, துஷ்ட சகவாசம், பிராண சங்கடம், இவைபோலுள்ள சாமான்களையெல்லாம் நியாய விலைக் கடைகள் (fair price shop பத்ததியில் வியாபாரம் செய்ய வேண்டும்.

ஒவ்வொரு வீட்டிலும் உள்ள நபர்களுக்கு அவரவர்களுடைய கலாபிவிருத்திக்குரிய

மாதிரி பங்கீட்டுக் கூபன் (ration coupon)கள் கொடுக்கவேண்டும்! புழுங்கல் அரிசி அப்பியாஸமானவர்களுக்கு அந்த அரிசியே கொடுப்பதுபோல, அசடுகள் நிறைந்த வீடுகளுக்கு அகில இந்திய ரேடியோ கூபன்களையே கொடுக்க வேண்டும்! கைத்தொழில் வேலை செய்பவர்களுக்கு அதிகப்படி அரிசி கொடுப்பது போல, நல்ல சாதுர்யமான நபர்களுக்கு முதல்தர சங்கீத கூபன்கள் சிறிது அதிகமாகவே கொடுக்கலாம்.

இவைகளெல்லாம் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரக்கூடிய யோசனைகள் ஆகுமா என்று கேட்பீர்களோ, ஆகாதுதான்! ஆனாலும் கூடிய சீக்கிரத்தில் உணவுப் பஞ்சம் அதிகரித்தால் பலவித சங்கடங்கள் ஏற்படுவதோடு பலவித நன்மைகளும் சம்பவிக்கலாம் என்கிற சமாதானத்தில் இருக்கிறான் அம்மாஞ்சி! பஞ்சம் ஏற்பட்டால் கலியாணங்கள், திருவிழாக்கள், சம்மேளனங்கள் எல்லாவற்றிலும் ஜனக் கூட்டம் குறையலாம்; சபைக் காரியதரிசிகளும் சங்கீதத் தொண்டில் ஈடுபட்டவர்களும், சங்கீத வித்வான்களும், பக்க வாத்தியக்காரர்களும், பின் பாட்டுக்காரர்களும், செல்லப் பெட்டியையும் கூஜாவையும் எடுப்பவர்களும், அனைவர்களும் காலையிலிருந்து சாயந்திரம் வரையில் தினந்தோறும் அரிசி ஒரு நாள், பருப்பு இரண்டாவது நாள், சர்க்கரை மூன்றாவது நாள், இந்த மாதிரி நாளொரு ஸாமானும் பொழுதொருப் பங்கீட்டுக் கூபனும் (ration) கூபனும் கைப்பற்றுவதிலேயே திண்டாடிக்கொண்டிருப்பார்களாதலால், மேற்கூறிய காரணங்களைக்கொண்டாவது அவர்களுடைய சேஷ்டைகளெல்லாம் சிறிது குறையுமல்லவா— "Out of evil cometh forth Good", என்கிறான் அம்மாஞ்சி!

அகில இந்திய ரேடியோ விஷயங்கள் வரவர வினோதமாய்க்கொண்டுவருகின்றன. சமீபமாகப் புதிய விதி ஒன்று ஏற்படுத்தியிருக்கிறார்களாம். என்னவென்றால், பாடுகிறவர்களெல்லாம் முன்னதாகவே ஒரு முறை வந்து ஒத்திகை (rehearsal) செய்துவிட்டுப் போகவேண்டுமாம்; அதற்காக இதுவரை ஒருமணிநேரம் பாடிக்கொண்டிருந்தவர்களுக்கு இப்பொழுது அவகாசம் பாதியாகக் குறைக்கப்பட்டிருப்பதாகவும், பாக்கிப் பாதிநேரம் ரிஹர்ஸல் விஷயமாகச் சரிப்படுத்திக்கொள்ளுவதாகவும் புதிய விதி உண்டாயிருக்கிறதாம். இந்த ரிஹர்ஸல் ஆகப்பட்டது, பாடப்போகும் தினத்தன்றே, இரண்டு மூன்று மணி நேரங்களுக்குமுன் வைத்துக்கொண்டிருக்கிறார்களாம். வெகு கருக்காக நிகழ்ச்சிகள் நடக்கவேண்டும் என்ற கருத்துடன் இந்த விதியை ஏற்படுத்தியிருக்கலாம். ஆனாலும் இதிலுள்ள அசந்தர்ப்பங்களை (அம்மாஞ்சியின் அபிப்பிராயப்படி) கவனியுங்கள். (1) ஒரு நிகழ்ச்சிக்காக ஒருமுறை ரேடியோ நிலயத்துக்குப் போவதற்குப் பதிலாக இரண்டு முறை போகவேண்டியிருக்கும்; அல்லாமற்போனால், ஒரு நிகழ்ச்சியை ஒரு மணிநேரத்தில் முடித்துக்கொண்டு வருவதற்குப் பதிலாக, நான்கு அல்லது ஐந்து மணிநேரம் நிலயத்தில் சென்று காத்துக்கொண்டிருக்கவேண்டும்; ஏனென்றால் நிகழ்ச்சி இரவு 8-மணிக்கு என்றால் ரிஹர்ஸல் சாயந்திரம் நான்கு மணிக்கு இருக்கும். ஆதலால் சாயந்திரம் நான்கு மணி முதல் இரவு 9-மணி வரையில் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்க வேண்டியதுதான். (2) இரண்டு ராகங்களும் நான்கு உருப்படிகளும் கச்சிதமாகவும், ஆத்மார்த்தமாகவும் ரேடியோ ஸ்டூடியோவில் உட்கார்ந்து பாடுவதே ஒரு பிரயாசமான காரியம்; கடியாரத்தைப் பார்த்துக்கொண்டு, வாயையும் மூக்கையும் பொத்திக்கொண்டு, தும்மாமலும் இருமாமலும், தொண்டையைக் கனைக்காமலும், வாய்பாடு ஒப்பிப்பதுபோல் பாடித் தள்ளிவிட்டுவருவதே ஒரு ஆயாசமான காரியமாக இருக்க, இந்தக் கர்மத்தை இரண்டுமுறை ஒரே நாளில் ஒரே மாதிரியாகச் செய்வதென்றால் எவ்வளவு அவலக்ஷணமாக இருக்கிறது என்று நீங்களே யோசியுங்கள். ஒரு முறை சாப்பிட்டபின், கையைக்கொடுத்து வாந்தி எடுத்துவிட்டு மற்றொரு முறை சாப்பிடச் செய்வதுபோலல்லவோ இருக்கிறது. கர்நாடக சங்கீதம் என்பது மனோதர்ம சங்கீதம் என்பார்கள். இந்தச் சங்கீதப் பயிற்சியிலும் பிரயோகத்திலும், நல்ல ரசிகர்களுக்கு அனாவசிய நிபந்தனைகளும் நிர்ப்பந்தங்களும் இல்லாமலிருந்தால்தான் சுத்தமாகவும் ரசித்தும் பாடுவார்கள் என்பது கொள்கை. அகில இந்திய ரேடியோ செய்வது இதற்கு நேர் விரோதமாயிருக்கிறது. முப்பது நிமிஷத்தில் பாடவேண்டும், அதில் உருப்படிகள் ஜாப்தா மூன்று மாதங்களுக்கு முன்னேயே கொடுத்துவிடவேண்டும்; ஜாப்தாவில் இருபது உருப்படிகள் குறிக்கவேண்டும்; அதில் அவர்கள் பொறுக்குவார்கள்; உழக்கில் கிழக்கு மேற்கு பார்ப்பார்கள்; தமிழும் இருக்கவேண்டும், தெலுங்கும் வேண்டும் பொறுக்கின ராகங்களும் அன்று வேறு நிகழ்ச்சியில் இருக்கக் கூடாது; இவையெல்லாவற்றையும் முன்னதாகவே வந்து ஒருமுறை பக்கவாத்தியங்களுடன் பாடிக் காட்டவேண்டும்; பிறகு

திருக்கழுக்குன்றம் பக்ஷிமாதிரி ரேடியோ நிலயத்தில் ஒரு மூலையில் கடலைப் பட்டாணியோ அல்லது முந்திரிப்பருப்போ கொரித்துக்கொண்டிருக்கவேண்டும்; காலா காலத்தில் குறிப்பிட்ட நேரத்தில் உள்ளே சென்று திரும்பவும் முன்னமே பாடியதைப் பாடிக்கொட்டவேண்டும்; அதற்குப் பிறகு அவர்கள் கொடுக்கும் காசை வாங்கிக் கொண்டு வெளியேறவேண்டும். இதெல்லாம் என்னஸார்? கேவலம் குரங்காட்டித்தனமாயல்லவோ இருக்கிறது என்கிறான் அம்மாஞ்சி!

ரேடியோ அதிகாரிகள் கொடுக்கும் பிச்சைக் காசையும், அவர்களுடைய ஆதினத்தில் பாடுவதால் விளையும் பிரசாரத்தையும் கோருபவர்களுக்கு மாத்திரமே அவர்களுடைய அட்டகாசங்கள் பிடித்தமாயிருக்கும். ஆத்மார்த்தமாகச் சங்கீதத்தில் ஈடுபட்டவர்கள் இந்த நிர்ப்பந்தங்களுக்கு உடன்படமாட்டார்களே? ஆதலால் உயர்தரமான சங்கீதத்துக்கும் ரேடியோ நிலயத்துக்கும் வெகு தூரமாகவே இனி இருக்கும் போலிருக்கிறது.

எல்லா நிகழ்ச்சிகளும் ஒழுங்காக நடக்க வேண்டும் என்ற ஆசையில் எல்லாவற்றிற்குமா ரிஹர்ஸல் செய்வது? இதில் ஒரு விவஸ்தை வேண்டாமா? சங்கீத நிகழ்ச்சிகளுக்கு ரிஹர்ஸல் வேண்டுமென்று விதித்தால், கலியாணத்துக்கும் ஒரு ரிஹர்ஸல் வேண்டியதுதான்; கலியாணத்தில் சாப்பிட வருபவர்களுக்கெல்லாம் ஒரு ரிஹர்ஸல் சாப்பாடு வைத்து, பிறகு கையைக் கொடுத்து வாந்தி செய்யச்சொல்லி, திரும்பவும் சாப்பாடு போடவேண்டியதுதான்; இப்படி யோசனை செய்துகொண்டே போனால், ஸ்மசானத்துக்குக்கூட ஒரு முறை முன்னதாகவேபோய் ரிஹர்ஸல் செய்துவிட்டு வருவது நலம் என்பார்கள் போலிருக்கிறது ரேடியோ அதிகாரிகள். சுத்த அஸந்தர்ப்பக் குடுக்கைகளாயிருக்கிறதுகளே ஸார், என்கிறான் அம்மாஞ்சி.

* * *

மதராஸில் உள்ள சங்கீத சபையோர்கள் அனைவரும் எந்தெந்த விஷயங்களில் போட்டிபோட்டாலும் ஒரு விஷயத்தில் மாத்திரம் ஏகோபித்து ஒரே அபிப்பிராயத்துடன் இருக்கிறார்கள். அது என்னவென்றால் கார்ப்போரேஷனுக்குக் கொடுக்க வேண்டிய என்டர்டெயின்மெண்டு வரி

கம்பன் கவியமுதம்

17— அறிஞரின் கட்டுரைகள் —17

1.	கம்பர்	எம். ராதாகிருஷ்ண பிள்ளை, பி. எ., பி. எல்,
2.	கம்பர் க்டவுட் கொள்கை	ராவ்சாஹிப் வெ.ப. சுப்ரமணியமுதலியார், G.B.Vc.
3.	கம்பராமாயணக் காவிய அமைப்பு	ஏ. ஸி. பால் நாடார்
4.	கம்பன் கனவு	சா. கணேசன்
5.	கைகேயி	கே. ஞானம்பாள், எம். ஏ.
6.	இராமர் தன்மையும் இலக்குவன் வெம்மையும்	வித்துவான் கா. நயினார் முகம்மது
7.	கம்பர் கவித்திறம்	பண்டித வித்துவான் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்
8.	சேக்கிழாரும் கம்பரும்	வித்துவான் மா. இராசமாணிக்கம் பிள்ளை. M O.L., L.T.
9.	கம்பனது கதாநாயகி	வித்துவான் மு. சண்முகம் பிள்ளை
10.	பாடற் பண்பு	ஏ. எஸ். ஞானசம்பந்தம், எம். ஏ.
11.	மாய மான்	பெ. நா. அப்புஸ்வாமி, பி. ஏ., பி. எல்.
12.	உள்ளம் குளிர்ந்தது	மு. வரதராசனார், எம். ஓ. எல்.
13.	காவியத்தில் கண்ட கம்பர்	ரா. ஸ்ரீ தேசிகன், எம். ஏ.
14.	நாம் வெறுக்கும் பாத்திரம்	ந. சோமயாஜுலு
15.	தருமத் தம்பி	அ. முத்துசிவன், பி. ஏ., (ஆனர்ஸ்)
16.	பரதன் குண நலம்	ஸ்ரீமதி மா. சுந்தரா
17.	கம்பன் கலைவனம்	புத்தனேரி சுப்பிரமணியம்

சென்னை, கம்பர் கழக வெளியீடு

விலை ரூ. 2—8—0 : : தபால் செலவு தனி

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை

யைக் குறித்து. ஐயோ, நாங்கள் இந்த வரியைக் கொடுக்கமாட்டோமே! இந்த வரி எங்களிடமிருந்து வசூல் செய்வது அநியாயமல்லவா? நாங்கள் இரவும் பகலுமாகச் சுத்த சங்கீத அபிவிருத்திக்காக வல்லவோ பாடுபடுகிறோம்? இந்தப் புனிதமான கைங்கரியத்தை நாங்கள் செய்யும்போது எங்களிடமிருந்து இந்தப் பணம் வசூல் செய்வது நியாயமா, முறையா, தருமமா? என்கிறார்கள். இந்த விஷயத்தைப்பற்றி அம்மாஞ்சியுடன் நான் பேசிக்கொண்டிருக்கையில் அவன் "சங்கீத சபையோர்களின் புலம்பல்" என்ற ஒரு விருத்தத்தைக் கவனம் செய்து ராகமாலிகையாகப் பாடினான். பின்வருமாறு:

கேதாரகௌளம்: கர்னாடக சங்கீத அபிவிருத்திக்கும் பரதநாட்டியக் கலாஸ்தாபனத்துக்கும் தொண்டுசெய்யும் புண்டரீகாட்சர்களன்றோயாம்? எம்மிடமிருந்து வரியைப் பறிப்பது முறையோ, தருமந்தானோ?

பிலஹரி: பாமர ஜனங்களிடமிருந்தல்லவோ நாங்கள் பண வசூல் செய்கிறோம்? அதைப்பற்றி உமக்கென்ன, சர்க்கார் உத்தியோகஸ்தினரே? உமக்குரிய கௌரவப்படி யாம் உம்மை உயர்ந்த வகுப்பில் பயந்து அமர்த்தவில்லையா? சொல்லும் ஐயே!

தன்னியாசி: உம்முடைய சிசுக்கள் ஆடவும் பாடவும் அவர்க்குரிய வசதிகளை யாம் செய்யவில்லையா? எம்முடைய வித்வான்களை உயர்த்தவும் தாழ்த்தவும் உமக்கே யாம் சக்தி அளிக்கவில்லையா?

சிம்மேந்திரமத்திமம்: ஞானமும் அனுபவமும் பெரியோரிடமிருந்தும், அவர்களை ஒதுக்கி உம்மையல்லவோ உயர்த்தினோம். இதையும் மறந்து நீர் வரியை விதித்தால் யாம் யாரிடம் புலம்புவது உத்தியோகஸ்தரே?

அடானா: நல்லமாதிரி சொல்லுகிறோம், வெல்லம்போட்ட வாக்குகளால்! இனி நல்ல குணத்துடன் எமக்கு உதவிபுரியாமல் போவீர்? கேளும் உமக்கினி மாலை கிடையாது, முன்வரிசை கிடையாது. கும்பிடு கிடையாது, கட்டணமற்ற பாஸ் கிடையாது. போமய்யா, நீர் போமய்யா!

* * *

நமது மதராஸ் ராஜதானியில் ஒரு வேடிக்கையான விஷயம் உண்டு; நீங்கள் எல்லாரும் கவனித்திருக்கலாம். என்னவென்றால், கவர்ன்மெண்டு உத்தியோகத்தில் இருக்கிறார்களே, அவர்களில் பெரும்பாலாருக்கும் ஒரு பிரத்தியேகமான படாடோபம் உண்டு. சின்ன ஊர்களில் மோட்டார் பஸ் நிற்குமிடங்களில் கவனியுங்கள், ஒரு சப்மாஜிஸ்ட்ரேட் அல்லது சப்ரிஜிஸ்ட்ரார்கூட சரி, வந்தால், டிரைவர் பக்கத்தில் முன் இடத்தில்தான் உட்காருவார். யாராவது முன்னேயே அமர்ந்திருந்தாலும், டிரைவர் அவரை இறக்கிவிடுவார். வெளியூர்களில் டீ பார்ட்டி, மீட்டிங்கு எது நடந்தாலும், அந்த அந்த ஊருக்குப் பெரிய உத்தியோகஸ்தன், காலதாமதமாகி வந்தாலும், எப்பேர்ப்பட்ட பிரபுக்கள் அமர்ந்திருந்தபோதிலும், முன்வரிசையில்தான் வந்து உட்காருவான். முந்திக்கொள்ளவேண்டும் என்கிற கொள்கைதான் உத்தியோகஸ்தனுக்கு. ஆனால், எல்லாவற்றுக்கும் முந்திக்கொள்ளமாட்டான். படாடோபத்துக்கும், கௌரவத்துக்கும் மாத்திரம்தான் முன்வருவான்! பணம் கொடுப்பதற்கு முந்திக்கொள்ளுவானோ? ஐயோ! தப்பு, தப்பு! தொடமாட்டான், ஸ்வாமி! கையால்கூட தொட்டுவிடமாட்டான், சந்தா லிஸ்டை! அப்போது மாத்திரம், "கொண்டுபோப்பா! பெரிய வாளிடத்திலே கொண்டுபோ! எங்கிட்டே முன்னே வருகிறாயே!" என்பான். மாலை போடவந்தால் அந்த மாதிரி சொல்லுவானோ? ஹி, ஹி, என்று இளித்துக்கொண்டு, கழுத்தின்மேல் விழப்போகும் மாலையைக் கையில் வாங்கிப் போட்டுக்கொண்டுவிடுவான்! சென்னை மாநகரிலும் இந்த மாதிரி ஆட்கள் ஏராளமாயிருக்கின்றனர். அக்கிராஸனம் வகிப்பதற்கும், சபாநாயகர்களாயிருப்பதற்கும், அசட்டுத்தனம் செய்வதற்கும், அசந்தர்ப்பக் குடுக்கைகளாய் உளறுவதற்கும், வேண்டிய உத்தியோகஸ்தர்கள் இருக்கின்றனர். இவர்களில் ஒருவரை எனது நண்பர் ஒருவர் பத்துப்பேர் நடுவில் பகிரங்கமாய்க் கேட்டார், "என் ஸார்? நீங்கள் என்ன படாடோபாச்சாரியாருடைய பிள்ளையாமே? உம்மைப் பற்றி நான் ரொம்பபேர் சொல்லிக் கேழ்விப்பட்டேன். எல்லாக் காரியத்துக்கும் நீர் முந்திக்கொள்வீராமே. மிகவும் தைரியசாலி என்கிறார்களே! சின்ன வயதிலேயிருந்தே உமக்கு இந்த ஆசையாம்! ஒரு கலியாணத்துக்கு நீர் போனால், அங்கு கலியாணப் பிள்ளை மணக்கோலத்துடன் இருப்பதைக் கண்டால் உமக்குக் கண் உறுத்துமாம்! சகிக்கமாட்டீர்களாமே! (உத்தியோகஸ்தர் இதுவரை வெகு சந்தோஷமாகப் பல்லைக் காட்டிக்கொண்டு அனுபவித்துக்கொண்டிருந்தார்) அதுபோலவே ஒரு இழவுக்குப் போனால், அங்கே கிடக்கும் பிரேதத்தைக் கண்டும் அங்கலாய்ப்புப் படுவீரோ? பிரதான புருஷனாயிருக்கவேண்டும் என்கிற ஆசை அங்கும் வருமோ, ஸ்வாமி"— உத்தியோகஸ்தர் இருந்த இடம் தெரியாமல் ஓடிவிட்டாரே, பாரும்!



மாமியார் அவளை அதிக
-பக்ஷமாக நடத்துகிறாள்

ஏனெனில்

அவள் டாம்கோ கூந்தல்
தேங்காயெண்ணெயும்
ஷாம்பூவும் உபயோகித்து
— வருகிறாள்! —

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்

"டைரக்டர் வாஸ்"

டாக்டர் வே. ராகவன்

'டைரக்டர் வாஸ்' என்ற நம் கதாநாயகர் (Hero) 'வாஸ்' (Was) கோஷ்டியைச் சேர்ந்துவிட்டவரா, அல்லது 'இஸ்' (Is) கோஷ்டியில் இருந்துவருபவரா என்ற ஐயம் நம் வாசகர்களுக்கு முதலிலேயே எழலாம். கதை எழுதுபவருக்கு இவ்வையத்தை முழுதும் தீர்த்துவைக்க முடியவில்லை. ஏனெனில், அவர் அடியோடு இல்லாமலேயே போய்விடவுமில்லை; எப்படி இருக்கவேண்டுமோ, தாம் எப்படி இருந்திருக்கவேண்டுமென்று திட்டம் போட்டுக்கொண்டாரோ, அதுபோல் இருக்கமுடியவுமில்லை; ஆதலால் இருந்தும் இல்லாதவர் என்றும் சொல்லலாம்.

இரண்டாவதாகத் தோன்றக்கூடிய ஸந்தேகம் அவருடைய பெயரைப்பற்றியிருக்கலாம். அதைத் திர்த்துவிடலாம்; 'டைரக்டர்' என்பதால் அவர் ஏதோ பெரிய பாங்கிலோ, கம்பெனியிலோ நிர்வாஹத்தில் டைரக்டர் என்று ஒருவரும் நினைத்துக் கொள்ளக்கூடாது. முதலில் பேசாமல் அசைந்த படத்தையும், பின்பு பேசும் படத்தையும் பிடிக்கும் கலைத்தொழிலில் சம்பந்தப்பட்ட 'டைரக்டர்'. 'வாஸ்' என்பது ஆங்கிலப்படுத்தப்பட்ட பெயர்; முழுப்பெயரோ ஏழுமலையானின் திருநாமம்.

இப்பொழுது யார் யாரோ பட டைரக்டர்களாக ஏற்பட்டுவிடுகிறார்கள். பணமுள்ள முதலாளி ஒருவர் முதலில் படமெடுப்பவர் ஒருவருக்கு நெருக்கடியொன்றில் 'ஒத்தாசை' செய்கிறார்; பின் 'பட விநியோகம்' என்ற 'Distribution' தொழிலில் ஈடுபடுகிறார்; பின் படக்கொட்டகை (Theatre) ஒன்று தனக்கே ப்ரத்யேகமாய் இருந்தால் தேவலை என்று தோன்றுகிறது; அதன்மேல் நாமே பிடிப்போமே என்று 'ஸ்டுடியோ'வில் இறங்குகிறார்; நாளடைவில் அந்தப்பாட்டு இந்த ராகத்திலிருக்கவேண்டும், வசனத்தில் அந்த இடத்தில் இப்படிப் போட்டால் நன்றாயிருக்கும், அவள் மேலாடை சற்று இப்படி இருந்தால் நல்ல 'எப்பக்ட்' (efect) ஏற்படும் என்று நடுநடுவே சொல்லவாரம்பிக்கிறார். படம் ஓடும்போது ப்ரபலஸ்தரான தம் நண்பர்களில் பலரைக் கோஷ்டி கோஷ்டியாய் அழைத்துப்போய் "அதைக் கவனி, எப்படி இருக்கிறது?" என்றுதாம் கைவைத்த விடங்களைப் பற்றிக்கேட்க, அவர்கள் ஸ்னேகத்தின் மேன்மையைக் கொடுத்துக்கொள்ள இஷ்டமில்லாமல், அவருடைய மேதையைப் (ஜீனியஸ்) புகழ்கிறார்கள். அடுத்த படம் அவரே 'டிரைக்ட்' செய்துவிடுகிறார். இப்படியே எழுத்தாளரிலிருந்து டைரக்டர், நடிகரிலிருந்து டைரக்டர் என்றெல்லாம் உண்டு. நடிக்கும் நக்ஷத்திரங்களிடம் செலாவணி வெகுவாயுள்ள கோஷ்டியிலிருந்தும் ஒரு டைரக்டர் நக்ஷத்திரம் தோன்றிவிட்டால் அதுவும் வியக்கத்தக்கதல்ல, ஏதோவொரு கதை; நாலு ஐந்து லக்ஷத் திட்டத்தில் வயிறொட்டி எழுத்தாளருக்கு இரண்டு மூன்று நூறுகள் கிட்டினால் பெரிது; கதையைவிட முக்யமானது ஹாஸ்ய உபகதை, அடியிலிருந்தே தொடர்ந்து வரவேண்டும்; இவற்றையெல்லாம்விட முக்யமானது நக்ஷத்திரங்கள்; பாட்டு வேண்டும், நாட்டியம் வருமானால் விசேஷம்தான்; ஆனால் மிகவும் தேவையானது 'பட-முகம்' என்ற முகவெட்டு; குறைந்தது 20,000 அடிகள்; போட்ட பணம் வாரிக்கொட்டும். டைரக்டராகும் ராஜபாட்டை இப்படிக் கிடக்க, சில அதிர்ஷ்டக் கட்டைகள் தம் ஜாதகக் கோவாறால் ரஷ்யன்—டெக்னிக்கை (Russion Technique)ப்பற்றி ஏராளமாய் புடோவ்கின் முதலியோரின் நூல்களை வாசித்துக் கொண்டு பித்துக் கொளிகளாய் அலைந்து கொண்டிருக்கின்றனவே!

நம் டைரக்டர் வாஸ் அவர்களோ இந்தச் சுலுவான நாட்களில் தொழிலுக்கு வந்தவர் அல்ல. பாவம்! அவர் படத்தில் ஈடுபட்ட காலத்தை படங்களின் பண்டைக்காலம் என்றே சொல்லலாம். கல்லூரியில் படித்து வரும்போதே அவருக்குப் படம் பார்க்கும் பழக்கம் அதிகம் ஃமனாட்டுப் படங்களல்லாமல், வடவிந்தியாவிலிருந்து வந்து சென்னையில் பல கொட்டகைகளில் ஓடிக்கொண்டிருக்கும் நாட்டுப் படங்களையும் அடிக்கடி பார்ப்பார். 'ரஞ்ஜிட்' கம்பெனியாரின் படங்களிலும், அவர்களுடைய 'கோஹர்' முதலிய நடிகைகளிடமும் அவருக்குத் தனி மோஹம்; 'இம்பீரியல்' 'சுலோசனா'வும் பிடிக்கும். படிப்பு முழுதும் முடிவதற்கு முன்னாலேயே பம்பாய் போய்விட்டார். நல்லவேளையாய் அவர் இப்படிப் பாதிப்படிப்பில் ஓடிப்போய் விட்டதைப்பற்றிவருந்து

வதற்கு நெருங்கிய உற்றார் ஒருவரும் அவருக்கில்லை.

பல வருஷங்களுக்குத் திருவல்லிக்கேணியிலிருந்து கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த சீனிவாஸன் கண்ணில் படவேயில்லை. படம் பார்க்கும் இரண்டொரு நண்பர்கள் மட்டும் ஏதோ சில படங்களில் புதிதாய்த் தோன்றும் நடிகர் ஒருவர் நம் சீனிவாஸன் போல் தோன்றுகிறார் என்று பேசிக்கொண்டார்கள். இப்படி இருக்கும்போது திடீரெனச் சென்னைப் பத்திரிகைகள் ஒன்றில் விசேஷ நிருபர் ஒருவருக்கு ஸினிமாவைப் பற்றி 'வாஸ்' என்பவர் பேட்டியளித்து, சில அபிப்ராயங்களை வெளியிட்டிருக்கும் செய்தி வெளிவந்திருந்தது. 'வாஸ்' என்ற 'சினிமா அதாரிட்டி' (authority) ஒருவர் பம்பாயிலிருந்து விஜயம் செய்திருப்பது பல 'விசிறிகளுக்கு' (Fans)த் தெரியவந்தது. கச்சத்தையும், ஜிப்பாவையும் பார்த்தால் இவர் வடக்கத்தியர் என்றே நினைப்பார்கள்; ஆனால் உண்மையில் பெயரை 'வாஸ்' என்று வெட்டி வைத்துக்கொண்டிருக்கும் நம் பழம் சீனிவாஸனே இவர்.

"நான் சென்னைக்கு வந்த காரியம் முக்யமானது. ஊமைப் படக்காலம் கழிந்தது; இனி நிழல்கள் எல்லாம் பேசிப் பாட ஆரம்பிக்கின்றன. படக் கலையிலேயே இது புரட்சிகரமான வளர்ச்சி. புதிய குணநிசயங்கள் கொண்ட நடிகர்கள் இப்பொழுது தேவை. நம் நாட்டின் அழகிய பாட்டும், பாஷைகளும் இனி இக்கலைக்குச் சிறப்பு அளிக்கப்போகின்றன. பாட்டு வசனம் எழுதுபவர்களுக்கு அரிய சந்தர்ப்பம் வாய்க்கும். பம்பாயிலே மிகப் புகழ் பெற்ற எங்கள் படக் கம்பெனியார் என் மூலம் தமிழ்ப்படம் ஒன்றை முதன்முதலாய்ப் பிடிக்கப் போகிறார்கள். அதற்கு வேண்டியவற்றை ஏற்பாடுசெய்துகொண்டு போகவே இப்பொழுது நான் சென்னைக்கு வந்திருக்கிறேன்." இதே நம் வாஸ் பத்திரிகை நிருபருக்கு அளிதத பேட்டியில் வெளியிட்ட செய்தி.

சில நாட்கள் கழிந்ததும் பத்திரிகைகளில் வாஸ் அவர்கள் தமிழ் நாடக மேடையிலேயே பிரசித்திபெற்ற 'வள்ளி' என்ற கதையைப் பொறுக்கியிருப்பதாயும், அதில்

★ மெரீ பிஸ்கோத்
Merry
BISCUITS. (ERODE) ★

மெரி பிஸ்கோத் கம்பெனி
உயர்தர பிஸ்கோத்துகள் தயாரிப்பவர்கள், ஈரோடு.

நடிக்க ப்ரபலமான ஒரு நாடகக் கோஷ்டியினரை அப்படியே முழுதும் ஏற்பாடு செய்திருப்பதாயும் செய்தி வெளியாயிற்று. பின், பம்பாயிலிருந்து வாராவாரம் 'வள்ளி' விளம்பரங்கள் பத்திரிகைகளில் வந்தன; மாதா மாதம் சிற்சில காட்சிகளின் 'போட்டோ' விளம்பரங்களும் தோன்றின. சற்றேறக்குறைய ஒரு வருஷமானதும் 'படம்' வந்துவிட்டது; வரும் கந்தஷஷ்டியன்று திறப்புவிழா; பெரிய மனிதர் ஒருவர் துவக்கி வைப்பார் என்ற விளம்பரங்கள் தோன்றின.

புதுமையின் காரணமாய் 'வள்ளி' ஊர்தோறும் திருவிழாதோறும் ஓடிற்று. இந்தப் படத்திற்காகத் தமக்குவந்த லாபத்தைக்கொண்டு நம் வாஸ் சென்னையிலேயே தம் சொந்த ஸ்டுடியோவொன்றைக் கட்டி, தமிழ்ப்பேசும் படங்களைப் பிடிக்க ஏற்பாடு செய்தார். கடற்கரை ரஸ்தாவில் தம் நக்ஷத்திரங்களில் ஒன்றுடன் பெரிய காரில் மாலைகளில் உலாவவரும் நம் வாஸ் அவர்களைப் பலர் தெரிந்துகொண்டனர்; "டைரக்டர் வாஸ்" என்று பெயரும் ஏற்பட்டுவிட்டது.

முதன் முதலாக எடுக்கவேண்டும் என்று இவர் ஆவல்கொண்டது புகழ்பெற்ற திருடர் ஒருவருடைய கதை; எப்போதுமே 'Thriller'களில் இவருக்கு ஆசை; இதற்குப் பலவிதமான Trick Photography வேலைகளும், மகா நிபுணரான காமிரா அஸாமியும் வேண்டும். தமக்குள்ள வசதிகளுக்குள் வேண்டிய ஆட்களையும், பொருள்களையும் சேகரிக்க அவருக்கு ஸௌகரியப்படவில்லை; பம்பாயிலிருந்து தமக்குக் கிடைத்த காமிரா-அஸாமியும் மூன்றாம் தரமானவன். தாமே கதை, வசனம், டைரக்ஷன், நடுநடுவே போட்டோக்காரனுக்கும் ஒலிப்பதிப்புக்காரனுக்கும் அப்படி, இப்படி என்ற உபதேசங்கள்—பாவம் என்ன செய்வார் நம் வாஸ்! எடுத்த காரியத்தை விடக்கூடாதென்ற உறுதியுடன் வேலையை நடத்தினார்.

எல்லாக் காட்சிகளையும் எடுத்துவிட்டார்; ஒரே ஒரு காட்சிமட்டும் பாக்கி. அதே அக்கதைக்கும் அப்படத்திற்கும் சிகரமாய் வாய்த்த காட்சி. "கதாநாயகியைத் துஷ்டன் (Villain) மயக்கி, காரில் வைத்துக்கொண்டு சென்னையிலிருந்து ஓடுகிறான்; தெற்கே போகும் டிரங்க் ரோடில் செங்கல்பட்டை அடைவதற்குமுன் கதாநாயகனான திருடன் (Rowdy) திடீரென மேலே ஒரு மரக்கிளையிலிருந்து காரில் குதிக்கிறான்" என்ற மயிர்க்கூச்சலெடுக்கும் காட்சி. இதைக் கடைசியில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஏற்பாடு செய்திருந்தார்.

செங்கற்பட்டு ரஸ்தாவில் 'ஷூட்டிங் ஸெட்டு' ஸித்தமாயிற்று. பலதடவைகள் 'ரிஹர்ஸ்' செய்து நன்றாய் எடுக்கவேண்டுமென்று டைரக்டர் வாஸ் நடிகர்களுக்கு நிகழ்ச்சி முறைகளைத் தெளிவாயும் விவரமாயும் பன்முறை சொன்னார். ரௌடியாய் நடிக்கும் ஆள் தன் 'பார்ட்டை' ஸரிவர மனதில் வாங்கிக்கொள்ளவில்லை என்று வாஸ் அவர்களுக்குத் தோன்றிற்று. அவருக்கு அப்போது இருந்த உற்சாகத்தில் தாமே செய்து காட்டி விடுவது என்று தீர்மானித்துக்கொண்டு, மரத்தின்மேல் ஏறி உட்கார்ந்துகொண்டு, இரண்டு பர்லாங்குகளுக்கு அப்பாலிருந்து கதாநாயகியுடன் காரை வெகு வேகமாய் விட்டுக்கொண்டு வருப்படி 'வில்லனி'டம் சொன்னார். கார் வேகமாய் வந்துகொண்டிருந்தது; என் 'டைமிங்' (Timing)ஐக் கவனி என்று கீழே நின்றுகொண்டிருக்கும் ரௌடி நடிகரைப் பார்த்துச் சொல்லிவிட்டுக் குதித்தார்; ரௌடி நடிகருடன் பேச்சுக்கொடுத்த நேரத்தில் கார் வேகமாகப் போய்விட, டைரக்டர் வாஸ் அவர்கள் 'தடீர்' என்று கருங்கல் கப்பி ரோட்டில் விழுந்தார்; ஸெட்டிலிருந்த அவ்வளவு பேரும் கூடினர்; உடனே அள்ளி, காரில் போட்டுக்கொண்டு சென்னை பெரிய ஆஸ்பத்திரிக்கு வேகமாய் வந்து சேர்ந்தனர்.

* * *

டைரக்டர் வாஸ் படம் பிடித்தது, கதையைப்பற்றிய கதையாய் போயிற்று. பாவம்! உடம்பில் பலவிடங்களில் எலும்புகள் ஒடிந்துபோயின; மண்டையில் பலத்த ரத்த காயம்; இடது பக்கம் கை, காலில் நிரந்தரமான ஊனம் வந்துவிட்டது; நடமாட்டமும், வேலையும் இனி பிறர் உதவியின்றி முடியாதென்றும் டாக்டர் சொல்லிவிட்டார். இந்தத் துக்ககர ஸம்பவத்தை வாஸ் பம்பாயில்தான் உழைத்த படக் கம்பனியாருக்குத் தெரிவிக்க, அவர்கள் இரண்டுமூன்று ஆட்களை அனுப்பி, படத்தை ஏதோ ஒரு மாதிரி முடிக்கச் சொன்னார்கள். கடைசியில் 'ட்ரயலு'க்குப் போட்டுப் பார்த்ததில் பேசும் படமாய் எடுக்கப்பட்ட இந்த பிலிம் பெரும்பாலும் மௌனமாகவே இருந்துவிட்டது! பம்பாயிலிருந்து வந்தவர் தமக்குள்ளே சிரித்துக் கொள்வதா, வருந்துவதா என்று தெரியாமல் மலைத்தனர்.

பல மாதங்கள் கழிந்தன; தம் ஸ்டுடியோவில் ஒருநாள் படுத்துக்கொண்டிருந்த

வாஸ் அவர்களுக்கு அவருடைய பழைய படக்கம்பெனியார் பம்பாயிலிருந்து கடிதமொன்றை எழுதியிருந்தனர்; அதை வாஸ் ஆவலுடன் பிரித்துப் படித்தார்.

"............வருந்தவேண்டாம்; இரண்டு மூன்று நாட்களில் நம் காரியஸ்தர்கள் உம் ஸ்டுடியோவை வேறொரு முதலாளிக்கு விற்கும் ஏற்பாட்டுடன் வருகிறார்கள். அத்துடன், நீர் நமக்கு முன் உழைத்ததற்காக மாதம் ரூ. 150 பென்ஷன் கொடுப்பதாகத் தீர்மானித்துள்ளோம்..............."

சண்டை ஸர்விஸிலிருந்து கால் கைபோய் பென்ஷன் வாங்குவதுண்டு; நம் டைரக்டர் வாஸ் படக்கலையில் ஊனமடைந்து பென்ஷன் வாங்கினார்.

பென்ஷன் வாங்கிக்கொண்டு சும்மாவிருக்கக்கூடாதா? சினிமாவின் ருசி ஆளை விடாதல்லவா? வலது கையிருக்கிறதே? உட்கார்ந்தபடி எழுதலாமே? என்று ஸினிமா பத்திரிகை ஒன்றை ஆரம்பித்து அதில் நஷ்டப்பட்டார். பின் ஸினிமா பத்திரிகைகளின் எண் அதிகரிக்க, அவற்றின் விற்பனை 'ஏஜன்ஸி' ஒன்றை ஆரம்பித்தார். அந்த ஏஜன்ஸி மூலம் சினிமா பத்திரிகைகள் தற்போது அவருடைய உடலைத் தாங்கி வருவதுமல்லாமல், தம் செய்திகளாலும், படங்களாலும் படப் பசிகொண்டு எங்கும் அவருடைய ஆன்மாவையும் திருப்திசெய்து வருகின்றன.

இப்பொழுது பலவாண்டுகள் ஆய்விட்டன. படக்கலையில் இன்று முன்னிற்கும் ப்ரமுகர்களுக்குக் கணக்கில்லை. ஆனால் ஒருவரும் ஷெ சினிமா பத்திரிகை ஏஜன்ஸி என்ற போர்டின் அடியில் நம் வாஸ் விடாது போட்டுக்கொண்டிருக்கும் 'டைரக்டர்' என்ற பிருதை யார் கவனிக்கிறார்கள், அதன் முழு அர்த்தத்தையும் யார் புரிந்துகொள்ளுகிறார்கள்?

பொதுஜன ஆதரவுக்கு நமது முன்னேற்றமே சான்று

ஏராளமான பாலிஸிகள், இடைவிடாத மகத்தான முன்னேற்றம், அதிகரித்துக்கோண்டே வரும் புகழ், பொதுஜன ஆதரவு— இவைகளுக்குப் போதிய அத்தாட்சி அடியிற் காணப்படும் புள்ளிவிபரங்கள்:-

வருஷம்	புதிய பாலிஸிகள்	மொத்த ஆஸ்தி	நடைமுதலிலிருக்கும் பாலிஸிகள்
1941	1 கோடி 1 லக்ஷத்திற்குமேல்	1 கோடி 95 லக்ஷத்திற்குமேல்	8 கோடி 36 லக்ஷத்திற்குமேல்
1943	2 கோடி 20 லக்ஷத்திற்குமேல்	2 கோடி 50 லக்ஷத்திற்குமேல்	10 கோடி 53 லக்ஷத்திற்குமேல்
1945	3 கோடி 75 லக்ஷத்திற்குமேல்	3 கோடி 30 லக்ஷத்திற்குமேல்	14 கோடி 90 லக்ஷத்திற்குமேல்

1945ல் புதிய பாலிஸிகள் பெருக்கு:— 1 கோடி 15 லக்ஷத்திற்குமேல்

வருடா வருடம் இந்தப் பெரிய தேசீய ஸ்தாபனத்தில்

போது ஜனங்கள் பாலிஸி எடுக்கிறார்கள். அத்துடன் பெருவாரியான பழைய பாலிஸிதார்களும் மேலும் மேலும் புதிய பாலிஸிகள் எடுத்துக்கோள்கிறார்கள்.

லக்ஷ்மி இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

(தலைமை ஆபீஸ்:– லாகூர்)

மதராஸ் பிராஞ்சு:-
4/105, அரண்மனைக்காரத்தெரு. ஜி. டி. சென்னை.

C. R. சேஷன், M. A.,
பிராஞ்சு மானேஜர்.

சோகமா சிருங்காரமா?

க. பஞ்சாபகேசன்

சாரங்கதேவன் கண்களிலே ஒரு பிரகாசம் எப்பொழுதுமே குடிகொண்டு விளங்கியது. கலைஞன் ஒவ்வொருவன் நயனத்திலும் இயல்பாகவே இலங்குகின்ற அந்த ஜீவ ஒளி, சாரங்கதேவன் தீட்டுகின்ற–கற்பனையை மதியிலும் எழுதுகோலிலும் வைத்து அவன் தீட்டுகின்ற — ஒவ்வொரு சித்திரத்திலும் ஜீவன்கொண்டு பிரகாசித்தது. அவனுடைய சித்திரம் ஒவ்வொன்றும் வெளியாகி அரசாங்கச்சித்திரக்காட்சிச் சாலையில் வைக்கப்படும் நாள் என்றைக்கோ அன்றைக்கு அவைகளைப் பார்க்க நகரமே திரண்டு கூடும்.

ஜனங்கள் ஒவ்வொரு சித்திரத்தையும் தான் பார்க்கிறார்கள். 'எங்கள் கண்களை நம்ப முடியவில்லையே' என்கிறார்கள். 'வெற்றி; சாரங்கன் இதிலே வெற்றி பெற்றுவிட்டான்' என்று ஒவ்வொரு சமயமும்தான் சொல்கிறார்கள். ஆனால் அந்தக் கலைஞனுக்குமட்டும் இன்னும் திருப்தி என்பது ஏற்படவில்லையே என்பது அவர்களுக்கு எங்கே தெரியப்போகிறது?

எப்போதும் உயிர்ச் சித்திரங்களையே தீட்டும் சித்திரக்காரன் என்று என்னவெல்லாமோ பட்டங்களை அரசனும் பிரஜைகளும் அவனுக்குக் கொடுத்துக் கௌரவித்திருக்கிறார்கள். ஆனால் தன்னை அவர்கள் கௌரவித்தார்களா அல்லது தன்னுடைய கலையை அவர்கள் கௌரவித்தார்களா என்பது சாரங்கனுக்கு அவர்கள் செய்கிற ஆட்டபாட்டங்களில் ஓரோர் சமயங்களில் புரியாமல் போய்விடும்.

மனுஷ உணர்ச்சிகளைத் தத்ரூபமாகக் கொண்டு அத்துடன் இயற்கை வனப்பையும் சேர்த்து எத்தனையோ சித்திரங்களை—மக்கள் 'ஈடு இணை இல்லாதவை' என்று கொண்டாடும்படியான சித்திரங்களை—அவன் தீட்டியிருக்கிறான். வெடவெடக்கும் குளிர்காலத்திலோ மேலே ஆகாயத்திலிருந்து 'உஸ்'ஸென்ற பனி இருதயத்தைத் தொடும்படியாக வீசும் பொழுதிலோ, வஸந்தத்தின் இனிமையையும் அந்த வஸந்தத்திலே பூக்கின்ற மலர்களின் மனோஹரக் காட்சியையும், பூங்காவனத்திடையே பூங்கோதை ஒருத்தியின் தேவசௌந்தரியத்தையும் ஒருங்குசேர்த்து சாரங்கன் தீட்டிய சித்திரத்தைப் பார்த்தால் அத்தனை குளிரும் பனியும் எங்கோ சென்று ஒளிந்துகொண்டு வஸந்தத்தின் பரிமள உணர்ச்சி ஹிருதயத்திலே துளிர்விடும்; அப்படிக்கு ரம்மியமான ஜோடனைகளைச் சித்திர விசித்திரத்திலே ஜோடிக்கும் சாரங்கதேவன் 'சிருங்காரக் கலைஞன்' என்று அழைக்கப்பட்டு வந்தது வெகு பொருத்தமானது தானே?

ஆமாம். அவன் சித்திரம் ஒவ்வொன்றும் சிருங்கார ரஸத்தையே அடிப்படையாகக் கொண்டு சித்திரிக்கப்பட்டு வந்தது. பெரும்பாலும் காதல் ரஸத்தையே கொண்டு விளங்கிய அச்சித்திரங்கள் மக்களைக் கவர்ந்தன. நாளாவட்டத்தில் மக்கள் அத்தகைய சித்திரங்களையே விரும்பினார்கள். அரசனும் சாரங்கனை ஊக்கி வந்தான். 'இன்னும் எனக்கு ஹிருதயத்தைத் தொடும்படியான ஜீவ சித்திரம் ஒன்றைத் தீட்ட முடியவில்லையே!' என்ற கவலையில் ஆழ்ந்திருந்த அந்தக் கலைஞன் கற்பனை வெள்ளத்தைத் தாராளமாகக் காதல் ரஸத்திலும் இயற்கை வனப்பிலும் பொழிந்து மக்கள் மனசுகளை மகிழ்ச்சி வெறியில் ஈடுபடுத்திக் கொண்டு வந்தான்.

2

உதய சூரியனின் பொன் கிரணங்கள் தூரத்து மலைகளின் விளிம்புகளைப் பொன்மயமாக்கின. சூரிய தேவனுக்கு அவன் போகும் பாதையை நேர்மைப்படுத்தி வைப்பனபோல, மேகக் கூட்டங்கள் சிதறி, மெள்ள மெள்ள, பூமியின் முகட்டை நோக்கிப் பிரயாணம் செய்துகொண்டிருந்தன. அப்பொழுது நகர மாந்தர்களும் உற்சாக மிகுதியில் சித்திரக் காட்சிச்சாலையை நோக்கித் திரள் திரளாகச் சென்றுகொண்டிருந்தார்கள்.

அன்றைக்குச் சாரங்கதேவன் எழுதிய புதியசித்திரம் ஒன்று சித்திரக்காட்சிச்சாலையில் வைக்கப்படுவதாக இருந்தது. அரசகுமாரியே சித்திரத்தைப் பார்க்க வரப்போவதாகவும் வதந்தி பரவியது. ஆகவே, சித்திரத்தையும் அரசகுமாரியின் லாவண்யத்தையும் ஒருங்கே பார்க்க, காட்சிச்சாலையின் வாசலில் ஜனங்கள் ஏராளமாகக் கூடியிருந்தார்கள்.

முத்துக்களும் நவரத்தினங்களும் வைத்திழைக்கப்பட்டு தேஜோமயமாக ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் பல்லக்கைத் தூரத்தில் பார்த்த நகர மாந்தர்கள் ஆர்ப்பரித்தார்கள். ஆம், ராஜகுமாரி அதோ வந்துவிட்டாள்; சித்திரக் காட்சிச்சாலையும் இதோ திறக்கப்பட்டுவிடும்.

பல்லக்கு இறங்கியது. அதிலிருந்து வெளிப்பட்ட சௌந்தரியவதியின் அழகு ஈடு இணை கூறமுடியாதபடிக்கு இருந்தது. 'பெண்களுடைய கடைக்கண் பார்வையிலே மயங்கும் மனிதன் பகவானுடைய முக்தி நெறியில் செல்வதற்கான நேர்மைப் பார்வையை இழக்கிறான்' என்பதெல்லாம் இந்தச்சுந்தரியைப் பார்க்கும்போது வெறும் ஊழல் வேதாந்தமாகவே தென்படுகிறது. உலகத்திலே இன்பப் பெருக்கையெல்லாம் ஒருங்குசேர்த்து ஒரு சிறு சிமிழிலே அடைத்துவைத்து, அந்தச் சிமிழின் வாயிலே சிவப்புத் தீட்டியதுபோன்று இருந்த அவளது மனச் சிமிழை மூடிய உதடுகள்—சிவப்புத் தீட்டிய உதடுகள்—புன்னகையை எப்போதும் தயாராக்கியிருந்தன. அவள் இறங்கினாள் தனது தோழியுடன்; திறக்கப்பட்ட அரசாங்கச் சித்திரக் காட்சிச்சாலையினுள் புகுந்தாள்.

ஜகஜ் ஜோதியான விளக்குகள் சுடர் விட்டுப் பிரகாசித்தன சித்திரச்சாலையினுள்ளே. அடர்த்தியான தீப ஒளியில் பல சித்திரங்கள் ஜீவகளையோடு பிரகாசித்தன. ஐந்து நாட்களுக்கு முன்னே சாரங்க தேவனுடைய தொண்ணூற்றெட்டாவது சித்திரம் வைக்கப்பட்டிருந்த இடத்தையும் ராஜகுமாரி தாண்டினாள்.

"ராஜகுமாரி! அடுத்த அறையில் பிரபல சித்திரக்காரன் சாரங்கதேவனால் தீட்டப்பெற்ற தொண்ணூற்றொன்பதாவது சித்திரம் வைக்கப்பட்டிருக்கிறது. இன்றைய புதிசு அது. தாங்கள் உள்ளே வாருங்கள்!" என்று பணியாள் ராஜகுமாரியையும் அவளுடைய தோழியையும் உள்ளே அழைத்துச் சென்றான்.

உள்ளே சென்று அந்த உயிர் ஓவியத்தை ராஜகுமாரியின் கண் அளாவிற்று. அவள் உள்ளம் இல்லாத ஒரு புது உணர்ச்சியை அடைந்தது. 'ஸ்திரீயினுடைய மனசைப் போதையில் ஆழ்த்த ஆடவர்களால் கையாளப்படும் முறைகளில் இம்மாதிரி சிருங்கார சித்திரங்களை வரைவதும் ஒரு முறை போலும்!' என்று ராஜகுமாரியின் இதயம் கவிபேசிற்று. அவள் சித்திரத்தைப் பார்த்துக்கொண்டே நேரம் போனது தெரியாதபடிக்கு நின்றாள்.

அப்படி என்ன புதுமையை அவள் அந்தப் படத்தில் பார்த்தாள்? ஊர்வசி காதல் தாபத்திலே துடித்து அர்ஜுனன் பாதங்களில் விழுகிறாள். அவளது கண்களின் சுழற்சியில் உயிர் அள்ளிக் கொடுக்கப்பட்டிருந்ததல்லாமல் பிரேமை ததும்பிற்று. காதல் போதையிலே துடிதுடித்த அவள் நெஞ்சத்தின் வேகத்தையும் காதல் மயக்கத்தையுமே அந்த நயனங்களில் தீட்டிவிட்டான் சாரங்கன். ஆஹா! நெளிவு பொருந்திய அந்த நங்கையின் உடலில்தான் எத்தனை இந்திர மகேந்திர ஜாலங்களை—ரஞ்சித லாவண்யங்களை அள்ளிவிட்டிருக்கிறான், பலவித வர்ண விசித்திரங்களுடன்! தேவ கந்தம் ஊர்வசியின் உடலினின்றும் சுற்றிலும் கொத்துக் கொத்தாகப் பூத்திருந்த பாரிஜாத மலர்களினின்றும் வீசிக்கொண்டிருக்கிறது. ஆனால் அர்ஜுனன் வீர புருஷன்; ஒரு நரன். அவன் கண்களில் தான் எவ்வளவு நர சுபாவம்! எவ்வளவு கடினத்தன்மை! பயபக்தி! இவைகளோடு கூட ஆச்சரியம் முதலிய எவ்வளவு உணர்ச்சிகள்!

ஆயினும் ராஜகுமாரி படத்திலிருந்து சிருங்கார ரஸத்தையே பூரணமாக அனுபவித்தாள். படத்திலிருந்து, படம் உற்பவித்த காதல் உணர்ச்சியிலிருந்து, அவ்வுணர்ச்சியை அப்படி மனோஹரமாகத் தீட்டியிருக்கும் அந்தச் சிருங்காரக் கலைஞன் சாரங்கதேவனிடம் வந்து நின்றது அவள் உள்ளம்.

இதற்குமுன் சாரங்கதேவனை எவ்வளவோ தடவைகள் அவள் பார்த்திருக்கிறாள். 'தேசத்தில் இருக்கிற அநேக கலைஞர்களுள் இவனும் ஒருவன்' என்று சர்வ சாதாரணமாக எண்ணிவந்தவளுக்கு இன்று என்ன ஒரு அசாதாரணமான உணர்வு? கஸ்தூரி மணம் மனித ஹிருதயத்தை ஆகர்ஷிப்பதுபோல, சாரங்க தேவனது கலையின் இன்பவாசம் ராஜகுமாரியை ஆகர்ஷித்தது; அன்றலர்ந்த மல்லிகையைப் பின்பற்றி அதன் மணம் செல்வதுபோல அந்தக் கலைஞனைப் பின்பற்றி அவள் உள்ளம் செல்லத் தலைப்பட்டது.

3

நகரத்தின் மூலை முடுக்குகளில் இரைக்கப்பட்டிருந்த ரத்தினங்கள் பக்கத்திலே தங்கத் தாங்கியிலே பிரகாசித்துக் கொண்டிருந்த தீப ஒளியில் ஆயிரம் நட்சத்திரங்கள்

ஜொலிப்பதுபோல ஜொலித்துக் கொண்டிருந்தன. நிர்மலமான வான வெளியில் பூர்ண சந்திரிகை உலாவிக் கொண்டிருந்தபடியால் பல விளக்குகள் அணைக்கப்பட்டுவிட்டன. அந்தச் சௌந்தர்ய லோகம் அநேகமாக நித்திரையில் ஆழ்ந்துவிட்டது.

அப்போது தனது மாளிகையின் உப்பரிகையில் கைகளைப் பின்னால் கட்டிய வண்ணம் உலாவிக்கொண்டிருந்த சாரங்கதேவன் மனதிலே புயல் வீசிக்கொண்டிருந்தது. அந்தச் சிருங்காரக் கலைஞன் சாரங்கதேவனுடைய மனதிலே வீசும் பெரும் புயலுக்குப் பின் ஒரு நிரந்தர அமைதி உண்டாகியே ஆகவேண்டுமல்லவா? அத்தகைய அமைதியிலேதான் அவனது நூறாவது சித்திரம் உதயமாக வேண்டுமோ என்னவோ!

சாரங்கன் தன்னுடைய மாளிகையின் கூடத்துப்பக்கம் சென்றான். அடுத்த சித்திரத்திற்கு— நூறாவது சித்திரத்துக்கு — வேண்டிய கற்பனை மனதிலே இருக்கிறது; ஆனால் தயாராக அங்கே சித்திரச் சாய்விலே மாட்டியிருக்கும் உயர்ந்தரக வெண்மைப் பட்டுத்துணியில் அந்தக் கற்பனை சித்திரமாகப் பரிணமிக்கவேண்டுமே! ஆயினும்...... இந்தக் கற்பனையைத் தீட்டலாமா என்ற பெருத்த போராட்டம்தான் அவன் இதயத்தில் அலைவிட்டு அலை பாய்ந்து கொண்டிருந்தது.

பெருத்த பெருமூச்சு விட்டுக்கொண்டு கூடத்தை அடுத்த அறையை அடைந்தான். அங்கே தான் இயல்பாகத் துயிலுகின்ற மஞ்சத்தில் போய் உட்காா்ந்தான்.

"ஏன் தீட்டக் கூடாது? எனக்கு அவ்வளவு உரிமை இல்லையா? கலை பிறர் சொல்லிச் சிருஷ்டிக்கப்பட முடியுமா? அல்லது பிறருடைய இன்பத்துக்காகவேனும் அதை உபயோகப்படுத்திக்கொள்ள முடியுமா? ஐயோ! நகரத்தில் எல்லோரும் சிருங்கார ரஸத்தையே விரும்புகிறார்களென்று எத்தனை நாட்கள் என் கலையை விற்றேன்! பணம் பெற்றேன்; புகழும் அடைந்தேன்! ஆனால் எனக்கு ஒரு திருப்தி— மன நிம்மதி- இருந்ததா? கட்டாயம் நூறாவது சித்திரத்தை என் மனப் போக்குப்படியே

விலைகள் குறைந்துவிட்டன!

நாடோறும்—

நம் தேவைக்குள்ள

பட்டு & நூல் ஜவுளிகள்

கிடைக்குமிடம்

T.N. நாகேந்திரம் சன்ஸ்

பட்டு ஜவுளி வியாபாரம்

மலைவாசல் உள்மண்டபம்

தெப்பக்குளம் P. O. - திருச்சினாப்பள்ளி

அமைக்கப்போகிறேன். மற்றவர்களுடைய சௌகரியத்துக்கோ அல்லது இன்பத்துக்கோ இதுவரை நான் என் கலையை வீணாக்கியது போதும்!''

இவ்வாறு எண்ணிய சாரங்கதேவன் துள்ளி எழுந்து கூடத்துப் பக்கம் போனான். விளக்கைப் பிரகாசப் படுத்தி விட்டுச் சித்திரக் கோலைச் சித்திரத் துணியில் வைத்துத் திட்ட ஆரம்பித்தான்.

* * *

அந்தப்புர நந்தவனத்தின் நடுவிலே, சந்திரகாந்தச் சலவை மண்டபத்திலே ராஜகுமாரி தோழியுடன் நில வொளியில் பேசிக்கொண்டிருந்தாள்.

''இரவு வெகுநேரம் ஆகிவிட்டதே அம்மா, தந்தையறிந்தால் கோபிக்க மாட்டாரா?'' என்றாள் தோழி.

"வனிதா! என்னால் தூங்கமுடியவில்லை. தூங்க முயன்றாலும் இன்றைக்கு நாம் பார்த்த அந்தச் சித்திரமும் அந்தக் கலைஞனும்தான் கண்ணெதிரே சதா வந்து போகிறார்கள். எங்கிருந்தடீ அவன் கையில் அவ்வளவு மயக்கம் தரும் மருந்து வந்தது? தோழி! எப்படியாவது சாரங்கதேவனை நான் தனியே பார்த்துத்தானாகவேண்டும்! பிறகு அந்த ஊர்வசி அர்ஜுனன் பாதங்களில் எவ்வாறு விழுகிறாளோ அதுபோல நானும் அவன் கால்களில் விழுந்து என்னை ஏற்குமாறு கெஞ்சுவேன்!'' என்றாள் ராஜகுமாரி.

''ராஜகுமாரி! நீ என்ன, உளறுகிறாயா? சில நூறு பொன்களைப்பெற இரவு பகலாக உட்கார்ந்து சித்திரங்களைத்தீட்டும் அவன் எங்கே, பரந்த ராஜ்ய போகத்தை ஐசுவர்ய சிகரத்தில் இருந்துகொண்டு அரசாளும் ஒரு ராஜாதி ராஜனுடைய மகளாகிய நீ எங்கே? பிதற்றாதே அம்மா! வா, போகலாம்; பனி வீசுகிறது பார்!'' என்றாள் தோழி.

''இல்லை, வனிதா, இல்லை! அந்தஸ்தையும் மீறினது அன்பு என்பதை அநுபவம் நேரிடும்போது நீ அறிவாய்!'' என்றாள் ராஜகுமாரி.

''அப்படியானால், ராஜகுமாரி, உன்னை ஒன்று கேட்கிறேன். ஊர்வசி எப்படித் துடியாய்த் துடித்து அர்ஜுனன் பாதங்களில் விழுகிறாள்! அந்தக் கல்நெஞ்சன் ஒரேயடியாக அவள் காதலை மறுத்து விடவில்லையா அம்மா? ஆனால் நான் ஒன்று சொல்வேன்! அந்தப் படத்தின் ஆழ்ந்த தத்துவம் முடிவில்லாச் சோகத்தை ஊர்வசிக்கு ஊட்டுவதின் மூலமாக நமக்கும் வெளியிடுகிறது. மற்றபடி சிருங்கார ரஸம் அதிலே இருக்க முடியாது என்றுதான் நான் கருதுகிறேன் அம்மா. ஆயினும் பார்த்தனின் அழகு பொருந்திய வீரவடிவமும் ஊர்வசியின் தேவ சௌந்தர்யமும் யாரையுமே கவர்ச்சி செய்து விடும்!'' என்று இரண்டுங்கெட்டானாகப் பேசினாள் வனிதா.

"வனிதா! பேசிக்கொண்டே போவதில் பலன் என்ன? உன்னைக் கெஞ்சிக் கேட்கிறேன், இதற்கு ஓர் உபாயமுமில்லையா?'' என்று கேட்ட ராஜகுமாரியின் பேச்சு வனிதாவின் ஹிருதயத்தை உருக்கிவிட்டது.

"பார்ப்போம், அம்மா. நீ நிம்மதியாகத் தூங்கு வா. நாளைக்கு யோசிப்போம்'' என்று வனிதா சொல்லவும், வேண்டா வெறுப்பாக ராஜகுமாரி கை வளைகள் சப்தமிட எழுந்தாள்.

4

அடுத்த நான்கு நாட்கள்வரை சாரங்கதேவன் வெளியே வராமல் சித்திரத்தை முடிக்கும் வேலையிலேயே ஈடுபட்டுக்கொண்டிருந்தான்.

நாலாவது நாள், வழக்கம்போலச் சூரியதேவன் தன்னுடைய பொற் பிழம்புகளுடன் கீழ்த் திசையில் சுடர்விட்டு எழுந்து விட்டான். அரசாங்கச் சித்திரக் காட்சிச் சாலையை நோக்கி ஜனங்கள் அன்றைக்கும் ஏக கூட்டமாகச் சென்றுகொண்டிருந்தார்கள்.

இந்த நாலாவது நாளில் ஒரு விசேஷம் என்னவென்றால், 'சிருங்காரக் கலைஞன் சாரங்க தேவனுடைய நூறாவது சித்திரத்தை' ரஸித்துக் கொண்டாட்டம் ஒன்று கொண்டாடுவதற்காக அரசரும் சித்திரக் காட்சிச் சாலைக்கு வரப்போகிறார் என்பது.

முந்தின இரவு சாரங்கன் உறங்கவே இல்லை. வெளி உப்பரிகையில் சாய்வு மஞ்சத்தில் உட்கார்ந்துகொண்டு, சிறிது போழ்து கழித்து நீல விசும்பிடையே உதித்துத் தவழ்ந்துவந்த மதியைப் பார்த்த சாரங்க தேவனுக்கு அக்காட்சி ரஸிக்கக் கூடிய அளவில் இல்லை. எழுதப்பட்ட சித்திரம் அவன் மட்டில் அவனுக்குப் பூரணமான ஒரு திருப்தியை—கலைஞன் ஒவ்வொரு



K. T. R. வாஸனாதி திரவிய மாளிகை

விருதுநகரில் 7—4—'46 தேதி முதல் 22—4—'46 தேதி வரை நடக்கும் 2ஆவது அகில இந்திய பொருட்காட்சிச் சாலையில் பதினாயிரக்கணக்கான ரூபாய் செலவில் மரத்தினாலேயே நிர்மாணிக்கப்பட்டு மின்சார விளக்குகளினால் அலங்கரித்துள்ள எங்கள் வாசனாதிதிரவிய மாளிகைக்கு விஜயம்செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

K. T. R.	கோபுர மார்க்கு பன்னீர்	K. T. R.	கிருஷ்ணா அகர்பத்தி
,,	சந்தனாதி தைலம்	,,	கஸ்தூரி பத்தி
,,	அரைக்கீரைவிதை தைலம்	,,	ராஜா பல்பொடி இவைகளை
,,	ஒயிட்ரோஸ் ஹேராயில்		உபயோகித்து ஆனந்தமடையுங்கள்.

K. T. R விலாசத்தை கவனித்து வாங்குங்கள்.

K. T. R. Perfumery Industries, Vijayapuram.

வனும் அடைய வேண்டிய ஒரு திருப்தியை —ஊட்டிய போதிலும், ஏனோ, அவன் மன அரங்கத்திலே நிம்மதியில்லை! மூன்று தினங்களுக்குமுன் உலகத்தைப் பாலமிர்த மயத்திலே ஆழ்த்தி, வான வெளியில் கொஞ்சிக் கொண்டு சிரித்துத் திரிந்த வெண்ணிலவு இன்றைக்குப் பிளவுபட்டிருக்கிறது! இப்போது அங்கொருவர் இங்கொருவராகக் காணப்படுகிற ஒரு சில கவிஞர்களையன்றி, வேறு யார் இந்தக் காட்சியை மதித்து ரஸனை கொள்ள முடியும்? 'இன்பத்துக்கும் ஒரு தோல்வியா ?' என்றுதான் சாரங்கன் நிலவை நோக்கி எண்ணினான்.

நூறாவது சித்திரம் அன்று மாலையே சித்திரக்காட்சிச் சாலைக்குக் கொண்டுபோகப்பட்டுவிட்டது. இதுவரை எவ்வளவோ சித்திரங்களை வரைந்து குவித்த சாரங்கனுக்கு இதைத் தீட்டிய பிறகு எல்லை காண முடியாத ஒரு சந்தோஷம். 'கலைஞனாகப் பிறந்ததின் பேறு இன்றுதான் நான் பெற்றேன்' என்ற பாவனையில் அந்தச் சித்திரத்துக்கு முன்பாக அவன் கூத்தாடினான். ஆயினும் என்ன? அவன் மனதின் மூலை, "மற்றவர்களுடைய ரஸனையுணர்ச்சி உறுதியாக இந்தச் சித்திரத்துக்கு இருக்காது! படுதோல்வி அடையப் போகிறாய் சாரங்கா!" என்றே அவனைக் குத்தி வந்தது.

* * *

இதோ அரசனும் அவனது குமாரியும் ஏனையோரும் சித்திரக்காட்சிசாலையினுள் நுழைகிறார்கள். சிருங்காரக் கலைஞன் சாரங்கதேவன் இன்னும் வந்துசேர வில்லை.

ராஜகுமாரி மற்றவர்களுடன் அந்தத் தொண்ணூற்றொன்பதாவது சித்திரம் உள்ள அறையை அடைந்தாள். ஆமாம் ஊர்வசி பார்த்தனுடைய பாதங்களில் விழுந்து கெஞ்சுகிறாள் தன்னை ஏற்கும்படியாக. இதென்ன? படத்தில் ஒரே சோக மயத்தைத்தானே ராஜகுமாரி இப்பொழுது பார்க்கிறாள்! அப்படியென்றால் தோழி கூறியது உண்மையா?— அவர்கள் எல்லோரும் அந்த அறையைத் தாண்டினார்கள்.

அதோ! சாரங்கனின் நூறாவது சித்திரம்! 'பளிச்'சென்ற ஒளியில் தங்கச் சட்டங்களின் நடுவண் பிரகாசித்த அந்தச் சித்திரத்திலே எல்லோரும் எதைப் பார்த்தார்கள்?

யசோதரை விழிக்கிறாள். பாலகன் ராகுலன்— இரவு தூக்க மயக்கத்திலே பால் உண்டதினால் உதடு நுனியில் பட்டிருந்த ஈரம் போகாமலே உறங்கும் ராகுலன்— முகத்தில் அதிகாலையில் மலர்கின்ற ரோஜா மலர்களின் புன்னகை அரும்பி ஓடுகிறது. ஆனால் யசோதரையின் கண்களில் என்ன அப்படிப்பட்ட சோகம்! திடுக்கிட்ட ஓர் உணர்வு! அவளது மலர்க்கைகள் துவண்டு மஞ்சத்தில் விழுகின்றன. ராஜமங்கையொருத்திக்கு இருக்கவேண்டிய சகல லக்ஷணங்களும் பொருந்திய நயனங்கள் பக்கத்திலே போட்டிருந்த மற்றொரு மஞ்சத்தை இணையிலாத சோக வெள்ளத்தில் தோய்ந்து பார்த்துக் கொண்டிருக்கின்றன. சித்தார்த்தன் கண் துஞ்சவேண்டிய மஞ்சம் அது! இப்போது காலியாகக் கிடக்கிறது! அருகிலே நவரத்னங்களால் இழைக்கப்பட்ட வெள்ளிப் பாத்திரத்தில் வைக்கப்பட்டிருக்கும் குண்டு மல்லிகைகள் தலை தொங்கியிருக்கின்றன. வான வெளியிலிருந்து வரும் தென்றலில் அசைந்தசைந்து ஆடும் சாளரப் பட்டுப் படுதாக்களும் திரைகளும் பிரகாசம் மங்கியிருக்கின்றன. சித்தார்த்தனுடைய பிரிவுக்காக அந்த அறையின் ஜீவன்களும் பொருள்களும் சோக வெள்ளத்தில் அத்தனைபாடு பட்டுக்கொண்டிருக்கின்றன! கீழே சித்திரத்தின் வலது ஓரத்தில் இன்னுமொரு சிறிய சித்திரம் சேர்க்கப்பட்டிருந்தது. ஆம், சாந்தமும் கருணையும் பொங்கிப் பூக்கும் புனித முகத்துடனும் கையில் ஓட்டினும் காட்சியளிக்கும் ஒரு பிக்ஷுவின்— புத்த பகவானின்— சிறிய உருவம்தான் அது!

எல்லோரும் சித்திரத்தைப் பார்த்துக் கொண்டே இருக்கும் சமயம் வெளியே, "சாரங்கன் வந்துவிட்டார், சாரங்கதேவனுக்கு ஜே!" என்ற கோஷங்கள் வானைப் பிளந்தன.

ஆனால் அரசன் பேசவில்லை; அரசகுமாரியும் பேசவில்லை! அருகில் நின்றிருந்த மந்திரி ப்ரதானியரில் ஒரு சிலர் மட்டும் ஏதோ தத்தமக்குள் மிக மெதுவாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். அவ்வளவுதான்!

சாரங்கன் அரசன் எதிரே வந்து தலை வணங்கி நின்றான்.

"அரசே! ஏழைக் கலைஞன் சாரங்கதேவன் தங்களுக்கு வணக்கம் புரிகின்றான்!" என்றான் சாரங்கன்.

அரசகுமாரி சாரங்கனை ஏறிட்டுப் பார்த்தாள். மஞ்சள் பட்டுடை யுடுத்து, பளபளக்கும் பீதாம்பர மணிந்திருந்த சாரங்க

தேவனின் முகத்திலே இலங்கிய பளிச் சென்ற ஒளி அவளுடைய பிரேமையுள்ளத்தின் அந்தகாரத்துக்கு இப்போது அவசியத் தேவையாக இருந்தது. என்றாலும் இவன் இந்தச்சிருங்காரக் கலைஞன்—ஏன் இப்படிப் பட்ட சோக சித்திரத்தை—அதுவும் தன்னுடைய நூறாவது சித்திரத்தைச் சோக மயமாக—சித்திரித்து விட்டான்? அரசர் என்ன நினைக்கிறாரோ?—என்ற கவலையிலே தந்தையை நோக்கினாள் ராஜகுமாரி.

"சாரங்கா! சித்திரம் நன்றாகவே இருக்கிறது.........ஆனால் இதிலே 'சிருங்காரம்' எங்கே? மற்றவர்கள் உள்ளக் கிளர்ச்சிக்குக் காரணமாகவல்லவோ சித்திரம் தீட்டப் பெறவேண்டும்? உன்னுடைய நூறாவது சித்திரம் இப்படியமையும் என்று கனவில்கூட நான் நினைக்கவில்லை!" என்றான் அரசன், வறண்ட ஒரு த்வனியில்.

சாரங்கதேவன் முகம் சிறுத்தது. ஆனால் உள்ளத்தில் ஏற்கெனவே அவன் தயாராக்கியிருந்த அமைதி அவன் பதட்டத்தை அடக்கியது. அவன் சாந்தமாகவே பேசினான் :—

"அரசே! இந்தச் சித்திரத்தில் சோகமயம் கரைபுரண்டு ஓடுகிறது என்றால், சென்ற வாரத்தில் வெளியான சித்திரத்திலும் அப்படித்தானே? 'ஊர்வசி—அர்ஜுனன்' இவர்களைச் சித்திரத்தில் மக்கள் ஆழ்ந்து பார்த்திருப்பார்களேயானால் இந்த உண்மை அவர்களுக்கும்புலப்பட்டிருக்கலாமல்லவா? கலைஞன் கலையைச் சிருஷ்டிக்க முடியும். தன்னுடைய ரஸனையும் பரிபூர்ணத் திருப்தியும் அவனுக்கு இருந்துவிட்டால் போதுமல்லவா? மற்றவர்களுடைய சௌகரிய அசௌகரியங்களுக்கு ஏற்ப, தனிப்பட்ட ஒருவனுடைய கலையை உபயோகப்படுத்த முயன்றால் அது கலையைக் கொலை செய்ததாகவே ஆகுமல்லவா?"

அரசனுக்கு இந்த உண்மை புலப்பட்டதோ புலப்படவில்லையோ, அவனுக்குக் கோபம்தான் வந்தது. தான் என்ன ரஸிக்க முடியாதவனா? சாரங்க தேவனுடைய தொண்ணூற்றென்பதாவது சித்திரத்திலே ஊர்வசி மகா ரம்யமாக — பார்ப்பவர்கள் மயங்கி விடும்படியாக — சிருஷ்டிக்கப்படவில்லையா? 'ஊர்வசி— அர்ஜுனன்' கதைப் போக்கில் பின்னாலே சோகம் காத்துக் கிடப்பது என்னவோ உண்மைதான்! படத்தில் அதைக் கற்பனைசெய்ய ஜனங்களால் ஆகுமா?— என்றெல்லாம் அரசனுடைய சிந்தனை யோடிற்று.

சட்டென்று அவன் திரும்பி, "ரதம் தயாராகட்டும்! நான் அரண்மனைக்குப் போகிறேன்" என்றான்.

சாரங்கன் ஒன்றுமே பேசாமல் நின்று கொண்டே இருக்கும்போது அரசனும் அவனுடைய குமாரியும் சென்று விட்டார்கள். ராஜகுமாரியின் நயனங்களில் ஏக்கமும் சோர்வும் குடிகொண்டு விட்டன; யசோதரையின் ஆன்மா சோகத்தில் அல்லல்படுவதுபோல ராஜகுமாரியின் மனசும் தத்தளித்துக் கொண்டிருந்தது.

நகரமெங்கும் சிருங்காரக் கலைஞன் சாரங்க தேவனுடைய 'நூறாவது சித்திர விழா'வைக் கொண்டாடாததைப் பற்றி ஒரே பேச்சு. நெஞ்சிலே இன்னதென்று அறிய முடியாத ஒரு பெரும் சுமையழுத்தச் சாரங்கதேவன் தன் மாளிகையுட் புகுந்தான்.

5

புத்த பிக்ஷு வாசலில் நின்றான், பிக்ஷா பாத்திரத்தைக் கையில் ஏந்திய வண்ணம். சாரங்கதேவனுக்கு 'நூறாவது சித்திரத்துக்கான கற்பனையைத்' தேடிக் கொடுத்த அந்த இளம் பிக்ஷு வாசலில் நின்றான்.

உப்பரிகையிலிருந்து குனிந்து அவனைப் பார்த்தான் சாரங்கதேவன். வெகு விரைவாகப் படிகளினின்றும் இறங்கி, நேரே அந்த இளம் பிக்ஷுவுக்கு எதிரே ஓடி அவன் பாதங்களில் விழுந்தான்.

"அபசாரம்! அபசாரம்! இதென்ன என் கால்களில் விழுகிறீர்கள்? பண்பட்டுச் சாந்தமயமாக இருக்கும் என் மனசில் புயல் வீசக் காரணமாகிறீர்களா, ஸ்வாமி? வேண்டாம், வேண்டாம்! எழுந்திருங்கள்!" என்று சாரங்கனின் கைகளைப் பிடித்துக் கொண்டு அவனைத் தூக்கினான் புத்த பிக்ஷு.

"ஸ்வாமி! சோகத்திலிருந்துதான் மனிதன் நன்மையடைய முடிகிறது போலும்! அர்ஜுனனின் கல் மனத்தினால் ஏற்பட்ட ஊர்வசியின் சோகம் சாபமாக மாறிப் பார்த்தனுக்கு உதவவில்லையா? அன்றலர்ந்த தாமரைப் பூவை ஒத்த முகமண்டலமுள்ள அருமை மகனையும் வசந்த இன்பத்தைக் கடைந்து கடைந்து எடுத்த அழகு அமுதமான யசோதரையையும் பிரிந்த சோகம் புத்தனின் கருணாவிலாசத்தை உலகத்திலே பிரகாசிக்கும்படியாகச் செய்யவில்லையா?

நேற்று தூருவது சித்திரத்தைத் தீட்டிய தின் மூலமாக அரசனாலும் நகர மக்களாலும் நான் அடைந்திருக்கும் சோகம் எனக்கு என்ன நன்மையைத் தரப்போகிறது ஸ்வாமி?'' என்று அலறினான் சிருங்காரக் கலைஞன் சாரங்கதேவன்.

''சிருங்காரத்துக்கும் சோகத்துக்கும் முடிவுகாணப் புத்தன் உமக்கு அருள்வான்!'' என்று கலைஞனின் சிரசில் கையைவைத்து ஆசீர்வதித்தான் அந்த இளம் பிக்ஷு.

* * *

ராஜகுமாரி மஞ்சத்தில் தேம்பித் தேம்பி அழுதுகொண்டிருந்தாள். ஆம், அழியாத அமைதியையும் நிரந்தரமான கருணைக் கடாக்ஷத்தையும் பெரும் பயன்கள் தரக்கூடிய அஹிம்சை உயர்வினையும் சித்தத் தெளிவையும் நாடி, சாரங்கதேவன் பௌத்த பிக்ஷுவாகிவிட்டான் என்பது அவளுக்குச் சோகத்தை ஊட்டியிருக்கிறது என்றால் உலகிலே இது மிகவும் வேடிக்கையானதல்லவா?

வனிதா ராஜகுமாரியினருகில் வந்து உட்கார்ந்தாள். ''உலகில் ஒருவர் நன்மையையும் சாந்தியையும் தேடிப்போனால் அதற்கு அழுவது நல்லதா அம்மா? அவனுடைய சிருங்கார ரஸம் உன்னை இழுத்தது; ஆனால் உன்னுடைய சோக ரஸம் அமைதியை நாடிச் சென்ற 'அவனை இழுத்துவிட முடியுமா? கலைஞனாகிய அவன், அவன் போக்கிலே போகிறான்; ராஜகுமாரியாகிய நீ உன்னுடைய கேளிக்கைகளையும் சிருங்காரத்தையும் விட்டுக் கொடுக்காமல் உன் போக்கிலே போகவேண்டும்! உன்னைவிட வயதிலே பெரியவள் நான். சொல்வதைக் கேளு!'' என்றாள் தோழி வனிதா.

''வனிதா! நீ சொல்வது புரிகிறது. உனக்கிருக்கிற அறிவுகூட எனக்கு இல்லை. ஆனால் அழுது அழுது என்ன பயன்?'' என்று சொல்லிக்கொண்டே முகத்தைப் புதைத்துக்கொண்டு விம்மினாள் ராஜகுமாரி.

மனக்கோட்டை

கி. ரங்கராஜன்

காலம் என்று ஒன்று இருக்கிறதே, அது தாங்கமுடியாத துக்கத்தையும் மாற்றிவிடுகிறது. இதைக்காட்டிலும் கஷ்டம் நமக்கு ஏற்படப்போவதில்லை, இதிலிருந்து நாம் மீளப்போவதில்லை என்று ஒரு காலத்தில் நான் நினைத்தவன் தான். ஒரு வருஷம் கழிந்து, நானே எண்ணிப்பார்த்த போது என் மனைவி இறந்த அந்த மகத்தான துக்கம் அவ்வளவு பெரிதாக எனக்குப்படவில்லை.

பாளையங்கோட்டையில் அந்தக் கொடிய நோய்க்கு அவளை வாரிக்கொடுத்துவிட்டு, திருநெல்வேலி ஜில்லாவே வேண்டாம் என்று உதறித்தள்ளிவிட்டு, தஞ்சாவூர் ஜில்லாவுக்கு நான் வந்திருக்கவேண்டியதில்லைதான்.

ஈமக்கடன்கள் முடிந்த கையோடு, கும்பகோணத்திலிருந்த என் நண்பரும், டாக்டருமான ஒருவருக்குக் கடிதம் எழுதி, குடி இருக்க வீடு ஒன்று பார்க்கும்படி கேட்டிருந்தேன். நான்கு தினங்கள் கழித்து அவரிடமிருந்து பதில் வந்தது. அதில் என் மனைவி இறந்ததற்குத் தம்மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து உடனே புறப்பட்டு வருமாறு எழுதியிருந்தார். அடுத்த ரயிலுக்குப் புறப்பட்டுவிட்டேன்.

நண்பர் என்னைக் கட்டிக்கொண்டு அழுதார். சில தினங்கள் அவருடன் இருந்துவிட்டு, அவர் விசாரித்துச் சொன்ன அந்த வீட்டைப்பார்க்கப்போனேன். மோதிலால் தெருவிலே அந்த ஒரு வீடுதான் அழகாக இருந்தது. அது கட்டிமுடிந்து நாலைந்து வருஷங்கள்தான் ஆகி இருக்கும். மெருகு அழியாமல் இருந்தது. கதவைத்தட்டினேன். சில நிமிஷங்களில் ஒரு பெரியவர் கதவைத் திறந்துகொண்டு வெளியேவந்தார்.

"நீங்கள்தான் சூசைநாத பிள்ளையவர்களோ!" என்றேன்.

"ஏன்? நான்தான்; உள்ளே வாருங்கள். தாங்கள் யார் தெரியவில்லையே."

"நான் டாக்டர் துரைஸாமியின் நண்பன். பாளையங்கோட்டையிலிருந்து வந்திருக்கிறேன்."

"ஓ, அப்படியா! தேவஇரக்கம் நாடார் என்பது தாங்கள்தானே."

"ஆம் நான்தான். இந்த வீடு வாடகைக்குக் கிடைக்கும் என்று சொன்னார் துரைஸாமி. பார்த்துப் போக வந்தேன்."

"வீடு வாடகைக்குத்தான்" என்று சொன்னவர் மேலே பேசவில்லை. "ஆனால் பாருங்கள்" என்று சொல்லி மீண்டும் நிறுத்திக்கொண்டார். எனக்குச் சிறிது சந்தேகம் தோன்றிற்று.

"ஒருவேளை வேறு ஒருவருக்குப் பேசிவிட்டீர்களோ" என்றேன்.

"இல்லை வேறு யாருக்கும் விடவில்லை" என்று சொல்லிவிட்டு, மனைவியைக் கூப்பிட்டு அறைகளின் சாவியைக் கொண்டு வரச் சொன்னார். சாவி கிடைத்தவுடன் என்னை அழைத்துக்கொண்டு ஒவ்வொரு அறையாகக் காட்டிக்கொண்டே சென்றார். அந்த அம்மாளும் எங்களைப் பின்தொடர்ந்தாள்.

வீடு மிகவும் நன்றாயிருந்தது. அறைகள் எல்லாம் சுத்தமாக இருந்தன. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு அறை, சமையற் கட்டு, ஸ்டோர் ரூம், லம்பர் ரூம், பள்ளியறை இப்படியாக. நான் ஆச்சரியப்பட்டுப்போனேன். பணத்தை எப்படி வாரி இறைத்திருக்கிறார் மனுஷ்யன்!

"மாடிக்கு வருகிறீர்களா? மாடி அறைகளையும் பார்த்துவிடலாமே" என்றார். நாங்கள் மாடிக்குப் போனோம்.

மாடி அறை ஒன்றில் எங்கள் கவனம் சென்றது. நான் பிரமித்து விட்டேன். அதில் இருந்த சாமான்கள் என்னைத் திகைப்படையச் செய்துவிட்டன. அந்த அறையில் அப்பொழுது யாரோ ஒரு இளம் பெண் வாசம் செய்துகொண்டிருக்க வேண்டுமென்று ஊகித்தேன். சீப்பு, கண்ணாடி, சோப்பு, தைலபாட்டில், பவுன்டன்பேனா, மேஜை, நாற்காலி, மைக்கூடு இவைகள் இருந்தன. மற்றொரு புறத்தில் அலமாரி நிறையப் புஸ்தகங்கள், சுவரில் பல புகைப் படங்கள். மூலையில் பெண்களுக்குரிய செருப்புக்கள் முதலியன இருந்தன.

"இந்த அறையில் யாரோ வாசம் செய்கிறார் போலிருக்கிறதே" என்றேன்.

"இல்லை. இதில் தற்பொழுது யாரும் இல்லை" என்றார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அவர் முகத்தைப் பார்த்தேன். முகத்தில் இருள் படர்ந்தாற்போன்ற ஒரு தோற்றம் இருந்தது. அவரைத் தொடர்ந்து மேலும் ஏதாவது கேட்கத் தைரியமில்லாதவனாகி, கீழே அவருடன் இறங்கிப்போனேன்.

"வீடு பிடித்திருக்கிறதா?"

"ஏன், நன்றாகத்தானே இருக்கிறது? இதுமாதிரி வீடு நான் பார்த்தது இல்லை" என்றேன்.

"அப்பொழுது, நீங்கள் என்றைக்கு வருகிறீர்கள்"?

"இன்று சனிக்கிழமை அல்லவா? நான் புதன்கிழமை வருகிறேன்". என்று சொல்லி விடைபெற்றுக்கொண்டேன்.

புதன்கிழமை சாமான்களுடன் அந்தவீட்டிற் குடிபுகுந்தேன்.

என்னை வரவேற்று உபசரித்தார் சூசைநாதபிள்ளை.

"அன்று பார்த்திர்களே அந்த மாடி அறை—"

"ஆம் அதற்கென்ன?"

"ஒரு யோசனை கூறுகிறேன். அந்த அறை உங்களுக்கு வேண்டாம். அதிலே உள்ள சாமான்கள் அப்படியே இருக்கட்டும். நீங்கள் தனியாகத்தானே இருக்கிறீர்கள். அந்த அறை இல்லாவிட்டால்கூட உங்களுக்கு வேண்டிய இடம் இருக்கிறது. வாடகையும் குறையும்" நான் அந்த ஏற்பாட்டுக்கு உடனே சம்மதித்தேன்.

நாங்கள் பலவிஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். அவர் பேச்சிலிருந்து, அவர் மனதில் பலநாளாக இருந்த ஏதோ ஒன்றை, என்னிடம் கூற விரும்புபவர் போலப்பட்டது. கடைசியாக அவரே ஆரம்பித்தார்:

"நீங்கள்தான் இந்த வீட்டிற்கு முதன்முதலாகக் குடிவந்தது. நான் இந்த வீட்டைக் கட்டினேன். யாருக்காக என்று கேட்கிறீர்கள்? என் பெண்ணுக்கு. நான் எப்படி இருக்கிறேன்? என் மனைவி எப்படி இருக்கிறாள்? எங்களைப் பார்த்த பின்பு எங்கள் பெண்ணும், எங்களில் ஒருவர் சாயலாகத்தான் இருப்பாளென்று நினைக்கலாம். என் பெண் ஸ்வர்ணச் சாயலாக இருந்தாள். மல்லிகைப்பூ இருக்கிறது பாருங்கள், மல்லிகைப்பூ! அதைவிடமென்மையான ஸ்வபாவம். அவளைக் 'கான்வென்டி'ல் ஆறுவருஷம் படிக்கவைத்தேன். பன்னிரண்டு வயதுமுதல் பதினெட்டு வரையில் அதில் படித்தாள். அநேக தங்கமெடல்கள் பரிசுபெற்றாள். பியானோ வாசித்தால் இன்றைக்கெல்லாம் கேட்கவேண்டும். அன்று அந்த அறையில் பார்த்திர்களே அந்தப் பியானோதான் அவள் வாசித்தது. தேவமாதா போன்ற அவளுக்கு, அவள் வாழ்வதற்கு இந்த அருமையான வீட்டைக் கட்டினேன் ஸார்" அவர் கண்கள் மூடிக்கொண்டன. சில நிமிஷம் கழித்து மீண்டும் பேசலானார்.

"என்னிடத்தில் நிறையப் பணம் இருந்தது. சுற்றுப்பக்கத்தில் நான் ஒருவன்தான் பணம் படைத்தவன். சிறந்த வேலையாட்களைக்கொண்டு பல வருஷங்கள் முயன்று இந்த வீட்டைக் கட்டினேன். ஒரு ராஜகுமாரி வாழ்வதற்கு உரியதாக இதனைச் செய்தேன். ஆனால் நாம் நினைத்தபடி எல்லாம் நடந்துவிடுகின்றனவா? அதோ, அந்தப் பரமண்டலங்களிலே இருக்கிறாரே, கர்த்தராகிய பிதா, அவர் என் விஷயத்தில் சதி செய்துவிட்டார். அவளை, என் அருமைக் குழந்தையை என்னிடமிருந்து பிரித்துவிட்டார். நீங்கள் சொல்லுங்கள். கடவுள் செய்தது நியாயந்தானா? நாங்கள் பைத்தியம் பிடித்தவர்களைப்போல் ஆனோம். எங்களுக்கு இந்த வீடு ஒன்றுதான் ஆஸ்தி. தற்சமயம் வேறு வருவாய் இல்லை. நீங்களும் துக்கப்பட்டவர்கள் என்று சொன்னார் துரைசாமி. துணைக்கும் ஒருவர் வேண்டுமென்று நினைத்தோம். இவற்றையெல்லாம் உத்தேசித்து இந்த வீட்டை உங்களுக்கு வாடகைக்குக் கொடுக்கிறேன். அந்த அறையை மட்டும் நாங்கள் பூட்டிவைத்துக்கொள்ளுகிறோம். அந்த அறையில்தான் என் பெண் தேவமணி, சிறிதுகாலம் வசித்தது. அதிலே உள்ள சாமான்கள் அவ்வளவும் அவள் உபயோகித்தவையே. அவைகளை. அவள் எந்த நிலையில் வைத்துவிட்டுப் போனாளோ, அதே நிலையில்தான் நாங்கள் வைத்திருக்கிறோம். அந்த அறையைப் பார்த்துப் பார்த்து, அவள் இன்னும் உயிருடன் இருப்பவளாகவே நினைத்துக்கொண்டு, நாங்கள் உயிர்வாழ்கிறோம். ஒருவர் அருமையான பொருள் ஒன்றை இழந்துவிடுவதாக வைத்துக்கொள்வோம். அதனால் அவர் துக்கப்படுகிறார். காலம்

அவருடைய துக்கத்தை மாற்றிவிடும். இழந்துபோன அந்தப்பொருள் மறந்து போகவும் கூடும். இது இயற்கை. ஆனல் நாங்கள் இயற்கைக்கு முற்றிலும் மாறு பட்டவர்கள். ஒரு நிமிஷம் என் பெண்ணை நான் மறந்துவிடுவேனுனல் நான் இறந்து விடுவேன்." குசைநாத பிள்ளை கதையை முடித்துக்கொண்டார்.

ஆறுமாதம் கழிந்துபோயிற்று. நாங்கள் சிறந்த நண்பர்களானேம். பிள்ளை அவர் களுக்குத் தம் மகளைப் பற்றிப்பேசாத நாளெல்லாம் பிறவாநாளே.

ஒருநாள் என் பழைய நண்பர், டாக்டர் துரைசாமி வீட்டுக்குப்போயிருந்தேன். குசைநாத பிள்ளையைப்பற்றிப் பேச்சுவந் தது. துரைசாமி சொன்னர்: "நான் உங் கள் வீட்டுக்காரரைப்போன்றவர்களை இது வரை பார்த்தது கிடையாது. எத்தனை வரு ஷம் ஆயிற்று அந்தப்பெண் இறந்து. நேற்று இறந்தவருக்குத் துக்கப்படுவது போல் அல்லவா இன்றும் துக்கப்படுகிருர். என்ன அன்பு! என்ன ஆசை! கடவுள் இரக்கமுடையவர். அந்தப் பெண்குழந்தை ஞாபகத்திலேயே, தாம் உயிர்வாழவேண் டும் என்று தெரிந்துகொண்டிருக்கிருர். அவர் இறந்துபோக விரும்பவில்லை. நீங் கள் பார்த்தீர்களா?"

"உங்களுக்குத் தெரிந்திருக்கும். அந்தப் பெண் வசித்துவந்த அந்த அறையை இன் றும் எவ்வளவு ஜாக்கிரதையாகக் காப் பாற்றிவருகிருர். அந்தச் சாமான்கள்—"

"அவள் அறையா? எந்த அறை" என்று இடைமறித்துக் கேட்டார் துரைசாமி,

"உங்களுக்குத் தெரியாதா! மாடிமேல் அவளுடைய படுக்கை அறை. அந்தப் பெண் இறந்தபோது எப்படி வைத்துவிட் டுப் போனளோ, அப்படியே அவள் சாமான்களையும் வைத்திருக்கிருர்கள். புஸ்த கங்கள் அவள் துணிமணி, இவைகளையெல் லாம்—"

"நீங்கள் சொல்லுவது புரியவில்லை. அந் தக் குழந்தைக்குப் புஸ்தகம் ஏது? ஐந்து வயது குழந்தைக்குப் படிப்பு எப்படி வரும்?

"குழந்தை, குழந்தை என்கிறீர்களே, குசைநாத பிள்ளைக்குப் பதினெட்டு வயதில் ஒரு பெண் இருந்தாள். அவள் கான்வென் டில் படித்துப் பல பரிசுகள் பெற்றிருக்கி ருளே. உங்களுக்குத் தெரியாதுபோல் இருக்கிறது."

"கான்வென்டாவது, மண்ணுவது! குசை நாதருக்கு ஐந்து வயதில் ஒரு பெண் மகவு உண்டு. திடீரென்று விஷநோய் ஒன்றினல் அது இறந்துவிட்டது. நான்தான் அந்தக் குழந்தைக்கு வைத்தியம் பார்த்தவன்"

"நீங்கள் சொல்லுவது தவறு. குசை நாதரே என்னிடம் சொல்லியிருக்கிருர், ஒரு தரமல்ல, பல தடவை. மெத்தை இருக் கிறதல்லவா மெத்தை, அந்த மெத்தையில் உள்ள அறைகளில் ஒன்றில்தான் அவள் இறந்ததாம்."

"அட கிரகசாரமே! அந்தக் குழந்தை இந்த வீட்டிலேயே வசிக்கவில்லை. வீடு கட்டி முடிவதற்குள் அந்தக் குழந்தை போய்விட்டது."

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. எது உண்மை எது பொய் என்று புரியவில்லை. சில நிமிஷம் யோசித்தேன். ஒருவித முடிவு செய்துகொண்டேன். "ஸார்! துரைசாமி! இப்பொழுது தெரிந்து கொண்டேன்" என்று கத்தினேன்.

"என்ன தெரிந்துகொண்டீர்கள்?"

"மனிதன் தன்னையே தான் ஏமாற்றிக் கொண்டார். அதிலே ஒரு அமைதியையும் அடைய வழிதேடிக்கொண்டுவிட்டார்.

"அந்தப் பெண்ணுக்காக அந்த வீட்டைக் கட்டியிருக்கிருர். அந்தப் பெண் வளர்ந்து பிற்காலத்தில் மிக மேன்மையாக இருக்கும் என்று அவர் எதிர்பார்த்திருப்பார். அதற் குள் அது இறந்துவிட்டதால், தன் நம்பிக் கையை இழந்தும், இறக்கமில்லாதவராய் மானசீகமான ஒரு பெண்ணை சிருஷ்டித்துக் கொண்டு பல சாமான்களை சேகரம்செய்து, அவற்றை அந்த அறையில் கொண்டுபோய்ச் சேர்த்து, இது அவள் அறை, இது அவள் அறைஎன்றுசொல்லிக்கொண்டிருந்ததோடு தாமும் அவ்விதமே நினைக்கக்கற்றுக்கொண் டார். அதிலே ஒரு திருப்தியும் அடைகிருர். அந்த திருப்தியில்லாவிட்டால் அவர் இறந்து பல வருஷங்களாகி இருக்கும்" என்றேன்.

துரைசாமி நான் சொன்னதை ஆமோ தித்தார்.

நான் நினைத்தது சரிதானு என்று குசை நாத பிள்ளையைக் கேட்க விரும்பி அவர் வீட்டுக்கு இருவருமாகப் போனேம். அப் பொழுது அந்தமாடி அறையில், பிள்ளை அவர்கள் மண்டி இட்டுக்கொண்டு ஜபம் செய்துகொண்டிருந்தார். அவர் கண்களில் இடைவிடாது நீர் துளித்துக்கொண்டிருந் தது. நாங்கள் மெய்சிலிர்த்துப் போனேம்.

அயோடிசால் IODISAL

(ரத்த சுத்தி மருந்து)

இது தேகத்தில் உஷ்ணம் அதிகமாகி அதனால் ஏற்படக்கூடிய வெட்டை, கிரந்தி, மொழி, முடக்கு, கண்டசூலைகள், வாதம், வாய்வு, மேக ரோகங்களையும், தோலைப்பற்றிய துர்நீர் சம்பந்தமான படை, சொறி, சிரங்கு, தேக அரிப்பு முதலியவைகளையும் குணப்படுத்தி, தேகத்திற்கு ஆரோக்கியத்தையும் கொடுக்கும். ரத்தத்தைச் சுத்திசெய்து மலப்பிரவர்த்தியை ஒழுங்காக்கி இரத்த விருத்தியை உண்டாக்கும்.

எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

*   *   *   *

சைபால்

- CIBOL -

முகப் பரு, சேத்துப் புண், சொறி சிரங்கு, வேனல் கட்டி, தீப்பட்டபுண், முதலியவைகளுக்கு கைகண்ட மருந்து.

பேபி - கிரைப்

BABY - GRIPE

குழந்தைகளுக்கு உண்டாகும் வாயு, வயிற்றுப் பொருமல். வயிற்றுவலி, அஜீரணம், மாந்தம், பல் முளைக்கும்போது ஏற்படும் வயிற்றுப்போக்கு முதலிய சகல வியாதிகளையும் போக்கி நல்ல ஆரோக்கியத்தைத் தரும் சிறந்த திராவகம்.

தயாரிப்பவர்கள்

தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி, மதுரை

மதராஸ் சிடி, நெல்லூர், சிடட் & விசாகபட்டினம் ஜில்லாக்களுக்கு ஏஜண்டுகள்:

ராஜன் ட்ரக் ஸ்டோர்ஸ், கெமிஸ்ட்ஸ், பி. டி. மதராஸ்.

குண்டூர், கிருஷ்ண, கோதாவரி ஜில்லா & நைஸாம் சமஸ்தான ஏஜண்டுகள்:

சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ், பெஜவாடா.

மைசூர் சமஸ்தான ஏஜண்டுகள்:

சேஷமஹால் பார்மஸி, பெகங்ளூர் சிடி.

கங்கைக் கரையில்

க. சந்தானம்

சாதாரண காலத்தில் புத்தியின் ஆதினத்தில் இருக்கும்பொழுது "கங்கையும் உலகநதிகளில் ஒன்று, அதற்கு எவ்வித விசேஷமும் இல்லை" என்று எண்ணுகிறோம். ஆனால் பிரயாகை, ஹரித்துவாரம் முதலிய க்ஷேத்திரங்களுக்குப் போகும்பொழுது புராணமும் இதிகாசமும் நம் மனத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன. கபிலரால் சபிக்கப்பட்டுச் சாம்பலான சகரபுத்திரர்களை உய்விக்கும்பொருட்டுப் பகீரதன் தவத்தால் வானுலகைவிட்டுச் சிவபெருமான் சடையில் சிக்கிப் பின் பூமியில் இறங்கி ஜன்னு மகரிஷியால் விழுங்கிவிடப்பட்டு இமயமலையிலிருந்து கிழக்குச் சமுத்திரம் வரையில் பாரதநாட்டைப் புனிதப்படுத்திய தெய்வகன்னிகையைத் தியானிக்கிறோம். நினைக்க நினைக்க நமது கற்பனையும், குதூகலமும், பக்தியும் அதிகரிக்கின்றன. மற்ற மகா நதிகளைப்பற்றியும் இவ்வித உணர்ச்சிகள் உண்டாகலாம். ஆனால் கங்கையைப் போல் மூவாயிரம் வருஷம் பரம்பரையாகக் கோடிக்கணக்கான மக்களால் பூஜிக்கப்பட்டு வரும் வேறு நதி இப்புவியிலில்லை. இமயத்தின் உச்சியிலுள்ள கங்கோத்திரி முதற்கொண்டு பங்காளத்தில் கங்காசாகர் வரையில் கணக்கற்ற ஸ்நான கட்டங்கள், தர்மசாலைகள், என்றுங் குறையாத கோடிக் கணக்கான யாத்திரிகர்கள். இந்து சமூகத்தின் முதுகெலும்பு கங்காநதியென்றால் மிகையாகாது.

— 2 —

கங்கையின் மகாத்மியத்தைப் பற்றிக் கட்டுரை எழுத நான் முன்வரவில்லை. ஹரித்துவாரத்தில் கங்கைக் கரையில் நடத்த ஒரு சம்பவத்தைக் கூற விரும்புகிறேன். ஆனால் அதன் ஆச்சரியத்தை நன்கு உணர்வதற்குப் பாகீரதியிடம் ஓரளவேனும் பக்தி வேண்டும். எனது நண்பர்கள் சாமி, நாதன் இருவரோடு ஹரித்வாரம் சென்றேன். முன்னதாகவே ரயிலில் இடங்கள் அமர்த்தி வைத்தபோதிலும், ஐந்துபேர் போக வேண்டிய அறையில் பத்துப்பேர் கூடிவிட்டனர். சரியாகத் தூங்கமுடியவில்லை. காலையில் 5 மணிக்கு ஹரித்துவாரம் சேர்நததும் பாதித் தூக்கத்தோடு படுக்கையைக் கட்டிக்கொண்டு கீழிறங்கினோம். அடுத்த அறையிலிருந்து ஒரு வட இந்தியர் இறங்கினர். முப்பது வயதிருக்கும். வாட்டசாட்டமாக அழகாக இருந்தார். அவருக்குப் பின் அவர் மனைவி கையில் ஒரு கூஜா எடுத்துக்கொண்டு இறங்குவதற்காக வாசற்படியில் வந்தாள், எங்களைப் பார்த்துத் திடுக்கிட்டுக் கால்தவறிக் கீழேவிழுந்தாள். நல்லவேளையாக அவள் புருஷன் கையால் தாங்கி மெதுவாக உட்காரவைத்தார். அவள் கையிலிருந்த கூஜா கீழே விழுந்து நசுங்கிவிட்டது. சாமி ஓடிப்போய் அதை எடுத்துப் புருஷன் கையில் கொடுக்கப் போனான். அப்பொழுது கீழே உட்கார்ந்திருந்த அம்மாது அவனைப் பார்த்தாள். இருவரும் ஏதோ திகிலடைந்தவர்கள் போல் விழித்தார்கள். ஆனால் ஒரு நிமிஷந்தான். இதைப் புருஷன் கவனிக்கவில்லை. அவள் மிகவும் அழகுவாய்ந்தவள். நாதனும், நானும் சாமியைப் பரிகாசம் செய்ய நல்ல சந்தர்ப்பம் கிடைத்ததென்று ஒருவருக்கொருவர் காதில் கடித்துக்கொண்டோம்.

எல்லோரும் எழுந்து தர்மசாலை நோக்கிச் சென்றோம். வழியில் ஸ்ரீமான் சாகி தம்மை எங்களுக்கு அறிமுகம் செய்வித்தார். பீகார் மாகாணத்தில் தர்பங்கா ஜில்லாவில் ஒரு ஜமீன்தார். வருஷம் ரூ. 5000 கிஸ்தி வருமானம். அவருக்குக் குழந்தைகள் இல்லை. மனைவி சுகுணவுக்கு இருபத்தைந்து வயதாகி விட்டபடியால் இனித்தாமதிக்கக் கூடாதென்று க்ஷேத்திராடனம் செய்து புத்திரப்பேறு அடையவேண்டுமென்று தீர்மானித்தார். ஹரித்துவாரத்தில் தொடங்கி ராமேசுவரம் வரையில் எல்லா முக்கிய க்ஷேத்திரங்களுக்கும் சென்று, தீர்த்தங்களில் நீராடி, துஷ்கிரகங்களைச் சமாதானம் செய்து குலத்தை நிலைநிறுத்தவேண்டுமென்ற ஆசையையும் அம்முறையில் தமக்கிருந்த பக்தியையும் அவர் வர்ணித்து முடிப்பதற்குள் தர்மசாலை சேர்ந்தோம். எங்களுக்குப் பக்கத்து அறையே அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது.

— 3 —

எங்கள் அறையில் புகுந்து கதவை மூடியதும், நாதன் ஆரம்பித்தான்:

"என்ன சாமி! மோசமாயிருக்கிறதே?" நான் சிரித்தேன். சாமிக்குப் புரியவில்லை.

"ஓகோ! நீங்கள் ஏதோ கோட்டாப் பண்ணத் திட்டம் போட்டிருக்கிறீர்கள் போலிருக்கிறது" என்றான்.

"ஸ்ரீமதி சாகியைப் பார்த்துத் திடுக்கிடுவானேன்?" என்று வினவினான் நாதன்.

"சீ! கங்கைக்கரையில்கூட இந்தப் பேச்சா? வெட்கமில்லையா உங்களுக்கு" என்று கோபித்தான் சாமி.

"கங்காதேவியிடம் திடீரென்று உனக்குப் பக்தி வந்தது போற்றத்தக்கதே, ஆனால் நாதன் கேள்வியிலிருந்து இப்படித் தப்ப முடியாது. அவளைப் பார்த்ததும் பைத்தியம் பிடித்ததுபோல் பிரமித்தாய், ஏன்?" என்று கேட்டேன்.

சாமியின் முகத்தில் கூச்சமும், கோபமும் தாண்டவமாடின. "உண்மையாகச் சொல்லுகிறேன். எனக்கும் புரியவில்லை. அவள் கண்களைப் பார்த்ததும் என் மனதில் ஏதோ ஒரு மாதிரி வேதனை உண்டாயிற்று. அவ்வளவுதான் தெரியும். இந்த வீண் வம்பை வளர்க்காதீர்கள்" என்று கண்டித்துவிட்டான் சாமி.

"நாங்கள் ஸ்நானம்செய்ய ஹரிகட்டத்திற்குப் போகிறோம்; நீங்களும் வருகிறீர்களா" என்று கேட்டுக்கொண்டு உள்ளே வந்தார் சாகி. "அப்படியே வருகிறோம்" என்று சொல்லிக்கொண்டு நாதன் எழுந்தான். அவனைக் கையைப் பிடித்துக் கீழே உட்காரவைத்து, 'எனக்குத் தூக்கக்கலக்கமாகவிருக்கிறது. இன்னும் ஒரு மணி கழித்துப் போகிறோம். நீங்கள் போய் வாருங்கள்' என்று சாமி அவரை அனுப்பிவிட்டான். நானும் நாதனும் கண்ணால் பேசிக்கொண்டு வாயால் மௌனம் சாதித்தோம்.

— 4 —

அன்று மாலை 4 மணிக்குக் கிளம்பி. கடைத்தெருவெல்லாம் சுற்றிக்கொண்டு ஹரிகட்டம் சேர்ந்தோம். அங்கே தினந்தோறும் சூரியாஸ்தமன சமயத்தில் கங்காதேவியின் பூஜை நடக்கிறது. ஜனங்கள் கூடுவதற்கு நல்ல மேடை அமைத்து நடுவில் ஒரு மணிக்கூண்டும் கட்டப்பட்டிருக்கிறது. இதுவும் புது டில்லியில் லக்ஷ்மிநாராயணன் கோவிலைப்போல் ஸ்ரீ ஜுகல்கிஷோர் பிர்லாவின் தர்மமாகும். அம்மேடையில் உட்கார்ந்து ஜலத்தின் ஓரத்தில் உட்கார்ந்து களைப்பின்றிக் கசடின்றி ஓயாமல் கல கல வென்றோடும் கங்காப்பிரவாகத்தின் இனிய சங்கீதத்தில் மூழ்கியிருந்தோம். சமுத்திரராஜனை நோக்கிச் செல்லும் கங்காதேவின் சலங்கைச் சப்தமென்று கற்பனை கூறிற்று.

$6\frac{3}{4}$-மணிக்கு நாலாபக்கங்களிலிருந்தும் மணியோசை கிளம்பிற்று. பல பெண்கள் தொன்னைகளில் சிறிய சுடர்கள் கொளுத்தி நதியில் மிதக்கவிட்டனர். ஆரத்தி ஆரம்பமாகும் தருணம், சாகி வந்து எங்களருகில் உட்கார்ந்தார். "உங்களை ஏன் நாள் முழுதும் காணவில்லை" என்று கேட்டார்.

'ஊரெல்லாம் சுற்றிக்கொண்டிருந்தோம். ஏன் தனியாக வந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

'இல்லை. சுகுணா அதோ உட்கார்ந்திருக்கிறாள்' என்று கையைக்காட்டினார். இப்பக்கம் திரும்பினோம். அவள் ஒரு மூலையில் உட்கார்ந்து ரோஜாவின் இதழ்களை நீரில் போட்டுக்கொண்டிருந்தாள்.

"நான் சற்று முன்னே போகிறேன். நீங்கள் ஆரத்தி பார்த்துவிட்டு வாருங்கள்" என்று நாங்கள் தடுக்குமுன் சாமி எழுந்து வேகமாகப் போய்விட்டான். சாகி சில நிமிஷங்கள் எங்களுடன் பேசிவிட்டுத் தம் மனைவியிருந்த இடத்திற்குப்போக எழுந்தார். ஆனால் அவளைக் காணவில்லை. கூட்டத்தில் கலந்து வேடிக்கை பார்க்கிறாளோவென்று தேடினோம். சாகியின் திகிலை வர்ணிக்க முடியாது. "ஒரு வேளை கங்கையில் விழுந்து விட்டாளோ? காலையில் கால் தவறியது முதற்கொண்டு அவள் நிலைமை சரியாக இருக்கவில்லை. அடிக்கடி கண்களில் கண்ணீர் ததும்பிக் கொண்டிருந்தது. வழக்கப்போலச் சாப்பிடவில்லை. கடைக்கு வர மறுத்துவிட்டாள். எவ்வளவோ பலவந்திதப் படுத்தி ஆரத்தி பார்க்க அழைத்து வந்தேன். நான் என்ன செய்வேன்" என்று பலவாறு புலம்பினார். இருட்டு வேளையில் இவர் ஏதாவது மூர்க்கத்தனம் செய்யாமலிருக்க வேண்டுமே என்று எங்களுக்குக் கவலை மேலிட்டது. நாதனுக்கு ஒரு நல்ல யோசனை தோன்றிற்று.

"ஒருவேளை அவள் வீடு போயிருக்கலாம். நீங்கள் உடனே அங்கேபோய்ப் பாருங்கள். நாங்களிருவரும் இவ்விடத்தை இன்னும் நன்றாகப் பார்த்துவிட்டுச் சீக்கிரம் வருகிறோம். எதற்கும் மனோதைரியத்தை விட்டுவிடக் கூடாது!" என்று கூறினான். அப்படியே சாகியும் துரிதமாக வீடுநோக்கிச் சென்றார்.

"இதென்ன பெரிய ஆபத்தாகிவிட்டதே! இப்படி இருவரும் சங்கேதம் செய்து கொண்டதுபோல் ஏன் போகவேண்டும்?" என்றான் நாதன்.

எனக்கும் ஒன்றும் விளங்கவில்லை. "சாமியும் சரி, அப்பெண்ணும் சரி, புத்தி பூர்வமாக எவ்விதத்தவறும் செய்யமாட்டார்கள். ஆனால் அவர்கள் இருவரும் வீட்டிலிருந்தால் சாகி சந்தேகப்படுவார். அனர்த்தமாகி விடும். நாமும் போவோம்" என்று நாதனுடன் தர்மசாலை அடைந்தேன். எங்கள் அறை வாசலில் சாகி பித்தம் பிடித்தவர் போல நின்றுகொண்டிருந்தார். அறைக் கதவு திறந்திருந்தது. நதிக்கரையோரமாகவிருந்த ஜன்னலருகில் சாமி உட்கார்ந்திருந்தான். அவன் காலடியில் சாஷ்டாங்கமாகக் கிடந்தாள் சுகுணா. அவள் விம்மி விம்மி அழுதுகொண்டிருந்தாள். சாமியின் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாகப் பெருகிக்கொண்டிருந்தது.

நான் உள்ளே நுழையப்போனேன். சாகியும் நாதனும் என்னைத் தடுத்தார்கள். பின் வரும் சம்பாஷணையைக் கேட்டோம். ஆனால் சுகுணா தமிழில் பேசுவதைக் கேட்ட சாகிக்கு அவளுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதென்ற சந்தேகம் பிறந்தது. அத்தருணத்தில் இது ஒரு நன்மையாகவே இருந்தது. இல்லாவிட்டால், அவர் என்ன செய்திருப்பாரோ?

— 5 —

சு: நீங்கள் என்னைவிட்டு இத்தனை நாள் எங்கே போயிருந்தீர்கள்? நாம் எங்கே இருக்கிறோம்? இது நம் வீடில்லையே? ஆஸ்பத்திரியா? நீங்கள் மருந்து கொடுக்கும் பொழுது மயக்கமாகவிருந்ததுதான் ஞாபகமிருக்கிறது.

சா: இதுதான் சொர்க்கமா? உன்னை எங்கேயாவது பார்க்கப் போகிறேனாவென்று ஏங்கிக்கொண்டிருந்தேன்.

சு: ஏன் அபசகுனமாகப் பேசுகிறீர்கள்? சொர்க்கத்தில்தான் நாமிருவரும் கண்ணீர் விடுவோமா? நல்ல வேளையாக நீங்கள் வந்துவிட்டீர்கள். சீக்கிரம் வாருங்கள் வீடு போகலாம்!

சா: வீடு எங்கே? அங்கே யார் இருக்கிறார்கள்?

சு: கண்ணன் இல்லையா? அவனைப் பார்க்காமல் என் கண் பூத்துவிட்டது.

சா: அவன் உனக்குப்பின் ஒரு வருஷத்தில் போய்விட்டான்.

சு: இதென்ன பேச்சு! நான் எங்கே போனேன்? அவன் எங்கே போய்விட்டான்?

சா. நீ சொர்க்கம் போனாய். உனக்குப் பின் அவனும் போனான். உன்னைக்கண்டதும் நானும் உங்களுடன் சேர்ந்துவிட்டதாக நினைத்தேன். ஆனால் அவனை இங்கே காணவில்லை. எங்கே இருக்கிறோம்?

சு: இப்படி நாம் ஒருவரையொருவர் கேட்டுக்கொண்டிருந்தால், போகும்வழி என்ன?

சா: எங்கே போகவேண்டும்? இங்கேயே பழையகாலத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்போம்.

சு: பேசுவதற்கு என்ன இருக்கிறது? நான் சுரமாகப் படுத்தபொழுது, நீங்கள் ஏன் அவ்வளவு கஷ்டப்படவேண்டும். நான் படுத்துக்கொண்டு நீங்கள் வேலைசெய்வதைப் பார்த்து என்னால் சகிக்கமுடியவில்லை.

சா: ஏன் அந்த நாட்களை நினைவூட்டுகிறாய். இதற்குமுன் 15 வருஷங்கள் நாம் ஈருடலும் ஓராவியுமாக இருந்த காலத்தை நினைத்தால் அளவில்லா ஆனந்தமும், சகிக்க முடியாத வேதனையும் உண்டாகின்றன.

சு: நான் தான் திரும்பி வந்துவிட்டேனே!

சா: இது நிஜமோ, பொய்யோ. கனவோ, நினைவோ, ஒன்றும் விளங்கவில்லையே?

சு: கண்ணன் எங்கே?

சா: அவன் போய்விட்டான் என்று சொல்லவில்லையா?

திடீரென்று சுகுணா தன் தலையிலடித்துக் கொண்டு, 'ஐயோ, ஐயோ' என்று கதறத் தொடங்கினாள். நாங்களிருவரும் உள்ளே ஓடினோம். நாதன் அங்கிருந்த ஒரு குடத்தை எடுத்துக் கீழே ஓடி, கங்காஜலத்தைக் கொண்டுவந்து இருவர் தலையிலும் கொட்டினான். அவர்கள் சிறிதுநேரம் மூர்ச்சை போட்டுப் படுத்துக்கிடந்தனர்.

சாகியும் உள்ளே வந்து தன் மனைவியின் முகத்தைப் பார்த்தவண்ணமாகவிருந்தார். சிறிது நேரத்தில் அவள் கண் விழித்து ஹிந்தியில், "பதிஜீ! என்னவாயிற்று? நான் எங்கிருக்கிறேன்" என்று கேட்டாள். எழுந்து உட்கார்ந்து திரும்பிப் பார்க்கையில் சாமி படுத்துக்கிடந்ததைக் கண்டு துணியால் முகத்தை மூடிக்கொண்டு எழுந்து தன் அறைக்கு ஓடினாள். சாகியும் அவள் பின் சென்றார். சாமியைப் பார்த்துக்கொள்ளும் படி நாதனிடம் சொல்லிவிட்டு, நானும் அவ்வறைக்குள் போய், சாகியைக் கையைப் பிடித்து வெளியில் அழைத்து வந்தேன்.

பிரபல டாக்டர்கள் இதை வைத்ய சாஸ்திரத்திற்கே ஒரு கன் கொடையெனப் போற்றுகிறார்கள்.
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும் அல்லது
ஜம்மி வெங்கட்ரமணய்யா அ சன்ஸ்.
1/1, பிராட்வேல் ரோட், மைலாப்பூர், மதராஸ்.
மற்றும் ரங்கூன், கல்கத்தா, லக்ஷ்மணபுரி,
பெங்களூர், திருச்சிராப்பள்ளி.

பிராஞ்சு:
பெரிய தெரு,
கும்பகோணம்.

சாமியும், சுகுணுவும் தம் பிரக்ஞை மறந்து பேசிக்கொண்டிருந்ததைச் சுருக்கமாக அவருக்கு எடுத்துரைத்தேன். "பக்தி மிகுந்தவர்களுக்குக் கங்காஸ்நானத்தால் பூர்வ ஜன்ம நினைவுகள் திரும்பக்கூடுமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றனவல்லவா? உம் மனைவிக்கும் அவ்வித நினைவு மீண்டிருக்கவேண்டும். நல்ல வேளையாக இப்பொழுது இந்த ஜன்மத்தின் நினைவு இல்லை. இரண்டும் ஒரே காலத்தில் இருந்தால் மிகவும் கஷ்டமாக இருந்திருக்குமல்லவா? இதைப்பற்றி ஸ்ரீமதி சாகியிடம் ஒன்றும் சொல்லாதீர்கள்" என்றேன். சாகிக்குச் சமாதானமாகவில்லை. ஆயினும் தம் மனைவி மீது எவ்விதக்குற்றமுமில்லை என்று ஒப்புக்கொண்டார். அதற்குமேல் ஒன்றும் செய்யமுடியாதென்று எங்கள் அறைக்குப் போனேன். அப்பொழுதுதான் சாமி மூர்ச்சை தெளிந்தெழுந்தான். அவன் முகத்தில் முறுவல் பூத்தது. கண்களில் மட்டும் கண்ணீர் வடிந்தது.

"நான் ஓர் அற்புதக் கனவுகண்டேன்."

"அக்கனவு எனக்கும் தெரியும்" என்று நாதனும் நானும் ஏககாலத்தில் கூறினோம். அந்தச் சம்பாஷணையை ஆதியோடந்தமாகச் சொன்னோம். நான் தூக்கத்தில் உளறியிருக்கவேண்டும் என்றான் சாமி.

நாங்கள் அதற்குமேல் ஒன்றும் சொல்லவில்லை. அன்றிரவே ரயிலில் புறப்பட்டுவிட்டோம். சாமி முதலில் தூங்கிவிட்டான்.

"உண்மையாகச் சுகுணு முன் ஜன்மத்தில் சாமியின் மனைவியாக இருந்திருக்க முடியுமா?" என்றான் நாதன்.

"ஏன் முடியாது? அல்லது அம்மனைவியின் ஞாபகங்கள் இப்பெண்ணிடம் வந்து சேர்ந்திருக்கலாம். எப்படி ஒரு கிராமபோன் தட்டில் பதிக்கப்பட்ட பாட்டு பாடியவருடைய சொத்தாயில்லாமல், பிளேட் வைத்திருப்பவருக்குப் போய்விடுகிறதோ, அப்படி வாழ்க்கை நினைவுகளெல்லாம் உலகத்தின் பொதுவுடைமையாகிவிடுகின்றன. அவைகளைக் கிராமபோன் பிளேட்போல் திரும்பி அனுபவிக்கச் சிலர் சக்தி பெறலாம். எந்த நடிகனும் எப்பாத்திரமாகவும் நடிக்கலாமல்லவா? அம்மாதிரியே எம்மனிதனும் தனக்குமுன் சென்ற மற்றவருடைய வாழ்க்கை அனுபவங்களைப் பிரதிபலிக்கும் கருவியாகக்கூடும்" என்று தொடங்கினேன். நடுவில் தடுத்து "போதும் இந்தப் பிரசங்கம். இக்காட்டில் நாம் எல்லோரும் குருடர்கள், இங்கு நடந்ததை ஒருவருக்கும் சொல்லாதே. சாமியின் இரண்டாம் மனைவி கேட்டால் அவன் பாடு மோசமாகிவிடும்" என்றான் நாதன்.

வினைப்பயன்

எஸ். கிருஷ்ணன்

ஆல்பர்ட் குடிசைக்குள் நுழையும்போது அந்தி மயங்கிவிட்டது. கையிலிருந்த தூக்குப் பாத்திரத்தைக் கீழே வைத்துவிட்டு அவன் தன் மனைவி படுத்திருந்த கட்டில் பக்கம் போனான். கண்களை மூடிக்கொண்டு படுத்திருந்தாள் வயோலா. காலை அவன் வேலைக்குப் போகும்போது வாய்விட்டு ஓயாமல் இருமிக்கொண்டிருந்தவள் இப்பொழுது இருமவில்லை. ஆனால் அடிக்கடி அவள் உடம்பு குலுங்கியது. மூச்சும் சிரமப்பட்டுத்தான் விட்டுக்கொண்டிருந்தாள். விலா எலும்புகள் அடிக்கடி அசைவதைப் பார்த்தால் தோலைக்கிழித்துக்கொண்டு வெளியே கிளம்பப்போகின்றனவோ என்று தோன்றின. அவளையும் ஆல்பர்ட்டையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள் அவனுடைய தாய்.

சில நிமிஷங்கள்வரை மௌனமாய் மனைவியைக் கவனித்துவிட்டு "அம்மா டாக்டர் வந்தாரா"? என்றான் ஆல்பர்ட்.

"வந்தார்.........அவர் ஒன்றும் சொல்லவில்லை.. மருந்து ஒன்றும் கொடுக்கவில்லை" என்றாள் தாய்,

"வயோலா" என்று கூப்பிட்டான் ஆல்பர்ட்.

"கொஞ்ச நாழியா அதுக்குக் காதும் கேட்கலை; கண்ணும் நேரே திறந்து பார்க்கவில்லை". என்றாள் கிழவி.

"சரி, நான் போய் டாக்டரை அழைத்து வருகிறேன்" என்று கிளம்பினான் ஆல்பர்ட்.

கிழவி பதிலே சொல்லவில்லை. அவன் டாக்டரிடம்போய்ப் பயன் இல்லை என்பது அவளுக்குத் தெரியும். ஆனால் அதை அவள் தன் வாய்விட்டுச் சொல்ல விரும்பவில்லை.

ஆல்பர்ட் தன் வாழ்நாளிலேயே அவ்வளவு வெகமாக ஓடி இருப்பானோ என்னவோ? டாக்டர் வீட்டை அடைந்தான்.

"டாக்டர், வீட்டுக்குக் கொஞ்சம் வருவீர்களா? வயோலா கண்ணைத் திறக்கமாட்டேன் என்கிறது. காது கேட்கவில்லை......"

டாக்டர் வயது முதிர்ந்தவர். அன்பே உருவானவர்.

'இனிமேல் நீயும் நானும் ஒன்றும் செய்வதற்கில்லை பெர்டீ! அவளுக்கு ஆயுசு அவ்வளவுதான். நான் சாயங்காலம் போய்ப் பார்த்தாயிற்று. நீ அவள் பக்கத்திலிருக்காமல் இங்கே ஏன் வந்தாய்?" என்றார் அவர்.

"ஆனால் காலையில் நினைவு இருந்தது அவளுக்கு" டாக்டர்! நீங்கள் கொஞ்சம் வர மாட்டீர்களா?" என்றான் ஆல்பர்ட்மேலும்,

டாக்டருடைய சுருக்கம் விழுந்த முகத்தில் வருத்தம் நிழலித்தது. "அது வியாதியின் குணம் பெர்டி! கடைசி நிமிஷம்வரை ஞாபகம் இருக்கும், நான் வருகிறேன். டிரைவர்!" என்றார் அவர்.

கார் வந்ததும் "என்னோடு வா, ஏறு காரில்" என்றார்.

ஆல்பர்ட் எதையோ யோசித்துக்கொண்டு ஒரு கணம் நின்றபின் "நீங்கள் போய்ப் பாருங்கள், நான் கடைக்குப் போய்விட்டு வருகிறேன்" என்று கூறினான்.

ஆல்பர்ட் கடைவீதிக்குப்போய் ஒரு புடவை வாங்கினான். அன்றுதான் இரண்டு மாத போனஸ் கிடைத்திருந்தது.

கடையிலிருந்து வெளியே வந்தவன் வீட்டை நோக்கி விரைவாய் நடக்கலானான்.

சற்று தூரத்தில் இருந்த மாதாகோயில் மணி யாருடைய விவாகத்துக்காகவோ ஒலித்துக்கொண்டிருந்தது. அந்த மணி ஓசை ஆல்பர்ட்டின் உள்ளக்கிடக்கையில் புதைந்துகிடந்த நினைவுகளைத் தட்டி எழுப்பியது. ஒளியும் இன்பமும் நிறைந்த குழந்தைப் பருவம், அன்பும் ஆசையும் அலைமோதிய வாலிபம், எல்லாம் நினைவுக்கு வந்தன. அவனும் வயோலாவை மணந்துகொண்ட நன்னாள் நினைவுக்கு வந்தது.

இருவரும் சிறுவயது முதல் ஒன்றாக விளையாடி வளர்ந்த ஒரே கிராமவாசிகள். எத்தனையோ தடவை மாதாகோயில் மணி அடிக்கும்போதெல்லாம் "நாம் இருவரும் கலியாணம் பண்ணிக்கொள்கிறபோதும் இதேமாதிரி மணி அடிக்கும் அல்லவா?" என்று வயோலா அவனைக் கேட்டதுண்டு. அன்றெல்லாம் சாவைக் குறிக்கவும் மணி

அடிக்கும் என்பதுகூட அவர்களுக்குத் தெரியாது! பிறகு வயோலாவின் பாட்டி இறந்தபோது மாதாகோயில் மணி மெள்ள மெள்ள அடித்தது. அப்பொழுதுதான் சாவு மணி என்ன என்று ஆல்பர்டும் வயோலாவும் தெரிந்துகொண்டார்கள்.

இருவருடைய தகப்பன்மார்களும் கொத்தர்கள். ஆகவே வாலிபப் பருவம் அடைந்த ஆல்பர்ட் வயோலாவை மணந்து கொள்ள விரும்பியபோது யாதொரு தடையும் இருக்கவில்லை.

விவாகம் ஆகிச் சில மாதங்களுக்கெல்லாம் ஆல்பர்ட்டின் தகப்பனுர் இறந்தார். கொஞ்ச நாட்களுக்குப்பின் வயோலாவின் தகப்பனுரும் போய்விட்டார்.

பிறகு அந்த ஊரிலிருக்கப் பிடிக்காமல் ஆல்பர்ட் இந்தச் சிமிண்டு உற்பத்திச் சாலைக்கு வந்து சேர்ந்தான். சம்பளம் அதிகம் இல்லாவிட்டாலும் வாழ்க்கை அதிகம் சிரமமில்லாமல் சென்றது. அவன் தாய் வயோலா இருவரும் மிக ஒற்றுமையுடன் இருந்ததால் அவன் எவ்வளவோ இன்பமாய்த்தான் இருந்தான்.

இரவில் வெகுநேரம் வரை அவன் கைகால் களைப் பிடித்துவிட்டுக்கொண்டிருப்பாள் வயோலா. அவனுடைய தோழர்கள் எல்லோரும் உடல் சிரமம் தெரியாமலிருப்பதற்காகக் கள்ளுக்கடைக்குச் செல்வார்கள். ஆல்பர்ட்டையும்தான் அழைப்பார்கள். ஆனுல் அவன் போகமாட்டான். வீட்டில் வயோலாவிடம் சொல்வான் — "எல்லோரும் என்னைக்கூப்பிட்டா. நான் கூடப்போகலாமா என்று யோசித்தேன். உடம்பிலே அவ்வளவு வலி. ஆனுல் அந்த வலி எல்லாம் உன்னைப் பார்த்தாலே போய்விடும் என்று எண்ணிக்கொண்டு வந்துவிட்டேன். கள்ளை விட வெறிதரக்கூடிய வயோலா இருக்கிருளே என்று மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டேன்."

"அப்படியானுல் கள் வெறி எப்படி இருக்கு என்று பார்த்திருக்கிருயா நீ? நான் போய்விட்டால் அப்புறம் குடித்துவிட்டு உன் அம்மாவைக் கஷ்டப்படுத்துவாயாக்கும்; இல்லையா?" என்பாள் வயோலா.

"நீ போய்விட்டால் அப்புறம் நானும் உன்னோடே வந்துவிடமாட்டேனு? சரி, அதெல்லாம் பேசுவானேன்; நான் குடித்ததே கிடையாது. எல்லோரும் ஆடுகிறதைப் பார்த்தால் ஒருநாள் குடித்துவிட்டு வந்து ஆடி உன்னை எல்லாம் மிரட்டணும்போலத் தோணுகிறது" என்பான் ஆல்பர்ட் குறும்பாக.

"ஆமாம், ஆமாம்! நீ குடிச்சுக்கிட்டு மட்டும் வா, சொல்கிறேன். உன் காலடியிலே நாக்கைப் பிடுங்கிப் போட்டுக் கொண்டு பிராணனை விட்டுவிடமாட்டேனு?" என்பாள் வயோலா.

"நீ பிராணனை விடவும் வேண்டாம், நான் குடிக்கவும் இல்லை" என்பான் ஆல்பர்ட்.

ஆறுமாதங்களுக்குமுன் ஒருநாள் ஆல்பர்ட் வீட்டுக்குள் நுழையும்போது அவன் தாய் தனக்குத்தானே முனகிக்கொண்டிருந்தாள். "இந்தக் காலத்துப் பெண்களே இப்படித்தான். சொன்னுலே கேட்காது" தன் மனைவியைப்பற்றித்தான் அப்படிச் சொல்லுகிருளோ என்று சந்தேகப்பட்டு "என்ன சொல்கிருய் அம்மா?" என்றுன் ஆல்பர்ட்.

"அதோ பார் பெர்டி! பைப்படியிலே வயோலா சொல்லச் சொல்லக் கேட்காமல் என் புடவையைத் தோய்க்கிறதைப் பார். காலையிலே என்னுல் குளிக்க முடியவில்லை. சாயங்காலம்தான் குளிக்க முடிந்தது. அதுக்காக நாளைக் காலையிலே புடவையைத் தோய்த்துக்கொள்ளமாட்டேனு? வயிறும் பிள்ளையுமா இப்படி உழைக்காதே என்றுல் கேட்டால்தானே?"

"அப்பாடா! இதுக்குத்தானு இப்படி முனகுகிருய்?" என்றுன் ஆல்பர்ட் சிரித்துக்கொண்டே.

"இதுமட்டுமில்லை. இதோ இந்தச் செடிகளுக்கெல்லாம் இத்தனை நாழி தண்ணீர் இறைத்துக்கொண்டிருந்தது. நேற்றைக்கு என் கையிலிருந்து குடத்தையே பிடுங்கிக் கொண்டுபோய்விட்டது," என்று குற்றச்சீட்டைப் படித்தாள் தாய்.

இதற்குள் வயோலா புடவையைத் துவைத்துக்கொண்டு வந்தாள். ஆல்பர்ட் சிரித்துக்கொண்டே "அம்மா சொல்கிறபடி கேட்கமாட்டேங்கிருயாமே வயோலா" என்றுன்.

"ஆமாம். அம்மா எல்லாம் சரியாய்ச் சொல்லிட்டா. நான் தப்பா செய்துவிட்டேன் இல்லையா? இந்த வயசு காலத்திலே அம்மா உழைக்க நான் கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்தபடியே பார்க்கணுமாக்கும்? அழகாயிருக்கு!" என்றுள் வயோலா.

"நான் வந்து செய்கிறேன்" என்றுன் ஆல்பர்ட்.

"ஆமாம், நீ பகல் முழுவதும் உழைத்துப் புறம் வந்து வீட்டு வேலையைச்செய், நான் சும்மா உட்கார்ந்திருக்கிறேன்! புத்தியைப் பாரு! உனக்கு ஒன்னும் தெரியாது. வேலை செய்வது நல்லதுதான். உடம்பு அசையனும் என்னுதான் அடுத்த வீட்டு அம்மா என்கிட்ட சொல்லிற்று." என்றாள் வெட்கத்துடன். அன்று வயோலா மூன்றுமாத கர்ப்பிணி.

"பணம் காசில்லாவிட்டாலும் அன்புதான் வேணும் பெர்டீ. எனக்கு அம்மாவும் பிள்ளையுமாய் நீங்கள் செலுத்துகிற அன்புக்கு நான் என்ன ஈடுசெய்வேன் பெர்டீ?" என்று ஆனந்தக்கண்ணீர் வடிப்பாள் வயோலா.

ஆனால் ஐந்து மாதங்களுக்குமுன் அந்த இன்ப வாழ்வு கலைந்தது ஒரு கனவைப் போல். ஒளிக்குப்பின் இருள் சூழ்ந்து விட்டது.

சிமிண்ட் உற்பத்திச்சாலையில் வேலை செய்தவர்களுக்கு முதலாளிகள் இரண்டு மாத போனஸ் கொடுப்பதாகச் சொல்லிக் கடைசியில் லாபம் அதிகம் இல்லை என்று போனஸ் கொடுக்க மறுத்தார்கள். இதற்காகத் தொழிலாளிகள் அனைவரும் வேலை நிறுத்தம் செய்தார்கள்.

இரண்டு வாரங்கள்வரை கம்பெனி முதலாளிகள் அசையவில்லை. வாரச் சம்பளம் வாங்கி வாழ்க்கை நடத்தும் தொழிலாளிகள் பாடு கஷ்டம் ஆகிவிட்டது. ஆல்பர்ட் இரண்டு நாட்களாகக் கஞ்சிதான் குடித்தான். வயோலா வீட்டில் சுருண்டு படுத்திருந்தாள்.

இதற்கிடையில் கம்பெனி முதலாளிகள் எங்கிருந்தோ ஒரு புதிய கூட்டம் தொழிலாளிகளை வரவழைத்தார்கள். பழைய தொழிலாளிகளைத் தம் விடுதிகளை இருபத்து நான்கு மணி நேரத்தில் காலி செய்யும்படி நோட்டீசு கொடுத்தார்கள்.

இந்தத் தகவல் கிடைத்ததும் பழைய தொழிலாளிகள் நேராகப் பாக்டரி வாயிலுக்குப்போய், புதிதாய் வந்த தொழிலாளிகளிடம் திரும்பிப் போகும்படி கேட்டார்கள். அவர்கள் போகாமல் மிரட்டினர். போலீசும் தயாராய் இருந்தது. நன்றாக அடிதடி நடந்தது. ஆல்பர்ட்டின் முதுகிலும் நல்ல அடி.

வேதனையுடன் வீடு திரும்பினான் ஆல்பர்ட். வழியில் அவன் நண்பர்கள் சிலர், "வா அண்ணே, அடிபட்டிருக்காய். வலி தெரியாமலிருக்கும் கடைப் பக்கம்போய் வரலாம்" என்று அவனைக் கள்ளுக்கடைப் பக்கம் இழுத்தார்கள். அன்று ஆல்பர்ட் சைத்தானுக்கு அடிமையானான். தன்னையும் மீறி மனச்சாட்சிக்கு விபரீதமாய் நடந்துவிட்டான் அவன்.

கள்ளுக்கடையிலிருந்து தள்ளாடிக் கொண்டே வீட்டுக்குத் திரும்பிவந்தான். குடிசைக்குள் நுழைந்தபோது அவனுக்கு கண்கூட நேராகத் தெரியவில்லை. "ஐயோ" என்று ஒருசத்தம் கேட்டது. மறுநிமிஷம் அவன் கால் இடறிக் கீழேவிழுந்தது தான் தெரியும்.

நடுநிசிக்குப்பின் கண் திறந்து பார்த்தான் ஆல்பர்ட். அவனை எழுப்பிய தாய் "போய் டாக்டரைக் கூட்டிவா ஆல்பர்ட்" என்றாள். வயோலா படுக்கையில் புழுப்போல் துடித்துக்கொண்டிருந்தாள்.

டாக்டர் வந்து பார்த்துவிட்டுக் கவலையுடன், கர்ப்பப் பையில் அல்லவா அடிபட்டிருக்கு; எங்கேயாவது விழுந்தாளா?" என்றார்.

"இல்லை; கொஞ்சநேரம்முன் இவன் கால் இடறி வயோலாமேல் விழுந்துவிட்டான்" என்றாள் பெர்டியின் தாயார்.

"அப்படியா!" என்று ஆல்பர்ட்டை ஏற இறங்கப் பார்த்துவிட்டு ஏளனமாய்ச் சிரித்தார். ஆல்பர்ட் வெட்கித் தலைகுனிந்தான்.

ஆஸ்பத்திரிக்குப் போய் மருந்து வாங்கினான். செலவுக்கும் டாக்டரே ஐந்து ரூபாய் கொடுத்துவிட்டு "பெர்டீ, நீ செய்த தவறு எவ்வளவு பெரிது தெரியுமா? ஆண்டவனிடம் மன்னிப்புக் கேள்" என்று கூறினார் அவர்.

கர்ப்பச் சிதைவு ஏற்பட்டது முதல் வயோலாவின் உடம்பு சீராகவில்லை.

ஒரு வாரத்துக்குப்பின் வேலை நிறுத்தம் செய்தவர்கள் சில நிபந்தனைகளின்பேரில் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்கள். புதுத் தொழிலாளிகளுக்கு முன் தொகையாய்க் கம்பெனி கொடுத்த பணத்தை வேலை நிறுத்தம் செய்தவர்கள் ஈடுசெய்து கம்பெனிக்குக் கொடுத்தால் இரண்டுமாதப் போனஸ் கொடுப்பதாக ஒப்புக்கொண்டனர். ஆறுமாதம்வரை எல்லோர் சம்பளமும் கால் பங்குக்குமேல் குறைந்துவிடும் என்றாகிவிட்டது. யுத்தத்தால் விலைவாசி ஏறத்தொடங்கியது. வயோலாவும் பாக்டரியில் வேலைசெய்யச் சென்றாள் கூடை மண்வெட்டியுடன்.

N.A.S. 153/5

இரண்டு மாதங்கள் ஓடின. வயோலா பலஹீனமாயிருந்தாள். ஆயினும் வேலைக்குச் சென்று வந்தாள். அவள் உடம்பு இளைத்தது. ஒளி பொருந்திய கண்கள் சோபை இழந்தன. டாக்டர் ஏதேதோ மருந்து கொடுத்தார். ஆனால், மருந்து உடம்பிலே பிடிக்கவில்லை. "ரத்தமே இல்லையே உடம்பிலே." என்றார் அவர்.

சில நாட்களில் வயோலா படுத்துவிட்டாள். அவள் கண்கள் பள்ளத்தில் ஆழ்ந்தன. தினமும் ஜ்வரம் வரலாயிற்று. இருமல் வந்தது. டாக்டர் சொன்னார்— "நல்ல ஆகாரம், அதாவது பழங்கள், எளிதில் ஜீர்ணமாகக்கூடிய ஹார்லிக்ஸ், குளோக்கோஸ் எல்லாம் கொடுக்கவேணும். காற்றோட்டம் உள்ள இடம் வேணும். இங்கே உள்ள சிமிண்ட தூள் கலந்த காற்று உதவவே உதவாது."

ஆனால் ஒரு தொழிலாளிக்கு இதெல்லாம் முடியுமா? அவன் சக்திக்கு மீறியவை இவை. மனைவியின் நிலைமையை எண்ணி வருந்தத்தான் அவனால் முடியும். திக்கற்றவனுக்குத் தெய்வம் துணை. ஆம், பரமபிதாவிடம் பாரத்தைப் போட்டான் அவன்.

வயோலா தன்னால் முடியாவிட்டாலும் சில சமயம் வீட்டுவேலையில் ஆல்பர்ட்டின் தாய்க்கு உதவி செய்வாள்.

ஆல்பர்ட்டின் தாய் வயோலாவுக்கு ஓய்வு கொடுக்க முயன்றாள். ஆனால் வயோலா சொல்வாள்; "அம்மா, இனிமேல் எத்தனை நாள் நான் இருக்கப்போகிறேன்? என்னால் முடிந்த உதவியைச் செய்தேன் என்ற ஆறுதலோடுகூட ஆவது நான் போகிறேன் அம்மா."

ஆல்பர்ட்டின் தாயின் உலர்ந்த கன்னங்களின் சுருக்கங்களில் கண்ணீர் தேங்கிவிடும்.

ஆல்பர்ட் இரவில் அவள் அருகே உட்கார்ந்து உள்ளத்தில் குமுறிக்கொண்டிருக்கும் சோகத்தை அடக்கமுடியாமல் தவிப்பான். அவள் உடம்பைத் தடவிக்கொண்டே உட்கார்ந்திருப்பான்.

"வேண்டாம் படுத்துக்கொள், பெர்டி! காலையில் வேலைக்குப்போய் பகலெல்லாம் உழைத்தாயிற்று. உடம்பு வலிக்கவில்லையா? போய் படுத்துத் தூங்கு" என்று கெஞ்சுவாள் வயோலா.

நாட்கள் ஓடின. கிறிஸ்துமஸ் வந்தது. வயோலாவைப் பார்க்க ஒரு தோழி வந்தாள். அவள் புதுவிதமான ஒரு புடவை கட்டிக்கொண்டிருந்தாள். அதைப் பார்த்துக்கொண்டே வயோலா சொன்னாள்— "புடவை நன்றாயிருக்கு பார்த்தாயா?"

"நீயும் உடம்பு சொஸ்தமாய் எழுந்திரு. உனக்கு இதுமாதிரி எத்தனை புடவை வேணுமானாலும் ஆல்பர்ட் வாங்கித்தருவான்" என்றாள் பெர்டியின் தாய்.

"அதுக்குச் சொல்லவில்லை அம்மா! நன்றாயிருக்கிறதே என்றுதான் சொன்னேனம்மா. இனிமேல் அந்த ஆசை எனக்கில்லை" என்று கூறினாள் வயோலா.

அந்தச்சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்த ஆல்பர்ட்டின் இதயம் பிளந்துவிடும் போல் இருந்தது.

"ஒரு தடவை தவறியதற்காக இந்தமாதிரி என்னைச் சோதிக்கிறாய் பரமபிதாவே!" என்று கேட்டு விம்மினான் ஆல்பர்ட்.

சென்ற ஒருவாரமாக வயோலாவின் உடல் நிலை கவலைக்கிடமாகியிருந்தது. அவனுக்கு வேலைக்குப் போகவே இஷ்டமில்லை. ஆனால் வயிறு பெரிது. அவன் பட்டினி கிடக்கத் தயார். ஆனால் வயது முதிர்ந்த தாய்? சோகமே உருவெடுத்து உட்கார்ந்திருந்தாள் அவள்.

* * *

யோசனையில் ஆழ்ந்தவனாய் அவன் குடிசைக்குள் நுழைந்ததும், டாக்டர் "போய் வருகிறேன்" என்று விடை பெற்றுக்கொண்டே வெளியே வந்ததும், சரியாய் இருந்தது.

கையிலிருந்த புடவையுடன் அவன் வயோலாவின் அருகே சென்றான். வயோலா கண்களைத் திறந்து சுற்றும் ஒரு முறை பார்த்தாள். அவள் அருகே போய் உட்கார்ந்துகொண்டான் ஆல்பர்ட். வயோலா வேகமாய் மேல்மூச்சு விட்டுக்கொண்டிருந்தாள். மிகச்சிரமத்துடன் "பெர்டி...நான்... போகிறேன்" என்றாள் அவள். தன் இரு கைகளையும் அவன் மடியில் போட்டுக்கொண்டாள்: அவளுடைய கண்கள் மெள்ள மெள்ள மூடின. மூச்சு மெதுவாய் அடங்கியது. அவள் கடைசியில் சென்றுவிட்டாள் வாரா வழியில்.

ஆல்பர்ட் உதட்டைக் கடித்துக்கொண்டே "வயோலா சொன்னபடியே செய்துவிட்டாள். ஒரு நாள் செய்த தவறுக்கா இவ்வளவு தண்டனை!" என்றான்.

எழுந்து தன் கையிலிருந்த புடவையைத் தாயிடம் கொடுத்துக்கொண்டே "அம்மா, நான் அந்தப்பக்கம் போகிறேன்; வயோலாவுக்கு இதைக் கட்டு. அவள் கடைசி ஆசையையும் தீர்த்துவை. உயிரோடுதான் ஆசையை நிறைவேற்றிக்கொள்ளாமல் போய்விட்டாள்........" அவன் தொண்டை நெரிந்தது.

மார்க்ஸியம்

யோகி சுத்தானந்த பாரதியார்

புதிய ரெயின்லாந்து கெஜட்டில் மார்க்ஸ் கொடுங்கோலாட்சிமேல் தீப்பறக்கும் எரிச்சலே வாரிவீசினான். ஏழைத்தொழிலாளரை ஏமாற்றிப் பிழைக்கும் பணக்கார முதலாளிகளை ரோஷம் வரும்படி கண்டித்தான். ருஷ்ய—ப்ரஷ்ய யதேச்சாதிகாரிகளுக்கு "உங்கள் அகம்பாவச் செருக்கு அழியும்" என்று சவால்விட்டான். மார்க்ஸின் பொதுவுடைமை ஆவேசம் தொழிலாளர் நரம்புகளில் விறுவிறுப்புடன் ஏறியது.

"உலகம் உலகோ உடைமையடா
உலகச் செல்வம் போதுமையடா"

என்று அவர்கள் கர்ஜித்தெழுந்தனர். செல்வரும் சுயேச்சாதிகாரிகளும் அஞ்சிக் கொடுங்கோலைத் திட்டினர்; துப்பாக்கியை நீட்டினர். தொழிலாளர்—

நெஞ்சுரங்கொண்டோம்—உங்கள்
வஞ்சமும் கண்டோம்
அஞ்சுதலில்லை—செல்வக்
கஞ்சருக்கினி!
பாட்டாளிக்கே—இந்த
நாட்டிலுரிமை!—பணக்
கோட்டைக்குப் பயப்பட
மாட்டோமடா!

என்று ஊர் ஊராகக் கிளம்பிக் கூட்டமும் கலகமும் நடத்தினர்.

மார்க்ஸின் எண்ணங்கள் அப்படி ஏழைத்தொழிலாளிகளைக் கவர்ந்தன. கொலோனில் பெரிய புரட்சியே நடந்தது. ஜெர்மன் அரசாங்கம் கடுமையான அடக்குமுறைகளை விதித்தது. பிரான்ஸையும் தாண்டிவிட்டது. இராணுவதர்பாரும் தடபுடலாக நடந்தது. புதிய ரெயின்லாந்து பத்திரிகையைப் படிப்பவருக்கும், ஆதரிப்பவருக்கும் அச்சிடுவோருக்கும் ஒற்றர் மிரட்டலும் இராணுவத் துப்பாக்கியின் உறுமலும் பலமாயிருந்தன. ஜெர்மனிக்குள் பத்திரிகை வரக்கூடாது; சந்தாதாரர்கூட அஞ்சினர். அச்சிடுவோர் தொடை நடுங்கினர். பத்திரிகை அச்சகத்திற்கு அச்சகம் மாறியது. ஆனால் சந்தாதாரர் குறைந்தனர். அச்சுக்கூலிக்குக்கூட இழுபறிதான். மார்க்ஸ் ஐரோப்பாவைச் சுற்றிச் சில பிரசங்கங்கள் செய்து பணம் கொண்டுவந்தான். ஒரு வாரத்தில் பணம் செலவழிந்துபோனது. ஜெர்மனி அவனை, "போ வெளியே" என்று தள்ளிவிட்டது. பத்திரிகை கடனில் மூழ்கியது. கடைசி இதழ் சிவப்பு மையில் அச்சிட்டு வெளிவந்தது. அதுமட்டும் 20,000 பிரதிகள் விற்றது. மார்க்ஸ் தன் சாமான்களை எல்லாம் விற்றுக் கடனை அடைத்தான். பாரிசுக்கு வந்தான்; குடும்பமும் வந்தது. அப்போது அங்கே புரட்சிப்புயல் வீசிக்கொண்டிருந்தது. ஒரு மாதம் சென்றது. ஒரு பிரெஞ்சு சிப்பாய் வந்து சர்க்கார் உத்தரவை நீட்டினான். என்ன உத்தரவு? "போ வெளியே" தான். மார்க்ஸ் மூன்று குழந்தைகளுடனும், பத்துமாத கர்ப்பிணியான மனைவியுடனும் 1849ல் லண்டனுக்கு வந்துசேர்ந்தான்.

லண்டனில் முதலாளிகளின் ஆதிக்கமே பலமாயிருந்தது. தொழிலாளர் நாய்ப்பாடுபட்டு அரைக் கஞ்சி குடித்தனர். ஜெர்மனியிலிருந்து பல தொழிலாளர் இங்கிலாந்தில் வந்து பிழைப்புத் தேடினர். அந்த ஏழைகளுக்கெல்லாம் ஏழை மார்க்ஸ் ஆறுதல் கூறித் தன்னாலான உதவி செய்தான். மார்க்ஸ் லண்டனில் ஒரு பொதுவுடைமைச் சங்கம் நடத்தினான். ஒரு பத்திரிகையும் தொடங்கினான். பத்து மாதத்துடன் பத்திரிகை நின்றது. இச்சமயம் ப்ரஷ்யா பொதுவுடைமைக்காரரை வேட்டையாடியது. பலர் சிறைப்பட்டனர்.

எங்கும் அடக்குமுறை; இருள்; இராணுவ மிரட்டல்; அதிகாரத்திமிரின் அட்டகாசம்! மார்க்ஸ் தன் கொள்கை நிறைவேறக் காலமில்லை என்றறிந்தான். வறுமை அவனைப் புலிபோலச் சூழ்ந்தது.

பணமில்லை; செல்வர் அவனைப் பகைத்தனர். நண்பர் அடக்குமுறைகளால் சிதைந்தனர்; பயந்தனர். உற்றார் உறவினர் எள்ளி நகையாடினர். துன்பம் துயரம்! கவலை! கொடுமை! கண்ணீர்! குழந்தைகள் 'பசி, பசி' என்றழுகின்றன. பொறுமையுள்ள தாய் தன் மார்பிலுள்ள பாலை ஊட்டுகிறாள்—கவலைப் பாலை! இரத்தப் பாலை! பணமில்லை, உணவில்லை; வீடில்லை; வீட்டு வாடகைதர வக்கில்லை; நண்பர் ஆதரவில்லை; தட்டுமுட்டுச் சாமான்களைக் கூட ஏலம்போட்டுப் பசியாறும் கதி வந்தது. துணிமணிகளைக்கூட விற்றுண்ணும் கொடிய வறுமை வந்தது. குழந்தைகளுக்கு நோய் வந்தால் வந்ததுதான்; மருந்து வாங்கமுடியாது. ஒரு குழந்தை கொடிய நோயால் வருந்தி, தாய் மடியில் இறந்தது; அதைச் சவப் பெட்டியில் வைத்து அடக்கம் செய்யக்கூடப் பணமில்லை! கடன் வாங்க நேர்ந்தது! ரொட்டிமுதல் துணிவரையில் கடன்! தினம் கடன்! வீட்டுக்காரன் வெளியேறு என்று துரத்துகிறான்; வாடகை பாக்கிக்குச் சாமான்களைக் கைப்பற்றிக்கொள்கிறான். மார்க்ஸ் கடைசி காலத்தில் பரம ஏழைகள் வசிக்கும் பகுதியில், ஒரு சிறு குடிலில் வசித்தான். அதில் இரண்டே சிற்றறைகள். அவைகள் தூசியும் துப்பட்டையும், ஓட்டையும் உடைசலுமாயிருக்கும். அங்கே மனிதர் வசிக்கமுடியாது. அப்படிப்பட்ட முறையிலும், உலகின் சிறந்த லட்சியவாதியான மார்க்ஸ் வசித்தான். பகலெல்லாம் அவன் லண்டன் புத்தகசாலையில் படித்து வீட்டுத் துயரை மறந்தான். வீட்டில் மனைவி ஜன்னியோ, 'பசி, பசி' என்றழும் குழந்தைகளுடன் பட்ட கஷ்டம் சொல்லிமுடியாது. இவ்வளவு வறுமைத் துயரிலும் அவள் மனம் வாடாது, முகமலர் வதங்காது, "எனது நாயகர் உலகிற்சிறந்த லட்சியவாதி; அவருடன் வறுமையின் சோதனையைப் பொறுப்பதே என் பெருமை' என்றாள் இக்கற்பரசி. இவள் சகோதரன் பிரஷ்ய மந்திரி; ஒரு கடிதம் போட்டால்

நின்றுபோன மாதவிடாய்

குமாரி (TABLETS) மாத்திரையின் உபயோகத்தினால் நின்றுபோனது நீங்கும். வருங்காலத்திலும் கஷ்டங்கள் நேரிடா. கெடுதலின்றி விரைவில் நலம் கிட்டும். இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் ஆயிரக் கணக்கானவர்கள் உபயோகிக்கின்றார்கள்.

சாதாரண கேஸ்களுக்கு	....	....	ரூ 3
நீண்டநாளைய கேஸ்களுக்கு		....	ரூ 5
கர்ப்பத்தடை (6 மாத உபயோகத்திற்கு)			ரூ 4

(வி. பி. அணா 12 கூட)

தயாரிப்பவர்கள்

Mrs. P. DEVEE F. D. S. (C. M.)
Tollygunge, CALCUTTA.

கீழ்க்கண்டவர்களிடமும் கிடைக்கும்:—

(1) ஹாரி & ஸன், 93, சைனாபஜார் ரோடு, மதராஸ்.
(2) ராஜா மெடிகல் ஹால், 31, தர்மராஜா தெரு, பங்களூர் கண்டோன்மெண்ட்.
(3) L. M. முகர்ஜி & சன்ஸ் லிட்., 167, தரம்டோலா தெரு, கல்கத்தா.
(4) Miss. D. D. பாண்டே, ஹரிநிவாஸ், கிங்ஸ்வே, தாதர், பம்பாய்.

பணம் வரும். இப்புண்ணியவதி வீட்டு நிலையை வெளியே சொல்லாள்.

ஒரு நாள் வீட்டு வாடகையில்லை. வீட்டுக்காரன் வெளியே விரட்டிவிட்டான். லண்டன் குளிரில் நடுத்தெருவில் மார்க்ஸ் தன் மனைவி மக்கள் படும்பாட்டைக்கண்டு மனங்கசிந்தான். "என் அருமைக்கண்ணே, என்னாலல்லவா நீ இப்படி வருந்துகிறாய்! வேண்டுமானால் நீ உன் அண்ணனிடம் சென்று சுகமாயிரு" என்றான். "நாதா, தங்கள் பக்கத்தில் இருப்பதே என் சுகம்; தங்களுடன் வருந்துவதே என் பெருமை" என்றாள் பெண்மணி! வாழ்க ஜன்னி! வாழ்க கற்பரசி!

மார்க்ஸ் பணத்திற்காக அங்குமிங்கும் அலைந்தான்; கிடைக்கவில்லை. பத்திரிகைகளுக்குக் கட்டுரை எழுதினான். பத்திராதிபர்கள் கட்டுரை வெளியிட்டனர். பணங்கேட்டதும் "இனித் தேவை இல்லை போ" என்றனர். அமெரிக்காவில் New York Tribune (நியூயார்க் ட்ரிபூன்) என்ற பத்திரிகைக்கு மார்க்ஸ் தன் கொள்கையைப்பற்றியும், பல நாட்டு வரலாறுகளைப் பற்றியும் அரிய கட்டுரைகள் எழுதினான். அமெரிக்கர் அக்கட்டுரைகளை மெச்சினர். நியூயார்க் ட்ரிபூனே முதலில் கட்டுரைக்கு ஒரு பவுனும், பிறகு இரண்டு பவுனும், பிறகு மூன்றும் உதவியது. பிறகு அதுவும் நின்றுபோனது. இக்கட்டுரைத் தொகுதிகளில் மார்க்ஸ் இந்தியாவைப்பற்றியும் அரிய எண்ணங்களை வெளியிட்டான்.

"இந்திய சமுதாயம் சாதி பேதத்தை ஒழித்து ஒன்றுசேர்ந்து அன்னியக் கொள்ளையை ஒழித்துப் பொதுவுடைமையை நாட்டவேண்டும்; அப்போதே அது உலகில் மதிப்புறும்" என்பது அவன் கருத்து.

மார்க்ஸின் பெரிய எண்ணங்கள் அவன் காலத்தில் நிறைவேறவில்லை. மனைவி ஜன்னி, ஏஞ்ஜெல்ஸ் ஆகிய இருவரே அவனுக்கு இன்பமளித்த துணைவர்கள். ஆனால் அவன் வறுமை இடர்களைப் பாராட்டவில்லை; தன் கஷ்டங்களை வாய்விட்டுச் சொன்னதில்லை. அந்தப் பயங்கரப் பொறுமையின்முன் வாழ்வின் துக்கமே திகைத்துத் தோற்றோடியது. படிப்பிலும், எழுத்திலும், தன் கொள்கையை வந்தவருக்கு உபதேசிப்பதிலும் அவன் உற்சாகங்கொண்டு வேறு கவலைகளைத் துச்சமாக ஒதுக்கித் தள்ளினான்.

கடைசி காலத்தில் மார்க்ஸ் குடும்பத் துயரால் மனமுடைந்தான். ஒரு குழந்தை தவறிப் போனது. அந்தத் துயரம் ஆயுளுக்கும் அவனை விடவில்லை. ஆனால் நண்பன் ஏஞ்ஜெல்ஸ் வியாபாரத்தில் செழிப்புற்ற சமயம் மார்க்ஸிற்குப் பணவுதவி செய்தான். கடைசி பத்து வருஷம் மார்க்ஸ் சுமாராகக் காலந்தள்ளிக்கொண்டு தன் கொள்கைகளை உருவாக்கினான். ஐரோப்பாவில் தொழிலாளர் சங்கங்களை ஊக்கினான். ஆனால் ஏகாதிபத்திய வாதியான ஜெர்மன் மந்திரி பிஸ்மார்க் அவற்றை நசுக்கச் சட்டம் விதித்தார். மார்க்ஸ் எதற்கும் அஞ்சவில்லை. தன் அபேதவாதமான பொதுஉடைமைக் கொள்கைகளைத் துண்டுப் பிரசுரங்களாலும் பத்திரிகைகளாலும் ஐரோப்பாவெங்கும் விதைத்தான். "தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்! உரிமை கோருங்கள்! உங்கள் நன்மை உங்கள் கையிலிருக்கிறது" என்று அறைகூவியழைத்தான். தொழிலாளர் பிரான்ஸிலும் ஜெர்மனியிலும் எழுந்து வேலை செய்தனர். மார்க்ஸின் கம்யூனிஸ்ட் அறிக்கையைப் படித்ததும் தொழிலாளர் பாய்ந்தெழுந்து சர்வதேசத் தொழிற்சங்கத்திற் சேர்ந்தனர். பாரிஸில் துப்பாக்கி முனையில் தொழிற்புரட்சி நடந்தது; இரத்த வெள்ளத்தில் நீந்திக்கொண்டு ஒரு பாரிஸ் கம்யூன் உருவானது; அங்கே தொழிலரசு ஏற்பட்டது. அன்று மார்க்ஸின் ஆவேசத்தால் எழுந்த தொழிற்கட்சி இன்றும் உள்ளது. சர்வதேசத் தொழிற்கட்சிக்காக அவன் அயராது பாடுபட்டான். தொழிலுலகம் விழிப்படைந்தது; என்றும் பகைவரும் கத்திதீட்டிக் கொலைத் தொழிலை நடத்தினர். மார்க்ஸிற்கு மிரட்டல் கடிதங்கள் வந்தன. அவனைச் சுட்டுக்கொல்லவும் சதி நடந்தது. மார்க்ஸ் எதற்கும் அஞ்சவில்லை. "உரிமைக்காக உயிரைப் பலிகொடுக்கத் தைரியமுள்ளவர்கள் வாருங்கள்" என்றான்.

அவன் பதினைந்தாண்டுகள் ஆராய்ச்சி செய்து ஒரு பெரிய நூலை மூன்று பாகங்

களில் எழுதிமுடித்தான். அதுவே உலகப் புகழ்பெற்ற காபிடல் என்ற நூல். இறுதிக் காலத்தில் மார்க்ஸ் நோயாளியானுன். படிப்பது எழுதுவது இரண்டேவேலே. மனைவி ஜன்னியும் 1881-ல் வெந்து நொந்த பொறுமைச் சுமையை உதறிச் சென்ருள்.

அவள் போனபின் அவன் வாழ்வே இருளானது. காசம் அவனைப் பற்றிக் கொண்டது. 14—3—1883-ல் நாற்காலியில் புத்தகம் படித்த வாக்கில் மார்க்ஸ் உடலை உதறிச் சென்ருன். மார்க்ஸிற்கு எந்தப்பத்திரிகையும் அனுதாபம் தெரிவிக்கவில்லை.

மார்க்ஸ் இறந்து நீண்ட காலம் வரையில் அவன் கொள்கையை உலகம் அறியாதிருந்தது. மார்க்ஸ் சமதர்மத்திற்கே தன் வாழ்வைப் பலி தானமாக்கினுன். வறுமை, சிறுமை, அரசாங்கக்கொடுமை, முதலாளிகளின் கடுமை— எல்லாம் அவனைச் சோதித்தன. சொல்லொணு இன்னல்களுக்கிடையே அவனுடைய சமதர்மம் உருவானது. நாற்பதாண்டுகள் சிந்தித்துப் பதினைந்தாண்டுகள் படித்துக் குறிப்பெடுத்து எழுதியதின் பயனுகக் காபிடல் எழுந்தது. அதன் முதற்பாகமே மார்க்ஸ் காலத்தில் அச்சிடப்பெற்றது. அவனுக்குப் பிறகு மற்ற இரண்டு பாகங்களும் வந்தன. மார்க்ஸின் கொள்கைக்கு விளக்கம் ஏஞ்ஜெல்ஸ். மார்க்ஸும் ஏஞ்ஜெல்ஸும் சமதர்ம இரட்டையர் என்னலாம். இவர்கள் கண்ட சமதர்மத்திற்கு உருவமளித்து ஒரு பெரிய சமதர்மக் குடியரசை நாட்டினவன் லெனின். மார்க்ஸே லெனினுக மறுபடி பிறந்தான் என்னலாம். இருவருக்கும் அவ்வளவு கருத்தொருமையுண்டு. மார்க்ஸிற்கு ஜெர்மனி ஒரு மரியாதையும் செய்யவில்லை. லெனினே அவனுக்கும் ஏஞ்ஜெல்ஸிற்கும் மாஸ்கோவில் உருவச்சிலை நாட்டினுன்.

மார்க்ஸின் காபிடல் சிறந்த சிந்தனை நூல். அது வெறும் இலக்கியமன்று; அது சமுதாய வாழ்க்கைத் தத்துவம். அதை நுனிப்புல் மேய்வது போலப் படித்துவிட முடியாது. ஆழ்ந்து சிந்தித்தே படிக்க முடியும். படித்து முடித்ததும் ஆள் புதுமை பெறுவான்; சமதர்மியாவான், உலகம் கடவுளாலோ, பூசாரியாலோ, மதத்தினுலோ நடைபெறவில்லை. உலகம் உலகோர் உழைப்பினுலேதான் நடக்கிறது. மனிதன் உழைக்காவிட்டால் எந்தச் சாமியும் வந்து பயிர் விளைக்காது, வீடுகட்டாது, துணி நெய்யாது. உலகம் வர்க்கப் போராட்டத்தில் மயங்கிக் கிடக்கிறது. வாழ்க்கையே போராட்டம். இப் போராட்டத்தில் மனிதனுடைய உரிமை உணர்ச்சி, தன்னை அடிமையாக்கிச் சுரண்டித்தின்னும் சுயேச்சாதிகாரச் சக்தியுடன் போராடிவருகிறது. மதம், சாதி, பொருளாதாரம், அரசியல், தொழில், வாணிகம் ஆகிய எல்லாத் துறைகளிலும் சில முதலாளிகள் பல தொழிலாளிகளின் உழைப்பினுல் பணமூட்டை கட்டிக் குவிக்கின்றனர்.

உலகப் போராட்டம் பொருளாதார ஏற்றத்தாழ்வினுலேதான் உண்டாகிறது- ஆயிரம்பேர் வசிக்கக்கூடிய இடத்தை ஒரு பணக்காரன் அடைத்துக் கொள்கிருன். ஆயிரம் ஏழைகளின் உழைப்பால் விளைந்ததை ஒரு பணக்கார முதலாளி ஏழாம் மாடியிலிருந்து வயிறு குலுங்காமல், கை உழைக்காமல் அனுபவிக்கிருன். நாளெல்லாம் பாடுபடுகிறவர்களுக்கு அரைக்கஞ்சிக்கும் கட்டாமல் கூலிப்பிச்சை கிடைக்கிறது. தொழிலாளியின் இரத்தவேர்வையினுலேதான் காரியம் நடக்கிறது; லாபம் பழுக்கிறது; பணம் குவிகிறது. ஆனுல் தொழிலாளிக்கு வறுமைதான் மிச்சமாயிருக்கிறது; கவலையால் அவன் மனம் உடைகிறது. ஒன்றும் செய்யாத முதலாளி தொழிலாளியை அடிமையாக்க அடக்கியாண்டு பணங்குவிக்கிருன். பணம் தொழிலின் மதிப்பையே குறைத்துவிடுகிறது. மதம்வேறே குறுக்கிட்டு, "ஏழைகளுக்கே வானரசு; வறுமையே நல்லது" என்று தொழிலாளருக்குப் போதிக்கிறது. ஆண்டானடிமைத்திறம், முதலாளி–தொழிலாளித்திறம் எல்லாம் மனிதனைச் சுரண்டுகின்றன. முதலாளி தொழிலாளி என்பதைவிட எசமான் சேவகன் என்ற உறவு இன்னும் படுமோசமாயிருக்கிறது. எசமானுக்குச் சேவகன் நாளெல்லாம் உழைத்தும் இழிவாக நடத்தப்படுகிருன். இதெல்லாம் தனியுடைமையால் வரும் தீங்குகள். பணத்தால் வரும் தீமைகள். பொருளுற்பத்தி பணக்காரர் கையில்

சிக்குண்டு ஏழைகளை நசுக்கிக் கசக்கிப் பிழிகிறது. அதிலும் யந்திரம் வந்த பிறகு சிலர் பலர் வேலையைச் செய்து பலருக்குத் தொழிலில்லாமற் போனது. செல்வம் செல்வருக்கே பெருகி, ஏழைகள் மேன்மேலும் ஏழைகளாகிறார்கள். செல்வன் ஏழை என்ற இரண்டு வகுப்புகள் எழுந்தன. இதனால் உலகில் வறுமை மிகுந்தது. பாட்டாளிகள் பசியால் வருந்தினர்.

இந்த நிலை அடியோடு மாறவேண்டும். முதலாளி வர்க்கமே கூடாது; ஆண்டான் அடிமை என்பதும்கூடாது; சுரண்டுவோருக்கு இடமே தரக்கூடாது; பொருள் உற்பத்தி முழுதும் அரசாங்கத்தைச் சேர வேண்டும்; அரசாங்கம் முழுதும் தொழிலாளர் கையிலிருக்கவேண்டும்; யாருக்கும் தனிச் சொத்துரிமை கூடாது. ஒவ்வொரு கையும் உழைத்தே தீரவேண்டும். உழைப்பது எந்தத் தனி மனிதனுக்கும் இல்லை. எல்லாம் பொது நலத்திற்கே. உழைப்பின் பலனும் நாட்டிற்கே. நாடு தொழிலாளர் ஆட்சியில் தொழிலாளர் நன்மைக்காகவே நடக்கும். அவரவர் தேவைக்குத் தகுந்தபடி அரசாங்கமே உணவு, ஆடை, வீடு, கல்வி, சுகாதாரம் எல்லாம் எல்லோருக்கும் அளிக்கும். அவரவர் முழுத்திறமையுடனும் உழைக்க வேண்டும். கல்வி எல்லாருக்கும் இனம், அவரவர் திறமைக்கேற்ற தொழிலும் பழகலாம். அறிவும் தொழிலும் ஆற்றலும் நாட்டின் முன்னேற்றத்திற்கே உரிமை. எல்லாம் பொதுவுடைமை—எல்லாம் பொது நன்மை.

இந்த ஏற்பாட்டில் சுயேச்சாதிகாரச் செருக்கிற்கும் சுரண்டலுக்கும் இடமேயில்லை. தனி மனிதன் ஜனசமுதாயத்தில் ஐக்கியமாகிறான். ஜனசக்தியே ஜனநலத்திற்காக உலகை நிர்வகிக்கிறது.

இது மகத்தான கொள்கை; அற்புதமான ஆராய்ச்சி. இதன்படி அமைந்த சோவியத் ரஷ்யாவின் முன்னேற்றத்தை அடுத்த தடவை காண்போம்.

மார்க்ஸின் கொள்கைக்குமேல் லெனின் பல புதிய திட்டங்களை வகுத்து, ரஷ்யாவை உலகிற்கே ஒப்பற்ற புதிய சமுதாயமாக்கிவிட்டான். உலகம் முழுதும் இன்று பொதுவுடைமை மோகங்கொண்டலைகிறது.

பொதுவுடைமை பொருளாதாரத்தைப் பொதுவாக்கி வறுமையை ஒழித்திருக்கிறது. ஆனால் இன்று அதுவும் உலகைப் பிடித்தாளக் கிளம்பிவிட்டது.

இந்திய மகான்கள் கண்ட பொதுவுடைமை ரஷ்யப் பொதுவுடைமையை விடச் சிறந்ததாகும். இங்கேதான் தருமம், பரோபகாரம், ஆத்ம சமத்துவம் ஆகிய கொள்கைகளால் எல்லா உயிர்களையும் தனக்குச் சமானமாக நினைத்துப் பரோபகாரத்திற்கே வாழ வேண்டும் (பரோபகாரம் இதம் சரீரம்) என்ற தத்துவம் விளங்குகிறது. மார்க்ஸும் லெனினும் கண்ட சமதர்மத்திற்கு அப்பனாக நமது மஹர்ஷிகள் ஆத்மநேய ஒருமையைக் கண்டிருக்கிறார்கள். வியாச பகவான் மஹாபாரதத்தில் அருளுகிறார்:

நைவ ராஜ்யம் நராஜாஸீன்
நச தண்டோ நதண்டிக:
தர்மேணைவ ப்ரஜா: ஸர்வா:
ரக்ஷந்திஸ்ம பரஸ்பரம்

அரசாட்சியுமில்லை; அரசனுமில்லை; தண்டனையுமில்லை; குற்றவாளியுமில்லை; ஜனங்கள் ஒருவருக்கொருவர் சமதர்மத்தை அறிந்து நடக்கிறார்கள், ஜனங்கள் தர்மத்தைக் காக்கிறார்கள். தர்மம் ஜனங்களைக் காக்கிறது. இதுதான் முதல்தரமான சமதர்மம்!

லைப்பாய்

பழக்கத்தையும் அவன் அறிந்திருக்கிறான்

அவன் ஸ்கூலுக்குப் போகிறான். அங்கிருந்து என்ன கொண்டு வருவான்? புதிய அறிவு, புதிய முறைகள்—சில தொத்து வியாதிக் கிருமிகளுங்கூட! அவனுக்குக் கற்றுக் கொடுத்த எல்லாப் பாதுகாப்புகளுடனும் தாயார் தன் மகனை அனுப்புகிறாள். ஆரோக்கியமுள்ள சிறுவனையும் பீடிக்கக் கூடிய அழுக்கு அபாயத்திலிருந்து காப்பாற்ற லைப்பாய் சோப்பைத் தினசரி உபயோகிப்பதே அவற்றுள் முக்கியமானது.



லைப்பாய் ஒரு நல்ல சோப்பைக் காட்டிலும் சிறந்தது.

அது ஒரு நல்ல பழக்கம்.

L. 78-23 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED

ஜோஸ்யம்

கி. சந்தானம்

“நீங்கள் என்னதான் சொல்லுங்கள். எனக்கு ஜோஸ்யத்தில் நம்பிக்கை விடாது” என்றார் விசுவநாதய்யர்.

நாங்கள் கதை கேட்கத் தயாரானோம். இரவு சுமார் ஒன்பது மணி இருக்கும். நாங்கள் ஓர் அறையில் உட்கார்ந்து சம்பாஷித்துக் கொண்டிருந்தோம். ஸீதாபதியின் விவாகத்தைப்பற்றிப் பேச்சு வந்தது.

“ஜோஸ்யமாவது ஈஸ்யமாவது! எல்லாம் ஹம்பக் அப்பா. மனப்பொருத்தம்தான் சரியான பொருத்தம்” என்றான் சங்கரன்.

“அப்பாதான் குருஜோஸ்யர் கீறின கீற்றைத் தாண்டமாட்டாரே. நான் சாவித்திரியை மணந்துகொண்டால் அடுத்த க்ஷணமே என் தலை சுக்கு நூறாய் வெடித்து விடுமாம்” என்றான் ஸீதாபதி.

“சாவித்திரி அமங்கலியாக வேண்டுமென்று அவள் தலையில் எழுதியிருந்தால் நீ அவளுக்காக இந்தத் தியாகத்தைச் செய்யக்கூடாதா ஸீதாபதி—அதுவும் இந்த அரிசிப் பஞ்சகாலத்தில்” என்றேன் நான். எல்லோரும் சிரித்தார்கள். திண்டில் சாய்ந்து கொண்டிருந்த விசுவநாதய்யர் நாங்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தார்.

“நீங்கள் பரிகாசம் செய்யலாம்; ஆனால் எனக்கு ஜோஸ்யத்தில் உள்ள நம்பிக்கையை மட்டும் உங்களால் அசைத்துவிட முடியாது” என்றார் அவர்.

“என்ன மாமா! அவிழ்த்துவிடுங்கள் கதையை” என்று கூறிக்கொண்டே எல்லோரும் கிட்ட நெருங்கி உட்கார்ந்தோம். அவர் பேசத் தொடங்கினார்.

“நான் சொல்லப்போவது கதை அல்ல. உண்மையில் நடந்தது. எனக்கு அப்போது வயது இருபது. ஒரு நாள் இரவு சுமார் பத்துமணி இருக்கும். நானும் என் நண்பர்கள் சிலரும் ஒரு ஹோட்டலில் உட்கார்ந்து காப்பி அருந்திக்கொண்டே உல்லாசமாய்ச் சம்பாஷித்துக்கொண்டிருந்தோம். நாங்கள் பிரம்மசாரிகள். ஒரே ஹோட்டலில் சாப்பிட்டுவந்தோம். ஆனால் வெவ்வேறு இடங்களில் வசித்து வந்தோம்.

“வெளியில் மழை தூறிக்கொண்டிருந்தது. ஆகவே எங்கள் பேச்சும் வளர்ந்துகொண்டேபோயிற்று. திடீரென்று எங்கள் அறையில் ஒருவர் நுழைந்தார். நல்ல உயரம். அவர் தாடி மார்வரையில் நீண்டிருந்தது. அதில் ஒட்டிக்கொண்டிருந்த மழைத் துளிகள் மின்சார வெளிச்சத்திலே டால் வீசின. அவர் கண்களின் ஜ்வலிப்பை என்னால் வர்ணிக்கமுடியாது. ஒருகணம் அவைகளை எங்கள்மேல் ஓடவிட்டார் அவர். எங்கள் “வள்ளல்கள்” எல்லாம் அவருக்குப் புரிந்து விட்டதுபோலும். அடுத்தக்ஷணம் அவர் என்பக்கத்தில் வந்தமர்ந்தார். என் வலதுகையை மெதுவாய் எடுத்து ஒரு பார்வை பார்த்துவிட்டுத் தொப்பென்று கீழே போட்டார்.

“குழந்தாய்! உன் காலம் நெருங்கிவிட்டது. பகவானைப் பிரார்த்தித்துக்கொள். இன்றே......”

“எங்கோ கடியாரம் மணி அடித்தது. அவர் மேலே என்னசொன்னார் என்பது என் புத்தியில் ஏறவில்லை. நான் வெளியே வந்துவிட்டேன்.

“மழை ‘சோ’வென்று பெய்துகொண்டிருந்தது. எனக்கு அப்போதெல்லாம் ஜோஸ்யத்தில் நம்பிக்கை கிடையாது. நான் கோழையுமல்ல. இருந்தாலும் எனக்கு முடிவு காலம் சமீபித்துவிட்டது என்னும் நினைவு என்னை ஒரு கலக்குக் கலக்கிவிட்டது. சாவு தவிர்க்க முடியாததுதான். தினந்தோறும் மனிதர்கள் இறப்பதை நாம் கண்கூடாய்ப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். தடுக்க முடியாததைச் சகித்துக் கொள்வதுதான் முறை என்றெல்லாம் வேதாந்தம் பேசுகிறோம். ஆனால் நம் விஷயத்தில்...... சே! இந்தப் பேச்சே நமக்கு ரஸிக்கிறதில்லை.

“நான் போய்க்கொண்டே இருந்தேன் தட்டுத் தடுமாறிக்கொண்டு. எங்கும் கவ்விருட்டு. மழைத்துளிகள் கல்வீச்சுப்போல் விழுந்தன. காற்று ஓலமிட்டுக்கொண்டிருந்தது. ஜன சந்தடியே இல்லை. உலகமே அஸ்தமித்துவிட்டதுபோல் தோன்றிற்று. என் உடம்பு நடுங்கிற்று. இன்னதென்று விவரிக்க முடியாத ஒரு பீதி என்னை முன்

னுக்கு உந்தித் தள்ளிக்கொண்டே போயிற்று. எனக்குப் பின்னல் பார்க்கக் கூடப் பயம்—எங்கே சாவு தொடர்ந்து வருகிறதோ என்று.

நல்ல வேளையாய்த் தூரத்தில் விளக்கொளி தெரிந்தது. நான் அதை நெருங்க நெருங்க ஒரு குரல் ஒலியும் காற்றிலே மிதந்து வந்தது. நான் ஒரு பயங்கர ஸ்வப்ன உலகத்திலிருந்து திரும்பிவந்தேன். கொஞ்சம் தைரியம் பிறந்தது. அது ஒரு காலக்ஷேபம்போலும். சற்று நின்று உற்றுக் கேட்டேன், பாகவதர் சொல்லிக் கொண்டிருந்தார்.

"ஏ மனுஷ்யா! காலம் கணக்காகிக் கொண்டிருக்கிறது. சாவு இப்பவோ பின்னையோ......"

"ஐயோ தெய்வமே! நான் ஓட்டமெடுத்தேன். எப்படியோ என் வீட்டை அடைந்து விட்டேன். வாயிற்படிக்குமேல் வழக்கமாய் வைக்கும் இடத்திலிருந்து சாவியை எடுத்துக் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தேன். காற்றின் அழுகுரலும், என்னோடு கூடவே நுழைந்தது. ஒரு கீல் போய்விட்டிருந்த ஜன்னல்கதவு எங்கோ 'படீர் படீர்' என்று அடித்துக்கொண்டது. ஓர் அபாயமுமின்றி என் அறையை அடைந்தபின்பும் என் இதயத் துடிப்பின் வேகம் அடங்கவில்லை.

"ஒரு நெருப்புக் குச்சியைப் பற்றவைத்தேன். அதன் வெளிச்சத்தில் அந்தப் பயங்கர வஸ்துவைக் கண்டுவிட்டேன். இந்தப் பேய்க்காற்றில் நெருப்புக்குச்சி அணைந்திருக்கக் கூடாதா! நான் கண்டகாட்சி என்னைத் திடுக்கிடச் செய்துவிட்டது.

"என்ன! சாவை நேருக்குநேர் கண்டு விட்டீர்களா" என்ருன் சங்கரன்.

"இல்லாவிடில் பேய்தான் உங்களை வரவேற்றதோ" என்றேன் நான்.

"ஒருவேளை அந்த தாடிவாலாதான் உங்களை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்தாரோ" என்ருன் ஸீதாபதி. விசுவநாதய்யர் தொடர்ந்து கூறினர்.

"உங்களால் ஒருகாலும் ஊகிக்க முடியாது......என் உடல் நடுங்கிற்று. மயிர்க்கூச்செறிந்தது. பயம் பிடுங்கித் தின்றது. சோகமும் வியப்பும் என்னை ஸ்தம்பிக்கச் செய்துவிட்டன. நான் ஓவென்று அலறிவிட்டேன். நான் கண்டது என்னவென்று நினைக்கிறீர்கள்...அது...ஒரு...பா...டை!"

கர்ப்பச் சேதத்துக்குப்

பிறகும், பிரஸவத்திற்குப் பிறகும், நீடித்த ஜ்வரங்களுக்குப் பிறகும் தலை மயிர் அதிகமாகக் கொட்டுவதுண்டு. சாதாரண ஜ்வரங்களுக்குப் பிறகும், மயிர் உதிர்வதுண்டு. அதிர்ச்சி ஸஹிதமான ஜ்வரமானுலும் மயிர் அபரிமிதமாகக்கொட்டும். சில சமயம் விடாமல் உதிர்ந்துகொண்டே யிருக்கும். எந்தக் காரணத்தினுல் மயிர் உதிர்ந்தபோதிலும் கேசவர்த்தினியைக் கொண்டு மயிர் உதிர்வதை நிறுத்துங்கள்.

உதிர்ந்த கூந்தலுக்குப் பதில் இளம் புதுக் கூந்தலைப் பெறுங்கள். கேசவர்த்தினியின் உதவியால் அற்பகேசத்தை அபரிமித கேசமாக்குங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது

விலை அணு 12

(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்

தென் இந்திய ரஸாயன சாலை

கோயமுத்தூர்.

போலிகளை வாங்கி மோசம் போகாதீர்கள். "கேசவர்த்தனி தென்னிந்திய ரஸாயன சாலை என்ற பெயர்களைக் கவனித்து வாங்குங்கள்."

'ஐயோ!' என்று ஏககாலத்தில் அலறினோம் நாங்கள். மங்கலாய் எரிந்துகொண்டிருந்த விளக்கைத் தூண்டிவிட்டான் ஸீதாபதி. நாங்கள் இன்னும் கொஞ்சம் நெருங்கி உட்கார்ந்தோம். அவர் மேலும் தொடர்ந்தார்.

"ஆம். அது ஒரு பாடை. தீக்குச்சி ஒரு கணம்தான் எரிந்தது. இருந்தாலும் நான் நன்ருய்க் கண்டுவிட்டேன். சில வஸ்துக்கள் இருக்கின்றன. அவைகளை நாம் ஒரு முறை பார்த்தாலும் போதும். பசுமரத்து ஆணிபோல் நம் மனதில் பதிந்து விடுகின்றன. கண்ணிமைப் பொழுதில் அதன் முழுத் தோற்றத்தையும் பச்சைமட்டை உள்பட என் மனம் படம் பிடித்துவிட்டது.

"மற்ற உணர்ச்சிகளை எல்லாம் அமுக்கித் தலையெடுத்து நின்றது பீதி. அந்தக் கொட்டும் மழையில் அந்தக் கும்பிருட்டில் தலைவிரி கோலமாய் ஓடினேன் தெருவில். இதயம் வெடித்து விடும்போல் இருந்தது. மேல்மூச்சுக் கீழ்மூச்சு வாங்கிற்று. மாரில் ஒரு கையை அழுத்திப் பிடித்தவண்ணம் சற்று நின்றேன்.

"என் வீடு தீப்பற்றி இருந்தால், இடிந்து விழுந்து தரைமட்டம் ஆகியிருந்தால், நான் ஆச்சரியப்பட்டிருக்க மாட்டேன். இவை சகஜமாய் நேரக்கூடியவைதான். ஆனல் இந்த வஸ்து எப்படி என் அறையில் நுழைந்தது? எங்கிருந்து வந்தது? அறைக் கதவு பூட்டியிருந்தது. நிலைப்படிக்குமேல் நான் வழக்கமாய்ச் சாவியை ஒளித்துவைக்குமிடம் என் நெருங்கிய நண்பர்களுக்குத்தான் தெரியும். இந்நள்ளிரவில் இந்தப் பயங்கரச் சேஷ்டையை அவர்கள் புரிந்திருக்கமாட்டார்கள் என்பது திண்ணம்.

"சே, சே! இதென்ன முட்டாள்தனம்! அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய். எல்லாம் பிராந்தி. மனக்கண் சிருஷ்டித்த மாயை என்றெல்லாம் நீங்கள் நினைக்கலாம். நானும் அப்படித்தான் சமாதானம் செய்துகொண்டேன்,

"மழை இன்னும் விட்டபாடில்லை. ஒவ்வொரு திவலையும் என் உடலை ஊசிகொண்டு தைத்து எடுத்தது. வீசிய பேய்க்காற்றில் என் வஸ்திரத்தின் நுனிகள் என்மேல் அடிகளைச்சொரிந்தன. என் பல் கிட்டிற்று...... அட ஈசுவரா!

"கோழைகள் இறப்பது ஒரு முறையல்ல, பலதடவைகள்! இந்த எண்ணம் திடீரென்று என் மனதில் பாய்ந்தது. மேல் வேஷ்டியைப் பிழிந்து உதறிப் போட்டுக்கொண்டேன். என் அகன்ற மார்பை ஒரு கணம் நோக்கினேன். நேராக நிமிர்ந்து ஒரு போர் வீரனைப்போல் நடந்தேன். "அச்சமில்லை! அச்சமில்லை! அச்சமில்லை! இல்லையே!" என்று உரக்கப் பாடினேன்.

"அந்த மழையிலும், குளிரிலும் எவ்வளவு நேரம் அல்லற்பட முடியும்? எங்காவது சற்றுநேரம் என் தலையைச் சாய்த்தால் தேவலை போலிருந்தது. திரும்ப என் அறைக்குப் போவது என்பது அசாத்யம். அடுத்த தெருவில் என் நண்பன் கோபு இருந்தான். அங்கே போகலாம்.

"என் கால்கள் அவன் அறையை நோக்கி விரைந்தன. கதவு பூட்டியிருந்தது. நிலைப்படிக்குமேல் கையைவிட்டுத் துழாவிச் சாவியை எடுத்துக் கதவைத் திறந்தேன்.

"அப்பாடா! கட்டுவிட்டிருந்த என் நரம்புகளுக்கு இதோ ஓய்வு கிடைத்துவிடும். விரிப்பை இழுத்துப் போர்த்திக்கொண்டு நித்ராதேவியின் மடியிலே நிர்ப்பயமாய்த் தலைவைப்பேன். தன் அறையில் தன் படுக்கையில் கால்முதல் தலைவரை மூடிக்கொண்டு கிடக்கும் என் உருவத்தைக்கண்டு என் நண்பன் உளறியடித்துக்கொள்வான்; இந்த எண்ணம் எனக்கு ஆறுதல் அளித்தது.

"துணியைப்பிழிந்து உடம்பைத்துவட்டிக்கொண்டேன். இந்தக் குளிரிலும், மழையிலும் உங்கள் அறையிலே எனக்குக் கொஞ்சம் இடம் கொடுக்கக்கூடாதா என்று கேட்பதுபோல் திறந்திருந்த கதவின் வழியே நுழைந்து அவலக்குரல் பாய்ச்சியது காற்று. மெதுவாய்க் கதவைச் சாத்தினேன். சற்றே வெதுவெதுப்பு ஏற்பட்டது. கிடந்த சாய்வு நாற்காலி ஒன்றில் அமர்ந்தேன். அப்படியே கண் அயர்ந்துவிடலாம். பஞ்சத்தில் அடிபட்டவன் கைக்கு பஞ்சபக்ஷ்ய பரமான்னம் கிட்டியதைப் போலிருந்தது என் நிலைமை. ஏன் விளக்கை ஏற்றி உணர்ந்த வஸ்திரம் அணிந்து பாங்காய்ப் படுக்கையில் படுத்து உறங்கக் கூடாது?

"தட்டுத் தடுமாறிக்கொண்டே மேஜையண்டை சென்று நெருப்புப்பெட்டியைத் தேடி எடுத்து ஒரு குச்சியைக் கிழித்தேன். அதன் வெளிச்சத்தில் சுற்றுமுற்றும் பார்த்தேன்.

"ஐயோ செத்தேன்!"

விசுவநாதய்யர் உண்மையாகவே அலறி விட்டார். அவர்கண்கள் பாதிமூடிய வண்ணம் இருந்தன. ஸீதாபதி அவரை ஒரு உலுக்கு உலுக்கியபடியே 'என்ன அப்பா ஸ்வப்னம் காண்கிறீர்களா' என்றான். விசுவநாதய்யர் சிரித்துவிட்டு மேலும் தொடர்ந்து கூறினார்.

"இதுவரை நான் அடக்கி அணைபோட்டு வைத்திருந்த பயம் பீறிக்கொண்டு வெளிப் பட்டுவிட்டது. அதன் பலவந்த ஆலிங்கனத்திலே நான் சோர்வுற்று நின்றேன். எனக்குப் பைத்தியமே பிடித்துவிட்டதா? என் தலையை இருகைகளாலும் அமுத்திப் பிடித்து விட்டுக்கொண்டேன், ஓர் ஆணி எங்காவது கழன்றுவிட்டதா என்று பார்ப்பவன் போலே! நான் அந்த அறையில் என்னகண்டேன் என்று நினைக்கிறீர்கள்" என்று கேட்டு விசுவநாதய்யர் நிறுத்தினார்.

"ஒருவேளை அந்தப் பச்சைப் பல்லக்கைத் தூக்கிச்செல்ல நான்குபேர்கள் காத்துக் கொண்டிருந்தார்களா கொட்டுக் கொட்டென்று விழித்துக்கொண்டு?" என்றான் சங்கரன். நாங்கள் எல்லோரும் சிரித்தோம். அவரும் அதில் கலந்துகொண்டார். இப்படியாக நாங்கள் அந்தப் பயங்கரப் பேயைச் சிரித்து விரட்டப் பார்த்தோம். அவர் மேலே கூறினார்.

"என் கண்களை எனக்கு நம்பவே முடியவில்லை. இந்த அறையிலும் அந்த நாசமாய்ப்போன—சனியன் பிடித்த—வாய்கொண்டு சொல்லமுடியாத வஸ்து என்னை விழித்துப் பார்த்தது. ஆனால் ஒன்றல்ல இரண்டு! நான் ஓட்டம்பிடித்தேன். நல்லவேளையாய் அடுத்த தெருவில்தான் என் சிநேகிதன் ராமு இருந்தான். முன்னிரவில் என்னோடு காப்பி குடித்துக் கொண்டிருந்தவர்களில் அவனும் ஒருவன். இந்நேரம் வீட்டிற்கு வந்து விட்டிருப்பான்.

"ஆனால் என் கலகலத்துப்போன நரம்புகளுக்கு அங்கேயும் ஒரு அதிர்ச்சி காத்துக் கொண்டிருந்தது. நான் படிகளில் கால் வைக்கும்பொழுதே மாடியில் ஒரு பயங்கரச் சத்தம் கேட்டது. தடால் என்று ஏதோ விழுந்தது. படீர் என்று கதவு சாத்தப்படும் சத்தமும் 'உதவி! உதவி! யாரங்கே? அடே கிருஷ்ணா! எங்கே தொலைந்துவிட்டாய்!' என்ற கூக்குரல்களும் எழுந்தன. ஓர் இருண்ட உருவம் மாடிப்படியில் விழுந்தடித்து ஓடி வந்தது. நான் அவனைப் பிடித்து நிறுத்தி, 'ராமு! நீதானா என்னதான் நேர்ந்துவிட்டது உனக்கு' என்றேன். அவன் என்னை 'மிரள, மிரள' விழித்துப் பார்த்தான். 'அடே விசுவம்! நீதானா அல்லது உன் ஆவியா, பிசாசு போல் தோற்றம் அளிக்கிறாயே' என்றான். 'ஸாக்ஷாத் நான்தான். அதிருக்கட்டும். நீ ஏன் இப்படி திகைப்பூண்டை மிதித்தவன்போலக் காண்கிறாய்' என்றேன். 'நல்லவேளை! சற்றுப் பொறு. எனக்குமூச்சுத் திணறுகிறது... ஐயோ தெய்வமே! நான் சொன்னால் நீ நம்பமாட்டாய். என் மூளை கலங்கி விடும்போல் இருக்கிறது. அந்த இழவு பாடை......"

'ஐயையோ'

"அந்த மாடிப்படியில் நாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் தழுவிக்கொண்டு எவ்வளவு நேரம் உட்கார்ந்திருந்தோம் என்று கூறமுடியாது. என் கதை முழுவதும் நான் அவனுக்குச் சொன்னேன். பொழுது புலரும் சமயம் நெருங்கிவிட்டது. 'நன்றாய்ப் பார்க்கலாம் வா' என்று ராமு என்னை அழைத்தான். "எனக்குக் கால் ஸ்வாதீனமில்லை. பயப்படாதே. நான் இருக்கிறேன். நீ விளக்கைப் பற்றவை. நான் பின்னாலேயே வருகிறேன்" என்றேன்,

"தீபம் ஏற்றப்பட்ட பின்பும் எனக்கு உள்ளே எட்டிப் பார்க்க மனம் துணியவில்லை. ராமு விளக்கு வெளிச்சத்தில் ஒரு கடிதத்தைப் படித்துக்கொண்டே இடியிடி என்று நகைத்தான். பைத்தியம் தலைக்கு முற்றிவிட்டதா?

"டே விசுவம்! நல்லவேடிக்கை! பயங்கர வினோதம்! இதோ பார்! ரங்கன் கடிதத்தை வாசிக்கிறேன், கேள்."

"அருமை ராமுவுக்கு,

நான் உனக்கு ஒரு இன்பப்பரிசு அளிக்கப்போகிறேன். நீ அதை எதிர்பார்த்திருக்கமாட்டாய்...... வேறு ஒன்றுமில்லை. உனக்துப் பிடித்த பச்சைக் கித்தான் போட்ட 'காம்ப்' கட்டில்! நம் நண்பர்கள் விசுவம் முதலானவர்களுக்கும் ஒவ்வொன்று கொண்டுவந்திருக்கிறேன். குண்டுக் கோபுவுக்கு மட்டும் இரண்டு!

"கால்களைச் சேர்த்துக்கட்டி மேஜை அடியில் வைத்திருக்கிறேன். அவைகளைப் பிரித்து விரிப்பை மாட்டிப் படுக்கத் தயாராய் வைத்துவிடலாம் என்றுதான் பார்த்தேன். முடியவில்லை. மணி ஒன்பதுக்கு மேல் ஆகிவிட்டது. மழையும் பிடித்துக் கொண்டுவிட்டது. நீதிரும்பி வந்துவிடலாம். அதற்குள் நான் போய்விடவேண்டும் என்று எனக்கு ஒரு துடிப்பு.

நீ, விசுவம், கோபு மூவரும்தான் கொடுத்து வைக்கவில்லை, இன்று இரவு கட்டிலில் படுத்து உறங்க. மற்ற நம் நண்பர்களுக்கு யோகம். அவர்கள் அறைகளில் கட்டிலைப் போட்டு மெத்தையையும் விரித்து வைத்துவிட்டேன். ஆச்சரியத்தால் திண்றிப்போகட்டும் அவர்கள்!

"இன்று சாயந்திரம்தான் வந்தேன் நரஸராவ் பேட்டையிலிருந்து. உடம்பு அலுப்பாய் இருக்கிறது. மற்றவை நாளை. மன்னிக்கவும்.

உன் அன்புள்ள ரங்கு"

விசுவநாதய்யர் நிறுத்தி மூச்சுவிட்டார். "அந்த ஓர் இரவில் நான் உண்மையாகவே செத்துப் பிழைத்தேன். அந்த மகான் வாக்குப் பலித்துவிட்டது, இப்பொழுது என்ன சொல்லுகிறீர்கள்." என்று எங்களைப் பார்த்துக்கேட்டார். நாங்கள் ஒருவரும் பதில் பேசவில்லை.

கதவு மறைவில் உட்கார்ந்துகொண்டு சாவித்திரி இந்தக் கதையைக் கேட்டிருக்க வேண்டும். மின்னல் போல் எங்கள் அறைக்குள் பிரவேசித்து அவள் அத்திம்பேரை (விசுவநாதய்யரை) நமஸ்கரித்தாள்.

"உங்கள் விஷயத்தைப்போல் என் அத்தான் விஷயத்திலும் ஜோஸ்யம் பலித்து விட்டுப் போகட்டும். அக்கரையில்லை. ஆசீர்வதியுங்கள்' என்றாள்.

"அதவும் கட்டில் ஒன்றுகூடக் கிடைக்கும்போது" என்று சிரித்தான் சங்கரன்.

சமயத்தைப் பயன் படுத்திக்கொண்டு சாவித்திரியின் இடது பக்கத்தில் ஸீதாபதியும் தன் தகப்பனாரை நமஸ்கரித்தான்.

"பாருங்கள்" இந்தப் பெண்களுக்குள்ள சமயோசித புத்தியே அலாதி" என்றேன் நான்.

"ஆம்! என் குட்டு அவளுக்கு மட்டும்தான் புரிந்தது. சாவித்திரி சாவித்திரிதான்" என்று முடித்தார் விசுவநாதய்யர்.

[இது ஒரு ருஷ்யக் கதையைப் படித்ததன் விளைவு]

MEHTA'S SPECIALITIES

Well-known for their efficacy and Medicinal values

1 **SUNADRI ELIXIR**
For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 **PHOSPHORUS OIL**
A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 **MASTANA PILLS**
Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 **DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJA**
A great Blood Purifier & digestive & Potential Tonic.

Stocked by all important Chemists & Druggists of South India

K. S. MEHTA & CO.

250, China Bazaar, MADRAS.

இன்பக் குமிழி

க. கணபதி

இப்படியப்படி படுக்கையில் புரண்டாள். தூக்கமே வரவில்லை. தலையணைகளை வீசியெறிந்தாள் ஆத்திரத்துடன். கைக் கடிகாரம் 'டிக், டிக்' கென்று தன் கடமையைச் செய்துகொண்டிருந்தது. மேஜைமீதுள்ள அலாரம் டைம்பீசும் அத்துடன் ஒத்துழைத்தது. எதிரே சுவரிலுள்ள பெரிய கடிகாரமும் கம்பீரமாக அவைகளை ஆமோதித்தது. இந்தச் சப்தங்கள் காதில் விழ விழ அவள் இதயத்துடிப்பின் ஒலியும் சேர்ந்துகொண்டு பட படவென்று மும்முரமாக அடித்தது. அவளுக்கெதிராகச் சதியாலோசனையா?

காலம் கழிகிறது, செகண்டு, நிமிஷம், மணி, நாள், வருஷம்... ... ... இப்படியே போய்க்கொண்டிருந்தால்... ... ?

எழுந்தாள். விளக்கு ஸ்விட்சைத் தட்டினாள். மெல்ல நடந்தாள். நிலைக்கண்ணாடியில் பிரதிபலித்த அவள் உருவமும் அதையே— காலம் கடந்து போவதையே— வற்புறுத்தியது. எள்ளி நகையாடியது. வேறு எல்லாவற்றையும்விட தன் பிரதிபிம்பத்தையே காண வெட்கினாள். உள்ளம் குமுறி வெதும்பினாள். பத்திரிகைகள் இப்பொழுது அவளைப்பாராட்டிப் பத்தி பத்தியாக எழுதுவதில்லை. அவள் கச்சேரிக்கு வரும் கூட்டமும் குறைந்துவிட்டது. புதிது புதிதாக எத்தனையோபேர் முளைத்துவிட்டனர் இவளுக்குப் போட்டியாக. தமிழ்நாட்டு நாட்டிய மேடையிலே ஒப்புயர்வில்லா நடனராணியாகச் சோபித்திருந்த நாட்கள் சென்றுவிட்டன. அந்த நாளில் எவ்வளவு நேரமானாலும் உற்சாகமாக ஆடின கால்கள், இப்பொழுது சிறிது நேரத்தில் களைத்து, ஓய்ந்து, வெலவெலத்து விடுகின்றன. மூச்சு வாங்குகிறது. ஒவ்வொரு நாளும் நாட்டியமேடை; அதே பிரகாசமான விளக்குகள்; அதே மேக்கப்! அதன் விளைவாகக் கண்கள் எரிகின்றன அக்கினி ஜ்வாலையாக.

இருதயத்தின் பாரம் குறைந்த பாடில்லை. கடிகாரங்கள் போட்டி போட்டுக்கொண்டு ஓடுகின்றன. நிமிர்ந்தாள். கண்ணாடியிலுள்ள தன் பிரதிபிம்பத்தைப் பார்க்கவே வெறுப்பாக இருந்தது. சரேலென்று எழுந்து விளக்கை யணைத்துவிட்டுத் தலைமாட்டிலிருந்த ஒரு மாத்திரையை வாயில் போட்டுக்கொண்டு தூக்கத்தை வருவித்துக் கொண்டாள். அன்று தியேட்டரில் முன் வரிசையில் உட்கார்ந்துகொண்டு அவளையே கவனித்துக்கொண்டிருந்த அழகான வாலிபனின் உருவமும் அவளுடன் சென்றது கனவுலகிற்கு. அவன் யார்...? அவளுக்கும் தெரியாது!

பத்து வருஷத்திற்கு முன்பு சியாமளா, பி. ஏ. வகுப்பில் படித்துக்கொண்டிருந்தாள். அவள் கல்லூரி ஆண்டு விழாவிற்குத் தலைமைவகித்த கமலாதேவி நாட்டியக் கலையைப்பற்றி வெகுவாக புகழ்ந்து, தற்போது சங்கீதமும் நடனமும் ஒரு வகுப்பினரே பயின்று வருவதாலும், சமூகக் கொடுமையால் அவர்கள் மீளாநரகக்குழியில் தள்ளப்பட்டுவருவதாலும், கலையும் அவர்களோடு அழிந்து வருகிறது. படித்த பெண்களும், உயர்குடி மக்களும் அதைச் சாஸ்திரோக்தமாய்ப் பயின்று கலைக்குப் புத்துயிரளித்துப் புனிதமாக்கவேண்டும்-என்றெல்லாம் பேசினாள். சியாமளா இயற்கையிலேயே கலையார்வமுள்ளவள். சங்கீதத்திலும் நல்ல தேர்ச்சி உண்டு. அழகிய உருவமும், லாவகமான அவயவங்களும் ஒருங்கே அமையப் பெற்றவள். அன்றே உறுதிகொண்டாள், தான் இனி கலைக்காகவே வாழவேண்டும்; கலைத் தொண்டு செய்யவேண்டும் என்றெல்லாம். படிப்பு முடிந்ததும், பாரம்பர்யமாகத் தேர்ச்சி பெற்ற ஒரு நட்டுவனாரைக் கொண்டு வெகு உற்சாகமாகப் பயின்றாள். நாட்டிய சம்பந்தமான பண்டை நூல்களை ஆராய்ந்தாள், புராதன ஆலயங்களிலுள்ள கலா-நுட்பங்களமைந்த சிற்பங்களையெல்லாம் தேடிச் சென்றாள். அடுத்த வருஷம் பொங்கல் பண்டிகையன்று, கலா ரஸிகர் நிறைந்த சதஸில் அமோகமாக அரங்கேற்றினாள். பத்திரிகைகள் பிரமாதமாகப் புகழ்ந்து எழுதின. பிரமுகர்களும், ரஸிகர்களும் பாராட்டினார்கள். தன் வாழ்க்கையின் லக்ஷ்யமே நிறைவேறிவிட்டதாக எண்ணி அகமகிழ்ந்தாள். அன்று முதல் அவளுக்கு ஓய்வு ஒழிவு இல்லை. அவள் நடனமாடாத நகரம் கிடையாது. அவள் நாட்டியத்தைக் கண்டு களிக்காத ரஸிகர்கள் கிடையாது. 'நடன ராணி' 'நாட்டிய

கலாநிதி' போன்ற பட்டங்களுக்கும், பதக்கங்களுக்கும் கணக்கே இல்லை. நாட்டியமே உயிர், கலையே வாழ்வு என்ற எண்ணமே அவள் மனதில் நிறைந்திருந்தது. செல்வமும், புகழும் அவளைத் தேடி வந்தடைந்தன. சுகவாழ்விற்கேதுவான சாதனங்களுக்குக் குறைவேயில்லை. பெரிய பங்களா, அழகான தோட்டம், விலை உயர்ந்த நகைகள், ரோல்ஸ் ராய்ஸ் கார்... இவைகளுக்கிடையில், ரசிக வேடத்தில் காமவேட்டை யாடவரும் கயவர் கூட்டத் திற்கும் கணக்கில்லை. எனினும் அவர்கள் ஜம்பம் அவளிடம் சாயவில்லை. அவர்களைக் காணவும் அருவருப்படைவாள்.

நாட்கள் செல்லச் செல்ல, இத்தனை செல்வம், புகழ், போற்றுதல்களுக்கு இடையிலும் ஏதோ ஒருவித விவரிக்க முடியாத ஒரு குறைவுமட்டும் அவள் மனதை அரித்துக்கொண்டிருந்தது.

மறுநாள் இரவு. திரை தூக்கப்பட்டது. மேடையில் பிரவேசித்தாள், உடல் மட்டும் யந்திரம்போல ஆடியது. மனம்......? கண்கள் கூட்டத்தைத் துழாவின. கூட்டமும் அதிகம் இல்லை. ஆனல் 'அவன்; இன்றும் முன்வரிசையில் இருந்தான். அது ஒரு விதத்தில் ஆறுதலளித்தது. ஆறுதல் மட்டுமல்ல—உற்சாகமேவிட்டால் என்றுமே யில்லாதபடி உணர்ச்சியாக ஆடினுள். அந்த நடனம் முடிந்ததும் வழக்கம்போல் 'அப்ளாஸ்' கிடைத்தது. ஆனல், அந்த நாட்களைப்போலவா?

சற்றுநேரத்திற்கெல்லாம் மீண்டும் வந்தாள். முன்னிருந்த கூட்டமும் கலைந்துவிட்டது. அதோடு அவனும்......? ஏன்? எல்லோருமே நாட்டியத்தில் சலிப்படைந்து விட்டார்களா? அல்லது அவளிடத்தில் ......? அவளுக்கு வயதாகிவிட்டதென்ருே? இனி அவள் கிழவிதானு? கிழவி......? கால்கள் வெலவெலத்துவிட்டன. மற்ற அவயவங்களும் ஒத்துழைக்க மறுத்துவிட்டன. கிழவி...! முதுகில் யாரோ கூரிய கத்தியால் குத்தியதுபோன்ற உணர்ச்சி......நிலை தடுமாறி, திடீரென்று மேடையிலேயே சாய்ந்தாள். சற்றுநேரம் பேச்சு மூச்சு இல்லை. கொட்டகையிலிருந்த சில ஜனங்கள் அதுவும் ஒரு அபிநயமாகும் என்று எண்ணினர்! திரை விடப்பட்டது. வெட்கமும் அவமானமும் அவளைப் பிடித்துக்கொண்டன. மெல்ல எழுந்தாள். ஏதேதோ உபசரிப்புடன் அங்கிருந்த சிப்பந்திகள் ஓடிவந்தனர். யார் வார்த்தையும் அவள் காதில் ஏறவில்லை. கனவில் நடப்பதைப்போல வெளியே நடந்தாள். சினிமா பார்த்து விட்டுக் குழந்தை குட்டிகளோடு திரும்பும் குடும்பங்களும், நிலவொளியில் நிம்மதியாக உலவிவரும் உல்லாச தம்பதிகளும் வீதி வழியே போய்க்கொண்டிருந்தனர். அவளுடைய டிரைவர் ஒரு மணிக்குத்தான் வருவான். சிறிது தூரம் நடந்து எதிரில் வந்த டாக்ஸியில் ஏறிக்கொண்டு, "போ' 'என்ருள்.

"எங்கே?"

"எங்கோயாவது போ!"

இது என்ன பித்து,—என்று நினைத்துக் கொண்டு எங்கெல்லாமோ ஓட்டிவிட்டுச் கடைசியில் மெரீனவுக்கு வந்தான். கடல் காற்று ஆனந்தமாக வீசிற்று. சற்றுநேரத்தில் அவள் அயர்வும் தெளிந்தது. பங்களாவுக்குத் திருப்பச் சொன்னுள்.

* * *

பாஸ்கரன்—வாழ்க்கை வாழ்வதற்கே—என்ற தத்துவத்தை அனுதினமும அநுசரிப்பவன். அவன் யார் என்று அநேகருக்குத் திட்டமாய்த் தெரியாது. சுகவாசி. கம்பீரமான தோற்றம். உறுதியும் கவர்ச்சியும் உள்ள உடலமைப்பு. எப்போதும் 'பெரிய' மனிதர்களிடையேதான் சகவாசம். அவன் போகாத கச்சேரிகளோ கலந்துகொள்ளாத விருந்துகளோ இரா. பிதுரார்ஜித சொத்துக்கள் காலியாகிவிட்டாலும் காலம் மட்டும் "எப்படியோ" சுகமாகக் கழிகிறது. சில நாளாகச் சியாமளாவின் நாட்டியக் கச்சேரிக்கு இடைவிடாது போய்க்கொண்டிருந்தான். கலையார்வத்தினுலோ அல்லது......அவள்மீது கொண்ட காதலினுலோ அல்ல; அவள் அழகிய கழுத்தை அலங்கரித்த வைர நெக்லேஸின் மேல் கொண்ட மோகத்தினுல்தான்! அதைக் கண்டதுமுதல் அதே நினைவாக இருந்தான்.

அன்று போனபொழுது அவள் கழுத்தில் அதைக் காணவில்லை. முத்துமாலை அணிந்திருந்தாள். திடீரென்று தியேட்டரை விட்டுப் புறப்பட்டான், அவன் பங்களாவை யடைவதும் யாருமறியாமல் அவள் படுக்கையறைக்குச் செல்வதும் சில நிமிஷநேரந்தான்!

கையில் 'டார்ச்சை' எடுத்துகொண்டு அறையை ஆராய்ந்தான். விசாலமான இடம். ஆடம்பர அலங்காரங்கள் நிறைந்து இருந்தாலும் சோபையற்று இருந்தது! ஒருவித சுகந்தமணம் அவனைச் சுற்றித் தழுவி அமுக்கிவிடுவதுபோலப் பற்றிக்கொண்டிரு

ந்தது, மெல்ல நடந்து நிலைக்கண்ணாடிக்கு வந்தான். மேஜையில் மங்கையர் மனதை மயக்கும் 'மேக்கப்' வஸ்துக்கள் அலங்காரமாக வைக்கப்பட்டிருந்தன. அதோடு தோல் பை (வானிட்டி பாக்) ஒன்றும் ஒரு புறமாகக் கிடந்தது. அதிலும் பவுடர் வகையராக்கள்தான் இருக்கும் என்ற எண்ணத்துடன் அலக்ஷியமாகத் திறந்தான். தூக்கி வாரிப்போட்டது அவனுக்கு! அவன் தேடி வந்த வைர நெக்லேஸ் அவனைப் பார்த்து ஏளனமாக நகைப்பதுபோல அதற்குள் டாலடித்துக்கொண்டிருந்தது! இரும்புப் பெட்டியிலோ வேறு பத்திரமான இடத்திலோ தன் முழுச் சாமர்த்தியத்துடனும் சிரமப்பட்டு எடுக்கத் தயாராக வந்தவனுக்கு இது பெரிய ஏமாற்றமாகவே இருந்தது. திக்பிரமை பிடித்தவனாய்ச் சற்றுத் தயங்கினான்.

விலையுயர்ந்த நகையைப் பத்திரமாக வைக்காமல் மேஜையிலேயே அலக்ஷியமாகப் போட்டு வைப்பதென்றால் அவள் ஒரு சாமான்ய ஸ்திரீயாக இருக்கமுடியாது. அவனும் எத்தனையோ ஸ்திரீகளை அறிந்திருக்கிறான்— இவள் கவலையறியாத ஒரு அபூர்வமான சந்தோஷப் பிரகிருதியாகவே இருக்கவேண்டும், தன்னைப்போல! அதை எடுத்துச் சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டான்! அவளைப்பற்றி இன்னும் தெரிந்துகொள்ள ஆவல் கொண்டவனாய் அறை முழுவதும் ஆராய்ந்தான். அவளுடைய படுக்கையைக் கண்டான். பயபக்தியுடன் உட்கார்ந்தான் ஓரத்தில். அந்த இடத்தைவிட்டுப் போகவே மனமில்லை. என்றுமில்லாதபடி ஆயாசம் ஏற்பட்டது. காரியமோ முடிந்துவிட்டது. ஆனால் நாட்டியம் முடிந்து அவள் திரும்பி வர இன்னும் ஒருமணி நேரமாவது ஆகும். அதுவரையில் சற்றே இளைப்பாறிக்கொண்டு.........!

கதவு திறக்கும் சப்தம்.

"எனக்காகக் காத்திருக்கவேண்டாம். பால்மட்டும் அனுப்பிவிட்டுப் படுத்துக் கொள்..." என்றாள் வேலைக்காரியிடம்.

"அட கிரகசாரமே! இதற்குள்ளாகவா வந்துவிட்டாள். இப்போது போனால் யார் கண்ணிலும் படநேரிடுமே! அவள் படுத்துவிட்டால் பிறகு சாவகாசமாக......... அது

லாக்ஸாமிண்ட்

இனிய தித்திக்கும் சுகபேதி பெப்பர்மிண்ட் மாத்திரைகள்

தயாரிப்பவர்கள்:- ஸெல்டோனா பார்மகல்ஸ்

ஏஜெண்டுகள்:— தாதா & கம்பெனி, சென்னை.

எங்கும் கிடைக்கும்

வரையில் எங்கேயாவது ஒளிந்துகொள்ளலாம்......'' என்று நினைத்துப் பால்கனியின் புறமாக மறைந்து நின்றான்.

உள்ளே வந்தாள். அவள் நடையில் என்ன தளர்வு. எவ்வளவு ஆயாசம். ஒன்றும் செய்யத் தோன்றாதவளாய்ச் சற்று நின்றாள். பிறகு கீழே விழுவதுபோல ஒரு நாற்காலியில் சாய்ந்தாள். முகத்தில் ஏக்கமும் துக்கமும் பரிபூர்ண ஆட்சிகொண்டிருந்தன. எந்த நிமிஷமும் அழுது விடுவாள்—என்பது போன்ற தோற்றம். உடல் நலமில்லையா? அல்லது மன நோய் தானா? ஆமாம்! அதனால்தான் இவ்வளவு சீக்கிரமாக.........ஆனால் அவளுக்கு என்ன குறைவு? பாவம் ரொம்பவும் மனம் இடிந்து போயிருக்கிறாள். சீக்கிரம் படுத்துக் கொள்வாள்......... என்று எண்ணினவனாய் அவளையே கவனித்துக்கொண்டிருந்தான்.

எழுந்தாள். நிலைக்கண்ணாடியிடம் சென்றாள். ஐயோ! மேஜையில் அவன் காலியாக வைத்த, தோல் பையை அதோ............ பார்த்துவிடுவாள்! ....அவன் ஹிருதயம் சம்மட்டி கொண்டு அடிப்பதுபோல இருந்தது. ஆனால் அவள் அதை வெகு அலக்ஷியமாக ஒருபுறம் தள்ளிவிட்டு, விளக்கு ஸ்விட்சைத் தட்டிவிட்டு நிலைக்கண்ணாடிக்கெதிரே சென்று, அதற்குள் புகுந்துவிட முயல்வதுபோல முகத்தை அதில் அழுத்தினாள். முகத்தின் ஒவ்வொரு பாகத்தையும் ஊன்றிக் கவனித்தாள். விபரீதப் பிரகிருதிகள் இந்த ஸ்திரீகள்! அபூர்வ ஜந்துக்கள்! முகத்தை இப்படிக் கோணிக்கொள்ளும்படியாக என்னத்தைப் பார்த்துவிட்டாள் கண்ணாடியில்? என்று நினைத்துக் கொண்டான்.

அங்கிருந்து பார்த்தவரையில் அவள் அழகிதான். நல்ல அழகி! பக்கத்திலுள்ள கண்ணாடியில் பிரதிபலித்த அவள் கழுத்து என்ன லாவண்யம்! தோளின் அமைப்புத்தான் எவ்வளவு கவர்ச்சிகரம்! மற்ற அவயவங்களும்............

ஆனால் அவள் முகம் ஏன் மறுபடியும் மாறுகிறது? தன் பிரதிபிம்பத்தையே ஏன் இவ்வளவு வெறுப்புடன் பார்க்கிறாள், தன் பரம வைரியைப் பார்ப்பதுபோல. ஆமாம்! அவளுக்கு வயதாகிறது என்பதை அவள் வாயின் ஓரங்கள், கன்னங்கள், கண்ணிமைகள் முதலியன ஒளிவு மறைவு இன்றி அறிவுறுத்துகின்றன. உள்ளம் வெதும்பியது. உடல் குலுங்கியது. ஆடைகளைக் களைந்தாள். தன்னிருகைகளாலும் மார்பின் குறுக்காகத் தோளைப் பிடித்துக் கொண்டாள். மேஜையின்மேல் உடலைச் சற்று அழுத்தினாள். அதனால்கூட ஏதாவது இன்பம் கிடைக்குமா? காதலனுடைய அன்பணைப்பின் இன்ப ஆதர்சம்தான் ஏற்படுமா? பித்துப் பிடித்தவளைப்போல அங்கும் இங்கும் நடந்தாள். ஒரு புடவையை எடுப்பாள். பிறகு வீசி எறிவாள். உட்கார்வாள். பெருமூச்சுவிடுவாள். எழுந்திருப்பாள். திரும்பவும் கண்ணாடியிலுள்ள தன் சாயல்— அவள் அங்க அமைப்பில் சிறிதுகூட அப்பழுக்குச் சொல்ல முடியாது. சிற்பியின் கைச் சிலையைப் போலக் கடைந்தெடுத்த உருவம். வயதாகிவிட்டாலும் தளர்ச்சியோ சுருக்கமோ இன்னும் தென்படவில்லை. தன்னையே சற்றே தடவிக்கொண்டாள். தன்மீது ஏற்பட்ட உதாசீனமும் வெறுப்பும் மாறி, தன் அழகான அவயவங்களின்மீது இரக்கம் ஏற்பட்டது. அவைகளுக்காக என்ன பாடு பட்டுக் காப்பாற்றியிருப்பாள்? கண்ணை மூடிக்கொண்டு குவிந்தெழுந்த தன் ஸ்தனங்களைத் தன்னிரு கைகளாலும் அழுத்திக் கொண்டாள். நீண்ட பெருமூச்சுவிட்டாள்.

அவனையுமறியாமல் அவளிடம் இரக்கமும் பச்சாத்தாபமும் அவனுக்கு ஏற்பட்டன. அவனிருந்த நிலைமை அவனுக்கே சங்கடமாக இருந்தது. எவ்வளவோ ஸ்திரீகளைப் பார்த்திருக்கிறான். ஆனால் இவ்வளவு அழகான வடிவத்தைக் கண்டதேயில்லை. அதைவிட அதிகமாக அவளுடைய சோகமான திக்கற்ற நிலைமை அவனை வலிந்து இழுத்தது. அன்பும் ஆதரவும் நிறைந்த இரக்கச் சிந்தனையை அவன் உள்ளத்தில் தோற்றுவித்தது. அவன் கேவலம் ஒரு திருடன்தான். லக்ஷ ரூபாய் மதிப்புள்ள அவளுடைய வைர நெக்லேஸ் இன்னும் அவன் பையில்தானிருக்கிறது. எனினும் அவனும் ஒரு ஆண்மகன்தானே! வைர மாலையைத் தொட்டுக்கொண்டே இருந்த கையை எடுத்தான். உடனே ஓடோடிப் போய் அவளைக் கட்டித்தழுவி தேற்றி ஆறுதல் செய்யவேண்டும். அவள் ஏக்கத்தையும், துக்கத்தையும் போக்க ஏதாவது— என்னவானாலும்—செய்யவேண்டும் என்பது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. அதற்குள் அவள் ஒரு பாட்டிலில் இருந்து சில மாத்திரைகளை(?) எடுத்துப் பாலில்போட்டுக் கலக்கினாள். பிறகு எழுந்தாள். இங்குமங்கும் நடந்தாள்.

இனி வாழ்க்கையில் என்ன இருக்கிறது? எதற்காக உயிர்வாழ வேண்டும்! யாருக்காக? கலைக்காகவா? கலை!... அதை யார் சிந்துகிறார்கள்! என் இளமையின் எழில்

உள்ளவரையில் என்னைப்பாராட்டினார்கள்-வானளாவப் புகழ்ந்தார்கள். ஆனால் இப்போது...? என்னைவிட இளையவர்கள் எத்தனையோ பேர்! இனி சியாமளா தேவையில்லை. அவளுக்கு இவ்வுலகில் இருக்க இடமேயில்லை! நாளைக்குத் திருவனந்தபுரம் போகமாட்டாள். சியாமளா தூங்கப்போகிறாள். ஆமாம்! ஒரே தூக்கமாக! புகழ்! அதில் என்ன இருக்கிறது? கீர்த்தி! அதனால் எனக்கென்ன லாபம்? இன்று என்னை விரும்புபவர் யாராவது உண்டா? எனக்காகக் கவலைப்படுகிறவர் யாராவது ஒருவர் உண்டா? எல்லோரும் என்னைக் கண்டு ரஸித்தார்கள். அவர்கள் வாழ்க்கையில் உற்சாக மூட்டினேன். அவர்கள் இதயத்தில் இன்பத்தை நிரப்பினேன். அவர்களுக்காக அரும்பாடு பட்டேன். அவர்களுக்காகவே உயிர் வாழ்ந்தேன். ஆனால், இன்று...............? எனக்காக வாழ்பவர் யார்? ஒருவருமில்லை! ஒருத்தர் கூட இல்லை! நான் என்றுமே ஏகாங்கி! உலக முழுவதும் ஒன்று. நான் மட்டும் எப்போதும் தனி! தனி!! சியாமளா இனி ஆடமாட்டாளே—என்று யாராவது வருந்தப் போகிறார்களா? நான் இறந்துவிட்டேன் என்று யாராவது ஒரு சொட்டுக் கண்ணீர் விடப் போகிறார்களா? என் காலம் முடிந்துவிட்டது. என் முகம் வாடி, வதங்கி, தோல் விகாரமாகச் சுருங்கி, கிழவியாகி— ஒரு காலத்தில் பிரபல நாட்டியக்காரியாக இருந்தவள்— என்று என்னைப் பார்ப்பவர்கள் ஏளனமாகப் பேசிக்கொண்டு போவதைக் கேட்டுக்கொண்டு— என்னை அந்த நாளில் பார்த்தால் எப்படி இருந்தேன் தெரியுமா?— என்று பாட்டிக்கதை சொல்லிக்கொண்டு— மாட்டேன். அது என்னால் முடியாது. முடியவே முடியாது. ஆனால், எங்கே போவது? எங்கேயாவது கிராமாந்தரத்திற்குப்போய்......... தனியாக......... இருந்து...... இருந்து...... கடைசியில்...... இறந்து... நாதியற்ற பிணமாக... முடிவில் அங்கும் சாவுதானே? எங்கும் சாவுதான்!... சியாமளா! 'அந்த' சாவுக்காக அவ்வளவு நாள் காத்துக்கொண்டிருக்காதே! இதுவே சரியான சமயம். இப்பொழுதே......... ஆமாம்...... இப்பொழுதே...... சற்று நிதானித்தாள். பாலில்போட்ட மாத்திரைகள் கரைந்திருக்கும். பாலைப்பார்த்தாள். ஒரு சிறு கரண்டியெடுத்துக் கலக்கினாள். கரண்டியில் கொஞ்சம் எடுத்து நுனி நாக்கில் சுவைத்து...... ஐயோ! என்று இரண்டு கரண்டி சர்க்கரைபோட்டுக் கலக்கினாள். பிறகு எழுந்தாள், திரும்பவும் கண்ணாடிக்குப் போய் தன் உருவத்தைக் கவனித்தாள். என்னதான் இருக்குமோ அதில்! தன் நினைவின்றியே முகத்திற்குக் கொஞ்சம் பவுடர் அடித்துக்கொண்டாள். அவள் உதடுகளிலிருந்த நடுக்கம் ஓய்ந்துவிட்டது. மனம் உறுதியாகிவிட்டது. எங்கிருந்தோ இப்பொழுதுதான் வந்ததுபோல ஒரு புன்னகை அவள் இதழ்களில்— நடனமேடையின் புன்னகைதான்! பாலை எடுத்தாள். கையை உயர்த்தினாள். அவள் விரல்களில்தான் என்ன லாவகம்! கடிகாரங்கள் 'டிக், டிக்' கென்று அடித்துக்கொண்டிருந்தன. அவள் இதயமும் அத்துடன் போட்டி போட்டுக் கொண்டிருந்தது. பால் கிண்ணத்தை உதட்டின் அருகே கொண்டுவந்தாள், மெதுவாக, நிதானமாக.

"மன்னிக்கவும். ஆனால், தயவுசெய்து..." என்று சொல்லிக்கொண்டே அவளருகில் போய், பால் கிண்ணத்தை வாங்கி மேஜையில் வைத்தான். அவனை ஏற இறங்கப் பார்த்தாள். அப்பொழுது அவள் பயப்படவில்லை. ஆனால் அவமானந்தான் பிடுங்கித் தின்றது. போயும் போயும் இவனா இந்த நிலையில் வரவேண்டும்! ஆனால்...... ஒரு விதத்தில் சந்தோஷந்தான்! சற்றுச் சமாளித்துக்கொண்டு,

"நீர் யார்?...... இங்கே உமக்கென்ன வேலை?"

"நான் யாராயிருந்தால் என்ன? என் கடமையைச் செய்தேன். இன்னும்......"

"இந்நேரத்தில்........... ஒரு ஸ்திரீயின் படுக்கையறையில்வந்து...நல்ல கடமை!..."

"நான் இங்கே வந்திருப்பது முதல் தடவையல்ல!"

"என்ன?"

"எத்தனையோ தடவை வந்திருக்கிறேன்" என்று தயங்காமல் புளுகினான்.........

"எதற்காக?"

"என் காதல் தெய்வத்தைத்தரிசித்து உடனிருந்து மகிழாவிட்டாலும் அவளிருப்பிடத்தின் சாந்நியத்தைப் பெற்று மகிழ்ந்து......"

"போதும்! உம்முடன் இந்நேரத்தில் வாதாட விருப்பமில்லை...வந்த வழியே செல்லும். கதவு திறந்துதானிருக்கிறது..."

"என்வழி அதல்ல! அதோ பால்கனி!"

"பால்கனி வழியாகவா!" உண்மையிலேயே அவனிடம் அவளுக்குச்சற்று இரக்கம் ஏற்பட்டது. இரக்கம் மட்டுமல்ல...! தனக்காக,...தான் வசிக்கும் இடத்தில், தானில்லாவிட்டாலும் சற்றே தங்கிமகிழ...

சினிமா நட்சத்திரங்களைப் போல, நீங்களும்
உங்கள் சருமத்தைக் காப்பாற்றுங்கள்!

LTS. 133-50-40 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED

அவன், பயங்கரமான நள்ளிரவில், தன் உயிரையே திரணமாக மதித்து, அதி உயரமான பால்கனியின் வழியாக...ஐயோ!...... தன் மனக் குழப்பத்தை வெளிக்குக் காட்டிக்கொள்ளவிரும்பாமல், "போதும், உமது கட்டுக் கதைகளெல்லாம்! அறையை விட்டு வெளியே செல்லும்."

"நீ தற்போதுள்ள மன நிலையில் உன்னைத் தனியே விட்டு செல்வது சரியல்ல. பால் கிண்ணத்தில் இன்னும் 'அது' இருக்கிறது." வெட்கத்தால் அவள் முகம் சிவந்தது.

அவமானத்தால் தலை கவிழ்ந்தது. கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது. அவனிடமிருந்து அதை மறைக்க யத்தனித்து, திரும்பினாள். இனியும் சும்மா அவளைப் பார்த்துக்கொண்டிருக்க மனமில்லை. தன்னிரு கைகளாலும் அவள் தோளைப் பிடித்தான். அவள் காதோடு காதாக மெல்ல, "சியாமளா, என் கண்ணே!" என்று சொல்லிக்கொண்டே அவள் கழுத்தின் புறமாக முத்தமிட்டான். அவள் கனவு நனவாகியது. பாலைவனத்து மணலில் விழும் மழைத்துளிகளைப்போல அவள் காதுகள் ஒருவித தீவிரப் பசியுடன் அவன் வார்த்தைகளை விழுங்கின. என்றுமே அனுபவித்தறியாத இந்த இன்ப ஸ்பரிசம் எதிர்பாராத அளவிற்கு அவளை அடிமைப்படுத்திவிட்டது. மின்சார சக்தியொன்று திடீரென்று தாக்கி அவள் முதுகினூடே எங்கும் பரவுவதுபோன்ற விசித்திர உணர்ச்சி ஏற்பட்டது. உடல் வியர்த்தது. என்ன செய்கிறோம் என்பதையும் அறியாதவளாய் அவன் மார்பில் சாய்ந்தாள். ஒரு குழந்தையைப்போலத் தூக்கிக்கொண்டு போய்ப் படுக்கையில் வைத்தான்.

"எனக்கு உடம்பு சரியாக இல்லை. போங்கள், போய்விடுங்கள்........" என்று குழந்தையைப்போலக் கதறினாள்.

"உடம்புமட்டுமல்ல? உன் மனமும் சரியாகவில்லை. உன்னைப் பாதுகாக்கவே நான் இங்கே இருக்கிறேன். அது என்னால்தான் முடியும். உண்மையில் நீ என்னைப் போகச்சொல்ல விரும்பவில்லை என்பதையும் அறிவேன். இனி—இன்றிரவுமட்டுமல்ல—என்றுமே—உன்னைப் பாதுகாத்து மகிழ்விக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுவிட்டேன். நம் ஆயுட்காலமுழுதும் இணைபிரியாத காதலர்களாக இன்ப வாழ்க்கையில் திளைப்போம்......" என்றான். இதற்கு அவள் பதில் சொல்லுவதற்கு என்ன இருக்கிறது? உலகம் இன்னும் அவளைக் கைவிட்டுவிடவில்லை! அவனை இறுகத் தழுவிக்கொண்டு முகத்தை அவன் மார்பில் புதைத்தவளாய்த் தேம்பித் தேம்பி அழுதாள்...? அவளிருந்த மனநிலையை அவன் பூரணமாக உணர்ந்தவனாதலால், அவளாக அழுது முடிக்கும் வரையில் பொறுமையுடன் அவளைத் தழுவிய வண்ணம் இருந்தான்.

புஷ்பம் மலர்ந்திருக்கிறது. மாலைக்காற்றில் ஒய்யாரமாக அசைந்து ஆடுகிறது. அதைத் தேடி வருகிறது வண்டு. சுற்றி வட்டமிடுகிறது. ரீங்காரம் செய்கிறது. இதழ்களின் மத்தியிலமர்ந்து தெவிட்டாத தெள்ளமுதைப் பருகுகிறது. இன்ப லாகிரியில் தலை கிறுகிறுக்கிறது. இனி ஆட்டமுமில்லை; பாட்டுமில்லை. மலருக்கோ வண்டுக்கோ புற உலகைப் பற்றிய சிந்தனை சிறிதுமில்லை.

கோழி கூவியது. தூக்கம் கலைந்து எழுந்தான். அவள் இன்னும் தூங்கிக்கொண்டுதானிருந்தாள். இதழ்களில் புன்னகை அரும்பிக் கொண்டிருந்தது. என்ன இன்பக் கனவுகள் காண்கிறாளோ! குழந்தையைப்போன்ற கள்ளங் கபடமற்ற இதயம். முன்பின் பழகாத அவனிடத்திலும் அபார நம்பிக்கை. ஆனால்,...........அவளுடைய லக்ஷ ரூபாய் பொறுமான வைர நெக்லேஸ் இன்னும் அவனுடைய சட்டைப் பையில்தானிருந்து உறுத்திக்கொண்டிருக்கிறது. இப்போது அதன் கனம் அவனை அதல பாதாலத்திற்கே அமுக்குவதுபோல இருந்தது. அதன் ஸ்பரிசம் நெருப்பைப்போலச் சுட்டது. அதற்கு மேலாக, அவன் மனச்சாட்சியும் (அவனுக்குக்கூட அது இருந்ததா?) அவனை வாதித்தது. இருப்புக் கொள்ளவில்லை. மெல்ல எழுந்தான். சந்தடி செய்யாமல் நடந்தான். மேஜைக்குப் போனான்.

அவளும் விழித்துக்கொண்டாள். பக்கத்தில் அவனைக் காணவில்லை. இரவு அவள் கண்டதெல்லாம் கனவுதானா?......அல்ல... ......அதோ......அவன்.........அங்கே என்ன செய்கிறான்? அவன் சட்டைப் பையிலிருந்து வைர நெக்லேஸை எடுத்து மேஜையிலிருந்த தோல் பைக்குள் வைக்கிறானே! என்ன ......? அவன் வந்தது கேவலம் அந்த வைர நெக்லேஸை விரும்பியே தானா? தன்னை விரும்பவே யில்லையா! அவன் சொன்னதெல்லாம் பொய்தானா? பொய்.........சர்வமும் பொய்......வேஷம்......நாடகம்......... நடிப்பு.........சியாமளா! உன்னையே அவன் விரும்பி வந்ததாக எண்ணி இறுமாப்படைந்தாய்! அந்த வைரநெக்லேசுக்கிருக்கும் கவுர

வம் கவர்ச்சியுங்கூட உனக்கு அணுவளவும் கிடையாது! கிடையவே கிடையாது! அதற்காக எவ்வளவு தியாகம் செய்து, உயிரையே திரணமாக மதித்து, நள்ளிரவில் கபட நாடகம் நடித்து, உன்னையும் வஞ்சித்து......காதலனா......?......காதகன்! காதல்......காதல்! அதைவிட சாதல்.........சா...த...ல்—என்ற எண்ணக் குமுறல்கள் அவள் மனதில் பெரும் புயலைக் கிளப்பிவிட்டன. மூளை குழம்பியது. உலகமே சுற்றுவதுபோல இருந்தது. கண்ணை இறுக மூடிக்கொண்டாள். ஆனால் சிந்தனைகளையும் மூடிவிட முடியுமா?

மேஜைமேல் பால் கிண்ணம் இன்னும் அப்படியே இருக்கிறது. அதை எடுத்துக் கொட்டிவிட்டுக் கிண்ணத்தையும் கழுவித் துடைத்து வைத்தான். "நேரமாகிறது. கண்ணே! இன்பக் கனவுகளுடன் நன்றாகத் தூங்கு! பிறகு வருகிறேன்........." என்று மெதுவாகச் சொல்லிவிட்டு நழுவினான்.

டெலிபோன் மணியோசை கேட்டு எழுந்தாள்.

"யாரது? மானேஜரா?............உடம்பு தேவலை......யார்? குமாரி உஷாவா?......... நான் வந்த பிறகா?......ஆடினாளா? ஊம்... ஊம்...... பாராட்டினார்களா? ......ஓஹோ! சரி......ஊம். திருவனந்தபுரத்திற்குத்தானே ....இன்று எக்ஸ்பிரஸில்......ஊம்......... வந்தனம்."

உஷா! உன்னைக் கொண்டாடினார்களா! கொண்டாடட்டும். உன் இளமை இன்னும் மாறவில்லை.........ஆகவே சியாமளா வேண்டாம். ஆனால் திருவனந்தபுரத்திற்கு எதற்காக? அங்குமட்டும்? எங்கும் இதே கதிதானே?

பாஸ்கரா! நீ ஒரு கள்ளனென்று அறிந்தேன். ஆனால் என் உள்ளத்தைக் கவர வந்தாய் என்று எண்ணி ஏமாந்தேன். இறுமாப்படைந்தேன். பிறகு? கேவலம் வைர மாலையையே நீ விரும்பி வந்தாய், என்னைக் கெஞ்சித்தும் விரும்பவில்லை. ஆனால் வஞ்சனை வார்த்தைகளை வாஞ்சையுடன் மொழிந்தாய். உன்மேல் தவறில்லை. உலகமே அப்படித்தான். நன்றிகெட்ட உலகம். வண்டு விரும்புவது மலரையல்ல—மதுவைத்தான். பிறகு......?

கலையாம்!...... காதலாம்...... ! எல்லாம் புரட்டு! சர்வமும் ஏமாற்று வித்தை! சுயநலச் சூழ்ச்சி! வஞ்சகம்! மரணம் ஒன்றே நிரந்தரமான நிம்மதி தருவது. அது ஏமாற்றாது. மரணமே! வா. என்னைக் கைவிடாதே! என்னை அணைத்துக்கொள்! இனி......

வேலைக்காரி காப்பியைக் கொணர்ந்து அவளருகே வைத்துவிட்டுச் சென்றாள்.

அன்று மாலை தினசரிகளில்..."நடன ராணியின் மறைவு-பிரபல நாட்டியக்கலா சேவகியான சியாமளாதேவி இன்று காலை தனது பங்களாவில் படுக்கையில் படுத்திருந்தபடியே திடீரென்று இறந்துவிட்டாள்... அவள் கலைக்காகவே வாழ்ந்தாள்........." என்று கொட்டை எழுத்துக்களில் பிரசுரித்திருந்தன.

பாஸ்கரன் கண்களிலும் அவனையறியாமலே தாரை தாரையாக நீர் வழிந்தது. அவன் கேவலம் திருடன்தான். எனினும் கொலையாளியல்ல! இன்று அவள் மரணத்திற்குத் தானே காரணம் என்பதை உணர்ந்து உள்ளம் குமுறினான். அவன் இதயம் வெடித்துவிடும்போல் இருந்தது.

அதனால் அவள் ஆத்மா சாந்தியடையுமா?

"காவேரி" சந்தா விபரங்கள்

	உள்நாடு	சிலோன்	பர்மா & மலேயா
வருஷம்	4 8 0	4 12 0	6 0 0
ஆறுமாதம்	2 4 0	2 8 0	3 0 0
தனிப்பிரதி	0 6 0	40 சதம்	0 8 0

ஏஜென்ஸி இல்லாத இடங்களுக்கு பொறுப்புள்ள ஏஜண்டுகள் தேவை.

ராடர்

ஆர். கே. விசுவநாதன்

சமீபத்தில் முடிவுபெற்ற இரண்டாவது உலகப் போரின் காரணமாக மக்கள் முன்னேற்றம் அடையாவிட்டாலும் விஞ்ஞானம் அதிக முன்னேற்றமடைந்தது. இதுவரை நன்கு அறியப்படாமலிருந்த அநேக விஷயங்கள் அறியப்பட்டன. பல கருவிகளும் சாதனங்களும் புதிதாக உண்டாக்கப்பட்டன. இவற்றில் இரண்டு உலகப் பிரசித்தமாகி விட்டன. அவைகள் அணு வெடிகுண்டும், 'ராடர்' என்னும் சாதனமும். அணு வெடிகுண்டு அழிக்கும் கருவி. ஆனால் 'ராடர்' என்னும் சாதனத்தினால் மக்களுக்கு நன்மைதான் அதிகம். ஜர்மானியர் லண்டனையும், அதைச் சூழ்ந்துள்ள இடங்களையும் விமானங்களிலிருந்து தாக்கிவரும்போது, ஆங்கிலேய விஞ்ஞானிகள் இச்சாதனத்தைக் கண்டுபிடித்து அவர்கள் நாட்டைக் காப்பாற்றிக் கொண்டார்கள். இச்சாதனத்தின் தத்துவம் எளிது. அதை இக்கட்டுரையில் ஆராய்வோம்.

எதிரொலி நிகழ்ச்சியை அனைவரும் கவனித்திருக்கலாம். ஒரு பெரிய சுவருக்குச் சற்றுத் தூரத்தில் நின்றுகொண்டு சத்தம்போட்டால் எதிரொலி கேட்கும். ஒலி தோன்றிய இடத்திலிருந்து அலைகள் கிளம்பி எல்லாத் திசைகளிலும் பரவுகின்றன. அவ்வாறு பரவிச்செல்லும் அலைகளில் ஒரு பகுதி சுவரில் மோதி, பிரதிபலனம் அடைந்து, திரும்ப நாம் நிற்கும் திசையை நோக்கி வந்து நம்மை அடையும்போது நமக்கு எதிரொலி புலனாகும். இவ்வெதிரொலியை நன்றாகக் கேட்பதற்குச் சில நிபந்தனைகள் உண்டு. ஒலி தோன்றி நேராக நம்மை அடைந்து, வீசம் செகண்டு நேரம் ஆனபின்தான் பிரதிபலனம் ஆகிவரும் ஒலி விழவேண்டும். ஒலி அலைகள் செகண்டுக்கு ஆயிரத்து நூறு அடி வீதம் பரவுவதாகக்கண்டுபிடித்திருக்கின்றார்கள். வீசம் செகண்டில் ஒலி சுமார் எழுபது அடி தூரம் பரவும் என்று அறியலாம். ஆகையினால் நாம் இருக்கும் இடத்திலிருந்து சுவர் முப்பத்தைந்து அடிக்குமேல் இருந்தால் அன்றி எதிரொலி உண்டாகாது. இது ஒரு நிபந்தனை. அடுத்தபடியாக இருக்கவேண்டியது ஒலியின் நீடிப்பைப் பொறுத்தது. ஒலி தோன்றியவுடன் சிறிது நேரம்தான் அதிக முழக்கத்துடன் நீடித்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் எதிரொலியின் முழக்கம் நன்றாக இருப்பதுடன் முதல் ஒலியுடன் கலக்காமல் வேறாகப் பிரிந்து கேட்கும். இதில் மற்றொரு நன்மையுமுண்டு. நம்மைச் சுற்றி நான்கு திசைகளிலும் சுவர்கள் இருந்தால் ஒவ்வொன்றிலும் ஏற்பட்ட எதிரொலி அப்போதுதான் தனித்தனியே பிரிந்து கேட்கும். இவ்வெதிரொலி விழும் நேரத்தைக்கொண்டு சுவரின் தூரத்தைக் கணக்கிடலாம். ஒரு பெரிய கோவில் சுவருக்குச் சற்றுத் தூரத்தில் நின்றுகொண்டு வேகமாகக் கையைத் தட்டி நிறுத்திவிடுவதாகக் கொள்வோம். அப்போது உடனே கேட்கும் ஒலிக்கும் எதிரொலிக்கும் இடையே உண்டான நேரத்தை நுணுக்கமாக அளப்போம். இந்நேரம் இரண்டு செகண்டு என்று கண்டால் சுவர் ஆயிரத்துநூறு அடி தூரத்தில் இருந்திருக்கவேண்டும் என்று சுலபமாக அறியலாம். இதே தத்துவத்தைக் கொண்டுதான் ஆகாய விமானம் இருக்கும் தூரத்தை அறிகின்றார்கள். ஆனால் இதற்கு ரேடியோ அலைகளை உபயோகிக்கின்றார்கள். இவ்வலைகளைப்பற்றிச் சிறிது பார்த்தபின் 'ராடர்' சாதனத்தின் அமைப்பைக் கவனிப்போம்.

பூமியைச் சூழ்ந்து எங்கும் வியாபித்திருப்பது விசும்பு. நீர்ப்பரப்பில் ஒரு சிறு கல்லைப் போட்ட மாத்திரத்தில் அதைச் சுற்றி அலைகள்தோன்றி எல்லாத் திசைகளிலும் பரவுவதைப் பார்க்கிறோம். இதைப்போல விசும்பிலும் அலைகளை உற்பத்திசெய்யலாம். நீர்ப்பரப்பில் அலைகள் தொடர்ந்து உண்டாகிப் பரவிக் கொண்டேயிருக்கவேண்டுமென்றால் ஒன்றின்மேல் ஒன்றாகக் கிரமப்படி கற்களைப் போட்டுக்

கொண்டிருக்க வேண்டும். விசும்பிலும் இவ்வாறு அலைகளைத் தொடர்ந்து உற்பத்தி செய்யலாம். இதற்கு மின்சாரம் பயன்படுகிறது. மின்சாரத்தைக்கொண்டு விசும்புக்கு அதிர்ச்சியை உண்டாக்கும்போது ஏற்படும் இவ்வலைகளை மின் அலைகள் என்று கூறாமல் மின் காந்த அலைகள் என்று கூறுவதன் காரணம் என்ன என்று கேட்கலாம். மின்சாரமும், காந்தமும் சுந்தன், உபசுந்தன் என்ற இரண்டு அசுரர்களைப்போல இணைபிரியாத நண்பர்களாக இருப்பதனால் இவ்வலைகளுக்கு மின் காந்த அலைகள் என்று பெயர் கொடுத்தார்கள். அலை இயக்கத்துக்குச் சில பண்புகள் உண்டு. அலைகளைக் குறுகியவை என்றும் நீளமானவை என்றும் கூறுவது வழக்கம். அலை நீளத்தில் ஏற்படும் இவ்வேற்றுமை அலை உற்பத்தியாகுமிடத்தில் விசும்புக்கு ஏற்படும் அதிர்ச்சியின் கிரமத்தைப் பொறுத்திருக்கும். இவ்வதிர்ச்சிக் கிரமத்தை அலையின் சுருதி (wave frequency) என்று கூறுவார்கள். சுருதி அதிகமாக இருந்தால் அலையின் நீளம் குறுகி இருக்கும். சுருதி குறைவாக இருந்தால் அலை நீண்டிருக்கும். இம்மின் காந்த அலைகளெல்லாம் விசும்பில் செக்கண்டுக்கு நூற்று எண்பத்தாறாயிரம் மைல் வீதம் பரவுவதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். பூமத்திய ரேகைக்குச் சமீபத்தில் பூமியின் சுற்றளவு இருபத்தையாயிரம் மைல்தான். எனவே இவ்வலைகள் பூமியின் ஒரு பக்கத்திலிருந்து எதிர்ப்பக்கத்திற்கு ஒரு நொடிப் பொழுதுக்குள்ளேயே சென்றுவிடுகின்றன. அயல் நாடுகளுக்குச் சமாசாரம், சங்கீதம் முதலியவற்றை இவ்வலைகளின் மூலம் அனுப்புகிறார்கள். இதற்கென்று பூமியின் பல இடங்களில் ரேடியோ நிலயங்கள் (Radio Broadcasting station) ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவற்றிலெல்லாம் மின் காந்த அலைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஒவ்வொரு நிலயத்திலும் குறிப்பிட்ட ஓர் அலை நீளத்தில்தான் அலைகளை உற்பத்தி செய்வார்கள். ஏனெனில் அப்பொழுதுதான் எல்லா நிலயங்களும் ஒற்றுமையுடன் வேலைசெய்வது சாத்தியமாகும். இந்நிலயங்களில் பேச்சுக்கு அல்லது பாட்டுக்குண்டான ஒலியை மின்சாரமாக மாற்றி இம்மின் காந்த அலைகளுடன் இணைத்துவிடுவார்கள். இவ்வாறு இணைக்கப்பட்ட அலைகள் ரேடியோ நிலயத்திலுள்ள ஏரியல் (Aerial) என்னும் கருவியிலிருந்து கிளம்பி எல்லாத் திசைகளிலும் பரவும் கேட்கவேண்டிய இடத்தில் இவ்வலைகளைக் கிரகித்துக்கொள்வதற்கு ஒரு கருவி வேண்டும். அதுதான் 'ரேடியோ ஸெட்' என்னும் சாதனம். இதில் இவ்வலைகளை ஏற்று மின்சாரத்தை மறுபடியும் ஒலியாக மாற்றிப் பேச்சையோ பாட்டையோ கேட்கின்றார்கள். இவ்வலைகளைக்கொண்டு ஏன் ஆகாய விமானங்களின் போக்கை நிர்ணயிக்கக்கூடாது என்று சென்ற 1935-ஆம் ஆண்டில்தான் ஆராயத் தொடங்கினார்கள். இச் சோதனைகளில் வெற்றி அடைந்தவர்கள் ஆங்கிலேய விஞ்ஞானிகள்தான் என்று முன்பே கூறினோம். ரேடியோ அலைகளைக்கொண்டு இச்சாதனம் வேலைசெய்வதால் இதற்கு 'ராடர்' என்று பெயர் கொடுக்கப்பட்டது.

ரேடியோ நிலயத்தைப்போல "ராடர் நிலயமும்" (Radar Broadcasting Station) அமைக்கப்படும். இதிலுள்ள ஏரியலிலிருந்து சக்திவாய்ந்த மின் காந்த அலைகள் கிளம்பி, பரவிச்செல்லும். இந்நிலயத்துக்குப் பக்கத்திலேயே இம் மின்காந்த அலைகளைக் கிரகிப்பதற்கு என்று மற்றொரு நிலயம் (Radar receiving Station) இருக்கும். ராடர் நிலயத்தில் உற்பத்தியாகும் அலைகள் ரேடியோ அலைகளைப் போலத் தொடர்ந்து உண்டாவதில்லை. விட்டு விட்டே உற்பத்தி செய்வார்கள். சாதாரணமாக ஓர் அலைத் தொடர் சென்று செகண்டில் இருபத்தைந்தில் ஒரு பாகம் ஆனபின்தான் மற்றோர் அலைத் தொடர் உற்பத்தியாகும். கண்டுபிடிக்க வேண்டிய விமானத்தின் தூரத்துக்குத் தகுந்தாற்போல் இந்நேரத்தை மாற்றிக் கொள்வார்கள். இவ்வலைத் தொடர்கள் ஒன்றன்பின் ஒன்றாகப் பரவிச் செல்லும்போது வெகுதூரத்துக்கு அப்பால் பறந்து வரும் விமானத்தின்மீது ஒரு பகுதி விழுந்து பிரதி பலனம் ஆகி மீண்டும் அதே திசையில் நிலயத்தை நோக்கிவரும். மின்காந்த அலைகளின் கதி அபரிபிதமாக இருப்பதால் முதலில் தோன்றிய அலைகளுக்கும் பிரதிபலனம் ஆகிவரும் அலைகளுக்கும் இடையே ஏற்படும் நேரம் வெகு சிறியதாக இருக்கும். செகண்டின் பத்து லக்ஷத்தில் ஒரு பங்கை ஆதாரமாகக்

கொண்டு இந்நேரத்தை அளப்பார்கள். மிகக் குறுகிய இக்காலத்தை அளக்கும் கருவிக்குக் குறை கிரண துளங்கிசைக் கருவி (Cathode ray oscillograph)



என்று பெயர். ரேடியோ மூலம் ஆங்காங்கே நடக்கும் காட்சிகளையும் உடனுக்குடனேயே பார்ப்பதற்கு உபயோகிக்கும் சாதனத்தின் (Television set) முக்கிய பாகம் இக்கருவிதான். இதன் அமைப்பைப் படத்தில் பார்க்கவும். இக்கண்ணாடிப் பாத்திரத்திலுள்ள காற்றெல்லாம் நீக்கப்பட்டு வெற்றிடமாகச்செய்யப்பட்டிருக்கும். இதன் ஒரு நுனியில் பொருத்தி வைக்கப்பட்டிருக்கும் ஒருவகை உலோக கம்பியின் மூலம் மின்னருவியைச் செலுத்தினால் அதிலிருந்து மின்னுருக்கள் (Electrons) என்னும் சிறு துகள்கள் கொண்ட ஒரு கிரணக்கற்றை மற்றொரு நுனியிலுள்ள அடிப்பாகத்தைத் தாக்கும். இவ்வடிப்பாகத்தின்மீது ஒருவித இரசாயனப்பொருள் பூசப்பட்டிருக்கும். கிரணக் கற்றை விழும் இடத்தில் ஓர் ஒளிப்புள்ளி தோன்றும். இக்கருவியில் மின் காந்த அலைகளை ஏற்று இவ்வொளிப் புள்ளியைத் தக்கவாறு அசையச் செய்யலாம். இவ்வசைவைப் போட்டோ தட்டில் பதிவும் செய்துவிடலாம். இப்புள்ளியின் இயக்கத்தைக்கொண்டு மிகக்குறுகிய காலத்தையும் அளந்துவிடலாம். இதைக்கொண்டு 'ராடர்' நிலயத்திலிருந்து அலைகள் கிளம்பி பிரதிபலனம் அடைந்து மீண்டுவரும்வரை ஏற்படும் காலத்தை அளந்துவிடுகிறார்கள். இந்நேரத்தையும் மின் காந்த அலைகளின் கதியையும்கொண்டு விமானம் இருக்கும் தூரம் கண்டுபிடிக்கப்படுகிறது. ரேடியோ நிலயத்திற்கும் ராடர் நிலயத்திற்கும் மற்றொரு வித்தியாசமுண்டு. துறைமுகங்களில் உள்ள தீபஸ்தம்பத்திலிருந்து கிரணக்கற்றை செல்லுவதுபோல மின் காந்த அலைகளையும் கற்றையாக அனுப்புகிறார்கள். இத்துடன் கற்றை செல்லும் திசையையும் மாற்றுவதற்குச் சுழலும் ஏரியலை உபயோகிக்கின்றார்கள். கூட்டமாக விமானங்கள் பறந்து செல்லும்போது அவை ஒவ்வொன்றிலும் பிரதிபலனம் உண்டாகி அதற்குத் தகுந்தாற்போல ஏற்கும் கருவியில் பதிவு உண்டாகும். இப்பதிவுகளைக்கொண்டு சுமார் நூற்றுக்குப் பத்துவரை தப்பில்லாமல் விமானங்களின் எண்ணிக்கையைக் கண்டுபிடித்துவிடுகிறார்கள். விமானம் இருக்கும் தூரம் மட்டும் தெரிந்தால் போதாது. அது பறந்து செல்லும் திசை, உயரம், கதி முதலிய விவரங்களும் தெரியவேண்டும். இவ்விவரங்களையும் அறிந்து வருகிறார்கள். முதலில் தாழ்ந்து பறக்கும் விமானங்களைக் கண்டுபிடிக்க முடியாமல் தவித்தார்கள். இதன் காரணத்தை அறிந்து அதை நீக்குவதற்கு மிகக்குறுகிய அலைகளை உபயோகிக்கவேண்டுமென்று உணர்ந்தார்கள். மிகக்குறுகிய அலைகளை உற்பத்தி செய்வதில் ஜர்மனியர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் போட்டி மும்முரமாக நடந்தது. இதில் இங்கிலாந்துதான் வெற்றி அடைந்தது. ஆங்கிலேய விஞ்ஞானிகள் ஒன்றரை சென்டிமீடர் நீளமுள்ள அலைகளை உற்பத்திசெய்யும் கருவியைக் கண்டுபிடித்ததன் பயனாகவே அவர்கள் ஜர்மானியரைத் தோற்கடிக்க முடிந்தது என்றுகூடச் சொல்லிவிடலாம். 'ராடர்' அலைகளை ஏற்குமிடத்தில் கிழக்கு மேற்கில் ஓர் ஏரியலையும், தெற்கு வடக்

கில் மற்றோர் ஏரியலையும் அமைத்து, அவற்றின்மூலம் ஏற்படும் பதிவுகளின் தராதரத்தைக்கொண்டு விமானம் இருக்கும் திசையைக் கண்டுபிடித்துவிடுகிறார்கள். வெவ்வேறு மட்டங்களில் ஏரியல்களை அமைத்து அவற்றின்மூலம் ஏற்படும் பதிவுகளைக்கொண்டு விமானம் இருக்கும் உயரத்தையும் கண்டுபிடித்துவிடுகிறார்கள்.

கடைசியாக இச்சாதனத்தின் மற்ற உபயோகங்களைப்பற்றிச் சிறிது கூறுவோம். பறக்கும் விமானங்களின் எண்ணிக்கை, உயரம், திசை முதலிய விவரங்களைத் தரையிலிருந்து அறிவதுபோல, தரையிலுள்ள இடங்களின் விவரங்களை விமானத்திலிருந்து கண்டுபிடித்துவிடலாம். ஆங்கிலேயர்கள் பெர்லினை விமானங்களிலிருந்து தாக்குவதற்கு இச் சாதனத்தைத்தான் உபயோகித்தார்கள். இதன் துணைகொண்டு அவர்கள் கருவிகளுக்குப் புலப்படாமல் பறந்துசென்று அவர்கள் நாட்டின் பல பாகங்களை நிர்மூலமாக்கிவிட்டார்கள். மற்றும் திசை தெரியாமல் செல்லும் விமானங்களுக்கு இச்சாதனம் உதவி அளிக்கின்றது. இதைக்கொண்டு அவை இருக்கும் இடங்களை விமானத்திலுள்ளவர்கள் அறியலாம், முடிவாகக் கூறுகையில், இதனால் விமானப் பிரயாணம், ரயில் பிரயாணம் கடல் பிரயாணம் இவற்றைப்போலப் பயமில்லாமல் போய்விட்டது என்று சொல்லலாம். எனவே, சண்டை நிமித்தமாக இச்சாதனம் கண்டுபிடிக்கப்பட்ட போதிலும் சாதாரண காலங்களில் இதன் உபயோகம் ஒப்பற்றது என்று அறியலாம். ஆகாயம், தரை, கடல் இவற்றில் செல்லும் எப்பொருளின் போக்கையும் இச் சாதனத்தைக் கொண்டு அறிந்துவிடலாம் என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

இண்டோ கம்மர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்: மாயவரம் ★ ஸெண்ட்ரல் ஆபீஸ்: மதராஸ்

வாக்களிக்கப்பட்ட மூலதனம் ரூ. 25,00,000
செலுத்தப்பட்ட மூலதனம் ... ரூ. 18,75,000
ரிஸர்வ் பண்டு ... ரூ. 5,50,000
மொத்த ஆஸ்தி ... ரூ. 4 கோடிக்குமேல்

ஸிட்டி ஆபீஸ்கள்:

சைனபஜார், மாம்பலம், மயிலாப்பூர், பேரியமேட், திருவல்லிக்கேணி

அமதலவால்ஸா	காரைக்குடி	சானூர்	திருச்சிராப்பள்ளி
அனகாபள்ளி	கும்பகோணம்	சீயாழி	திருவாரூர்
சிதம்பரம்	மதுரை	தஞ்சாவூர்	வேலூர்
சித்தூர் (கொச்சி)	மருடேரு	தாடபள்ளிக்கூடம்	விழுப்புரம்
கடலூர் N. T.	பாலக்காடு	திலாறு R. S.	விருதுநகர்
காஞ்சீவரம்	பார்வதிபுரம்	திருநெல்வேலி டவுன்	விஜயநகரம்
ஈரோடு	புதுக்கோட்டை	திருநெல்வேலி ஜங்ஷன்	நாகப்பட்டணம்
அம்பாசமுத்ரம்	தென்காசி	வேதாரண்யம்	ஆம்பூர்

பிக்ஸட் டிபாஸிட்கள்:- ஒரு வருஷம் நூற்றுக்கு வட்டி ... ... $2\frac{3}{4}$% விதம்
இரண்டு ,, ,, ... 3% ,,
சேவிங்ஸ் பாங்கு கணக்கு வாரம் ரூ. 250/வாங்கக்கூடியது ரூ. 5000/வரை வட்டிவிதம் $2\frac{1}{2}$% ,,
கரண்ட் கணக்கு .. .. $\frac{1}{4}$% ,,
தங்கம், வெள்ளிபார், கவர்மெண்ட் பாண்டு, கடன் பத்திரங்கள், ஷேர்கள், வியாபாரச் சரக்குகள் முதலியவைகளின் பேரில் கடன்கள் கொடுக்கப்படும்.

எல்லாவிதமான பாங்கு நடவடிக்கைகளும் நடத்தப்படும்

எஸ். என். என். சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்.

ஐந்தே ஐந்து நிமிஷம் தான்!

ரா. விழிநாதன்

ஆம்! ஐந்தே நிமிஷம்தான். அவன் இரும்புக் கிராதிக்குள், கைவிலங்கு மாட்டப்பட்டு நிற்கிறான். நான், அந்தோ! போலீஸ் காவலில் வெளியில் நடுநடுங்கிய வண்ணம் நிற்கிறேன். ஐந்தே நிமிஷத்திய சந்திப்புத்தான்— பார்த்தபோதே தீர்ந்துவிட்டது.

* * *

நடந்த சம்பவங்களை ஏன் யோசிக்க வேண்டும்! உள்ளத்தில் ஊசிபோலல்லவா குத்துகின்றன! நடந்த கதையை யாரிடம் சொல்வது! கேட்பவன்தான் யாராவது உண்டா? அப்படிக் கேட்டாலும் ஏதோ மனமின்றி, அலட்சியமாகத்தானே கேட்பான்! கேட்டுவிட்டு, 'அம்மா, உன் விதியை என்னவென்று சொல்வது? கடவுளை நம்பு' என்று ஒரு சிறு உபதேசம் வேண்டுமானால் செய்வான்! அந்தோ— துர்ப்பாக்கியத்தினால் பீடிக்கப்பட்ட அப்பாவிகளுக்கு அக்கடவுள் உதவி செய்ததே இல்லை. கஷ்டத்தில் உழலுபவனின் பிரார்த்தனைக்கு அக்கடவுள் செவி சாய்க்கவே இல்லை! பசித்தவர்களின் பசியைப் போக்கவில்லை, துயரந் தோய்ந்தவர்களின் கண்ணீரைத் துடைக்க அவன் வந்ததே இல்லை. 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' என்ற பழமொழி மட்டும் வெகுகாலமாக வழக்கில் இருந்து வருகிறது. அவன் சுவர்க்கப் பூங்காவில் விளையாடுபவன்! அவன் தன் பெண்சாதி (மனைவி) வார்த்தையைக் கேட்பவன். லக்ஷ்மி எவன்மீது கருணாகடாக்ஷத்தை வீசுகிறாளோ, அவனுக்குத்தான் அவனது அனுக்கிரஹங்களெல்லாம். ஏழையான என்னை ஏன் கவனிக்கப் போகிறான்? ஏழைகளுக்குக் கடவுள் அவர்களது துர்ப்பாக்கியந்தான். என்னைத் துர்ப்பாக்கியந்தான் வளர்த்தது. பெரிதாக்கியது. நான் எப்படி அக்கடவுளைக் கூப்பிடுவது? கூப்பிட்டுத்தான் என்ன பிரயோஜனம்? நான் கூப்பிடுவது எல்லாம் எனது துர்ப்பாக்கியத்தைத்தான். அது உடனே வந்து இன்னும் பெரிய சுமை ஏதாவதொன்றை என் தலையில் வைத்துவிட்டுக் 'கல கல' வெனச் சிரிக்கும், அகமகிழ்ந்து ஆடும், பாடும்! அதற்கென்ன ஆனந்தம் என்கிறீர்கள்!

ஒரு தடவை அத்துர்ப்பாக்கியத்தை அழைத்தேன். ஒரு ஏழை 'கிராஜுயேட்'டுடன் என்னை இணைத்துச் சென்றது. அடுத்த தடவை அழைத்தேன். இரண்டு குழந்தைகளைக் கொடுத்துச் சென்றது. மூன்றாந்தடவை அழைத்தேன். என்னுடைய வாழ்க்கைத் துணையை, உதவியாளரைக் கொலைக்குற்றத்தில் சிக்கவைத்து, தூக்குத் தண்டனையளித்துவிட்டு மறைந்துவிட்டது. எல்லாம் முடிந்தபின் அதைக் கூப்பிட்டுத்தான் என்ன பயன்? நான் ஏன் அதைக் கூப்பிடவேண்டும்?

ஏழைமைதான் எல்லாக் குற்றங்களுக்கும் அஸ்திவாரம் என்றால் அவனுக்குத் தூக்குத் தண்டனைதான் கொடு, சுட்டு விடு, அல்லது நாய்களுக்குத்தான் இரையாக்கு, எனக்கு ஆக்ஷேபனையில்லை. ஆனால், நான் கூறுவேன்— 'அவன் கொலையாளியல்ல, பரம ஏழை; குற்றவாளி அல்ல, பசியால் வாடுபவன்; கொலைஞன் அல்ல, துயரத்தில் சிக்குண்டவன்; அவனைப் பாவி என்று கூறாதே, பசியால் வாடுபவன் என்று சொல்லு.'

அவன் என்ன செய்துவிட்டான்? என்ன பாவம் செய்தான் அவன்? ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை. இப்பாவி வயிற்றுக்காக, ஏழைக் குடும்பத்துக்காக, பசியால் துடிக்கும் இப்பச்சைக் குழந்தைகளுக்காக, அவன் ஏதோ முயற்சிசெய்தான். சட்டமும் துர்ப்பாக்கியமும் அவனது அச்செய்கையைக்'கொலைக்குற்றம்'என்று நிரூபித்துவிட்டன; தூக்குத் தண்டனையும் அளித்துவிட்டன. 'பரவாயில்லை'— நான் துணிச்சலுடன்தான் கூறுகிறேன். பரவாயில்லை. அவன் இறக்கட்டும், தூக்கில்தான் தொங்கட்டும், ஆனால் அவன், குற்றவாளி அல்ல. இம்மட்டில் எனக்குத் திருப்தியே, நூறு தடவை— இல்லை— ஆயிரம் தடவை வேண்டுமானாலும் கூறுகிறேன்— அவன் பாவி அல்ல. ஏழை, துர்ப்பாக்கியசாலி, ஆனால் 'மனுஷ்யன்' தான் என்று.

பசி அவனைச் சேரக்கூடாத இடத்தில் கொண்டு சேர்த்துவிட்டது. திருடினான், கொள்ளையடித்தான். எல்லாம் செய்தான். ஆனால் இந்தப் பாவி வயிற்றுக்காகத்தான். நீதிப்படி பார்த்தால், அவன் குற்றவாளிதான், பாவிதான், கொலைஞன்தான், திருடன்தான், கொள்ளைக்காரன்தான். ஆனால் சிறிது யோசித்துப்பாருங்கள், 'இந்த நீதியெல்லாம் ஏழைகளுக்கு மட்டும்தானா உண்டு? ராமநாதன் செட்டியார், கிராமத்தையே வட்டிக்குப் பணம்கொடுத்து விழுங்

கப்பார்க்கிறாரே! அவரது 'வட்டி'யில் சிக்குண்டு எத்தனையோ குடும்பங்கள் நசித்து விடவில்லையா? இதெல்லாம் பாவமில்லையா? என் ஏழைக் கணவன், வயிற்றுக்காகச் செய்த ஒரு சிறு குற்றம்தானா பெரிய பாவம்! நல்லது, அவனை இவ்வுலகிலிருந்தே அகற்றிவிடுங்கள். அப்படி அகற்றிவிட்டால், இவ்வுலகிலிருந்து பாவமே மறைந்து விடுமா? 'மறையாது'. நான் சொல்லுகிறேன். 'ஒருபோதும் மறையாது. மறையவே மறையாது'.

— 2 —

நேற்று எனக்குச்சர்க்காரிலிருந்து ஒரு கடிதம் கிடைத்தது. என் கணவன் என்னைச் சந்திக்க—கடைசியாக ஒரு தடவை சந்திக்க—விரும்புகிறானாம். நாளை நின்று தூக்குத் தண்டனை நிறைவேற்றப் பட்டுவிடும்! அவனது கடைசி ஆசை, தன் மனைவியையும் குழந்தைகளையும் பார்க்கவேண்டுமென்பது. நான் என் கணவனைக் கடைசியாகக் கண்டு வரப்புறப்பட்டேன். என் ஆருயிரின் உயிருள்ள சடலத்தைக் கண்டுவரப் புறப்பட்டேன். நான் யாரைப் பார்க்கப் புறப்பட்டேனோ, அவன் தலையில் மரணம் சுழன்று கொண்டிருக்கிறது, கழுத்தை நெரிக்கக் கயிறு தயாராயிருக்கிறது என்பதை நன்கறிவேன். இருந்தாலும் இன்று அவன் உயிருடன் இருக்கிறான். என்னைப்போலவும்-உங்களைப்போலவுமே. அதுதான் ஆச்சரியம்!

நீங்களே சிந்தித்துப் பாருங்கள்-'உங்களது உயிருக்குயிரான ஒருவன் காலதேவனின் மழுக்கொப்பறைக்கு இலக்காகிவிட்டான். அவனை நீங்கள் பார்க்கப் புறப்படுகிறீர்கள். நீங்கள் காணப்போகும் அதே மனிதனின் சடலம் உங்களுக்கு நாளைக் காலையில் கிடைத்துவிடும், கழுத்தில் கயிறால் சுருக்கிடப்பட்டு,' என்று வைத்துக் கொள்ளுங்கள். உங்களது உள்ளம் என்ன பாடு படும்? நான் சட்டத்தைக் குறைகூறவில்லை. நியாயத்தை எதிர்க்கவில்லை. ஆனால் மக்கள் தன்மையிடம், "ஒரு தடவை உன் வாயைத் திறந்து கூறேன்! நியாயம். ஊமை, செவிடு, குருடு. அதன் முன்னிலையில் எவனும் மறுபேச்சுப் பேசமுடியாது. உள்ளத்துள் ஈவு என்னும் திரவபதார்த்தமுள்ள நீயாவது வாயைத்திறந்து பேசக்கூடாதா?" என்றுதான் கேட்கிறேன். ஆனால் அதுவும் வாயைத் திறந்தால்தானே! நான் என்னை மறந்து புறப்பட்டேன். 'அவரது கால்களைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக்கொள்ளலாம், அவரது மார்பில் முகத்தை மறைத்துக்கொண்டு அழலாம். என்னை மறந்துவிடமாட்டாயே! என்னை எதிர் நோக்கிக் காத்திருப்பாயல்லவா? இத்துர்ப்பாக்கியவதிதான் உனது காளைப் பருவத்தைக் கரியாக்கினது, உனது யௌவனத்தை நஞ்சாக்கியது. மன்னித்து மறந்துவிடு, இது உன் குழந்தை-ஒரு முத்தம் அளித்து, தந்தையின் அன்பென்னும் குளிர்ந்த நீரால் அபிஷேகம் செய்துவை. இது உன் பொருள் என்று கூறுவேன்' என்ற இந்த எண்ணத்தில் சிறைக்கூடத்துக்குப் புறப்பட்டேன். இடுப்பில் குழந்தை கோபாலன் இருந்தான். 'அம்மா எங்கே போறே?' என்றான். நான் என்ன பதில் சொல்ல? எப்படி அந்த அறியாக் குழந்தைக்கு ஆறுதல் அளிப்பது! 'அப்பாவைப் பார்க்கவேண்டாமா? உன்னைப் பார்க்க அவருக்கு ஆசையாயிருக்கிறதாம்' என்றேன்.

கோபாலன் மகிழ்ச்சியுடன். "அம்மா! ஏன் அப்பா ரொம்ப நாளா வீட்டுக்கே வரவில்லை? பொம்மை வாங்கித்தரச் சொல்லுவேன், காசுகேட்பேன். அக்காவுக்கு நான் கொடுக்கவேமாட்டேம்மா. எங்க அப்பா தானே அம்மா! அக்காவுக்கு ஒண்ணும் அப்பா இல்லையோல்லியோ?" என்றான். என்னுள்ளம் தூள் தூளாக உடைந்துவிட்டது. பாவம்! குழந்தை! அவனது தந்தை எமலோகத்தை எட்டிப்பார்த்துக் கொண்டிருக்கிறான். வாழ்நாளை விரல் விட்டெண்ணிக்கொண்டிருக்கிறான். கூட்டில் அடைபட்டிருக்கிறான்! இதெல்லாம் அவனுக்கெப்படித் தெரியும்!

என் புடவைத் தலைப்பை இழுத்து, "அப்பா எப்போ வருவா அம்மா! இப்பவே அழைச்சிண்டு வந்தூடலாமோ? அம்மா, அப்பா எனக்கு அடுத்தாத்து பாலுவின் சைக்கிள் மாதிரி ஒரு சைக்கிள் வாங்கித் தருவா. நீ தடுக்கப்படாது அம்மா. அம்மா, பாலு சைக்கிளைத் தொடவே விடமாட்டேன்கிறானம்மா. ஒடிஞ்சி போயிடுமாம். ஏனம்மா. தொட்டால் சைக்கிள் ஒடிஞ்சி போயிடுமாம்மா? அவன் அசடு அம்மா. அக்காகூடத் தொடப்படாதுங்கிறான். அக்கா நேத்திக்கு என் சிலேட்டை உடைச்சுட்டா, நான் அப்பாகிட்டச் சொல்லப் போறேனம்மா!" என்று கூறினான் கோபாலன்.

— 3 —

ஜைலர்— சிறையதிகாரி என்னை உள்ளே அழைத்துப் போகுமாறு உத்தரவு கொடுத்துவிட்டான். ஒரு சிப்பாய் அழைத்துச் சென்றான். இரு புறங்களிலும் அறைகள்—பெரிய பெரிய கிராதிக் கதவுகள்! அதனுள்

அடைபட்டுக்கிடக்கிறது— படைத்த பிரமனின் உயர் சிருஷ்டி ஒன்று. அதுதான் மனுஷ்ய சமூகத்தின் ஒரு சிறு பகுதி! ஒன்றிரண்டல்ல— நானூறு— ஐநூறு. உலகில் நான்மட்டும் துர்ப்பாக்கியவதியல்ல. என்னைப்போன்று ஆயிரக்கணக்கான— லக்ஷக்கணக்கானவர்களிருக்கின்றனர்.

ஒரு இருட்டறைக்கு முன்னே நிறுத்தப்பட்டேன். கோபாலன் பயத்தினால் என் கால்களை இறுகக் கட்டிக்கொண்டான். அவன் நடுங்கிய நடுக்கத்தை என்னவென்பது?

சிப்பாய் "பிரகாஷ்!" என்றழைத்தான்.

நான் நாற்புறமும் பார்த்தேன். அதுதான் தூக்குமேடை. வாழ்வின் கடைசி நிமிஷத்தை எதிர்நோக்கும் கைதிகள் இங்கேதான் வைக்கப்படுகின்றனர். இக்கட்டிடத்திற்குப் பேசும் சக்திமட்டும் இருந்தால்— உலக இலக்கியங்களை இதன் காலில் கட்டித்தான் அடிக்கவேண்டும்— அவ்வளவு உயர்ந்த இலக்கியங்களை நமக்கு அளித்திருக்கும். இந்த அறையிலுள்ள ஒவ்வொரு கல்லும் ஒவ்வொரு துயரக் கதை கூறும். இத்தரையில் எத்தனை பேர்களுடைய கண்ணீர் வற்றியிருக்குமோ? அதைச் சேகரித்துக்காட்டும் சக்திபெற்ற ஒரு குளமிருக்குமாகில், தனது நாகரிகத்தில் கர்வப்பட்டுக்கொண்டிருக்கும் சமூகம், நாக்கைப் பிடுங்கிக்கொண்டு இறக்கவேண்டி வரும். இந்த அறை மரண தேவதைக்குப் பிடித்தமான அறை. 'ஏன்?' அறையினுள்ளிருந்து சப்தம் வந்தது. ஒரு மெலிந்த, களைத்த, நம்பிக்கையிழந்த, குற்றுயிராகக் காணப்பட்ட வாலிபன் வாசலில் வந்து நின்றான். இவன்தான் அந்த இருட்டறையிலிருந்த "பிரகாஷ்!". எனது இருண்ட வருங்காலத்தின் கடைசி ஒளி, எனது கோபாலனின் பிரகாசம், அவனது அக்காவின் தந்தை!

அஞ்சு நிமிஷந்தான் உங்களுக்கு 'டயம்'. பேசவேண்டியதைப் பேசிக்கொள்ளுங்கள். சீக்கிரம், நேரமாகக்கூடாது.

நான் தூர விலகி நிற்கவேண்டுமென்று உத்தரவு பிறந்தது. நான் கைதிக்கு ஏதும் கொடுத்துவிடக் கூடாது என்ற பயம். 'முகத்தில் மயிர் வளர்ந்திருந்தது. தலைமயிர் படர்ந்திருந்தது. கண்கள் குழிவிழுந்து விட்டன. தேகம் வற்றிவிட்டது.' இப்படிப்பட்ட உருவத்தை நான் கண்டேன். "கோபாலா. அப்பாவுக்கு நமஸ்காரம் பண்ணு' என்றேன். கோபாலன்— சிறு குழந்தை கோபாலன்— வணங்கினான். நானும் வணங்கினேன். அவன் மங்கிய ஒளியில் நின்றான்— சிறிது தொலைவில்!

தழுதழுத்த குரலில் "சுகமாயிரு" இதுதான் கடைசி சந்திப்பு, கடைசி ஆசீர்வாதம், கடைசி பேச்சு, நாளைக் காலையில் என் பிணத்தை எடுத்துக்கொண்டுபோ. நான் அதிகாரியிடம் சொல்லி இருக்கிறேன்' என்று கூறினான் அவன். நான் தலையில் கைவைத்த வண்ணம் உட்கார்ந்துவிட்டேன்.

கோபாலன், 'அப்பா, வாயேன்' என்றான். என் இதயத்தில் யாரோ திடீரென்று ஒரு குத்துவிட்டதுபோலிருந்தது. என்ன கபடமற்ற பிடிவாதமான அழைப்பு! அவன், 'அப்பா குழந்தாய், நான் வேறு உலகத்துக்குப் போகிறேன், நீ நன்றாய்ப் படி. அம்மாவுக்குச் சிரமம் கொடுக்காதே' என்றான். அவனது கண்களில் நீர் சுரப்பதை நான் கண்டேன். கம்பியைப் பிடித்துக்கொண்டு, கல்லாய்ச் சமைந்து அவன் நின்றுகொண்டிருந்தான். கோபாலன் மறுபடியும், 'அப்பா, அக்கா அழறாள். என் சிலேட்டை உடைச்சுட்டா, அதனாலே தான் அப்பா—எனக்கு இன்னொரு சிலேட்டு வாங்கித்தறயா?' என்றான்.

அவன் ஒரு பெருமூச்சுவிட்டு, 'காதிலே விழுந்ததா? கோபாலன் 'சிலேட்டு' உடைஞ்சு போயிடுத்தாம். அவனுக்கு ஒரு சிலேட்டு வாங்கிக்கொடு' என்றான்.

நான் என்ன சொல்ல? என் காதுகள் செவிடு ஆய்விட்டன. கண்கள் இருண்டன. அவன் மறுபடியும், 'சுகமாயிரு. குழந்தைகளைக் கவனித்துக்கொள். கோபாலனை எப்படியாவது படிக்கவை. நான் போகிறேன். இருந்தாலும் என் பொருளாகக் கோபாலனை உனக்குத் தந்துவிட்டுப்போகிறேன். கவலைப்படாதே, நடக்கிறது நடந்துதானே தீரும்?' என்றான்.

நான் 'இன்னும், இன்னும்' என்றிழுத்தேன். தொண்டை பேசமறுத்துவிட்டது. இதயத்து ஓடும் ரத்தம் கண்களின் வழியே நீராகப் பெருகி ஓடுவதுபோலிருந்தது.

சிப்பாய், 'அவ்வளவுதான். போகலாம். அஞ்சு நிமிஷம் ஆய்விட்டது' என்றான்.

'சரி, நான் வருகிறேன். எனக்காகக் கோபாலனுக்கு, என்னெதிரில் ஒரு முத்தம் கொடு. என் கண்ணால் பார்க்கிறேன். கடவுள் உன்னைக் காக்கட்டும். அடுத்த ஜன்மத்தில் மீண்டும் சந்திப்போம்' என்றான் அவன்.

சிப்பாய், கடுகடுப்பாக, 'சீக்கிரம், நேரமாய்விட்டது. போ. வெளியே' என்று உறுமினான்.

(இக்கதை 'ஸ்ரீ மோஹன்லால் ஜீ மஹ்தோ' அவர்கள் ஹிந்தியில் எழுதியதின் மொழிபெயர்ப்பு)

ரெக்ஸோனா

சரும அழகை உண்டாக்குகிறது

...சரும சுகத்தை பாதுகாப்பதன் மூலம்

ஆம், ஏனென்றால் ரெக்ஸோனா சுறுசுறுப்பாய் உற்சாகமூட்டிச் சரும சுகத்தைப் பாதுகாக்கிறது — சரும சுகத்திற்குச் சரும சௌந்தரியமே உண்மையான அடிப்படை — சரும அழகைக் கொடுக்கும் பாத்தியதை தனக்கேயுண்டென்று ரெக்ஸோனா உண்மையாகச் சொல்லக்கூடும்.

இதை எப்படி ரெக்ஸோனா செய்கிறது? சரும வியாதியைப் போக்கும் கிருமி நாசினியாகிய *கேடில் என்னும் மருந்து அதிற் சேர்ந்திருப்பதால் அது அவ்வாறு செய்கிறது. சரும உபத்திரவங்களும், சரும மாசுமறுக்களும் அடிக்கடி அதிகமாய் உண்டாகும் இடங்களுக்கும் — சருமத்தின் ஒவ்வொரு அடிப்பாகத்திற்கும் — சுகமளித்துச் சுத்தம்செய்கிற கேடில் என்னும் மருந்தை ரெக்ஸோனாவின் விரைவில் உண்டாகும் நுரை கொண்டுபோய்ச் சேர்க்கும் சக்திவாய்ந்தது.

ரெக்ஸோனா, குடும்ப சோப்

அழகான, பசுமைவாய்ந்த, விரைவில் நுரையைத் தரும் இந்த சிறந்த ஒப்பற்ற சோப்பின் குணங்களைக் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் புகழ்ந்து கூறுவார்கள். . . சரும அழகைத்தர அது அதிக சிறந்த சக்திவாய்ந்திருப்பதால் ஸ்திரீகள். . . ஆரோக்யமான சருமத்தின் அவசியத்தை எல்லா ஜனங்களும் அறிந்திருப்பதால் மனிதர்கள் . . . குழந்தைகளுக்கு இதைக் காட்டிலும் சிறந்த பாதுகாப்புடைய சோப் வேறு இல்லை மருந்திடப்பட்ட ரெக்ஸோனாவின் நுரை உடலெரிச்சலைச் சாந்தப்படுத்துகிறது. ரணங்களை ஆற்றிக் காப்பாற்றுகிறது — குழந்தையின் சருமத்தைக் குளிர்ச்சியாகவும், சுகமுடையதாகவும் செய்கிறது சரும சுகம் நிச்சயமாக ஏற்படக் குடும்பம் முழுவதும் ரெக்ஸோனாவை ஒழுங்காய் உபயோகிக்க வேண்டும்.

★ரெக்ஸோனாவிலுள்ள கேடில் கிருமி நாசினியாகிய ஒரு ஒப்பற்ற கலப்பு மருந்து. சரும சுகத்திற்கு அதிக சக்திவாய்ந்தது; குணமளித்துப் போஷிக்கும் தைலம் சேர்ந்தது. சுகத்தையளித்துக் காப்பாற்றும் தன்மையுள்ள கேடில் யாவராலும் மதிக்கப்பட்டு, விஞ்ஞானிகளால் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

ரெக்ஸோனா ஆயின்ட்மென்டை உபயோகியுங்கள். வெட்டுக் காயங்கள், புண்கள், கட்டிகள், கரப்பான் ரணங்கள், முகப்பருக்கள், அரிப்புகள், சனைப்புகள், கடிகள், மச்ச மறுக்கள் முதலிய எல்லா சரும வியாதிகளுக்கும் ரெக்ஸோனா ஆயின்ட்மென்டை உபயோகியுங்கள்.

REXONA PROPRIETARY LIMITED

RP. 29-23-40 TM

"அலையும் மோதுதே"

எம். எஸ். கமலா

"ஏதாவுனரா? நிலுகடநீகு?" என்ற கல்யாணிராகக் கீர்த்தனை கனகத்தைப் படுக்கவிடாமல் எழுப்பிவிட்டது. நள்ளிரவு பன்னிரண்டு மணி நேரத்தில் படுத்திருப்பவர்களையெல்லாம் தன்னிடம் அழைக்கும்படி செய்தது நாகமணியின் நாதஸ்வரம். கண்களைக் கசக்கிக்கொண்டே மாடியின் வெட்டவெளியில் வந்து நின்றாள். தெருக்கோடியில் விளக்குகளின் வெளிச்சம் வெகு நிதானமாய் முன்னேறி நடந்து வருவது தெரிந்தது. அவள் மனக்கோடியிலும் ஒரு சிறு வெளிச்சம் முன்னேறி மெதுவாக நடந்து வருவதா வேண்டாமா என்று சண்டித்தனம் செய்தது.

தெருவை ஒருமுறை சுற்றிப்பார்த்தாள். நிசப்தமாய் இருந்தது. எதிர்வீட்டில் மாத்திரம் பந்தல் கால்களில் குலைகளுடன் தொங்கும் வாழைமரங்கள், தொங்கப் போட்ட தலையுடன் தூங்குகின்றனவோ என்னும்படி வெய்யிலுக்கு வாடி, பாரத்தைத் தாங்காது கீழ்ப்புறம் வளைந்து சாய்ந்து கட்டப்பட்டு நின்றிருந்தன. பந்தல் நடுவில் ஒரு 'பெட்ரோமாக்ஸ்' ஒருவரும் தன் பிரகாசத்திற்குமுன் நிகரில்லை என்று பறைசாற்றுகிறதோ என்னும்படி தன் காந்தியை நாற்புறமும் எடுத்து வீசித் தொங்கிக்கொண்டிருந்தது. தெரு ஓரத்தில் இரண்டொரு எச்சில் பொறுக்கிகள் தூங்கிக்கொண்டிருந்தனர். உள்ளே யாரோ அலுப்புடன் தெருவிற்கு நேராய்ச் சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்தது கனகத்தின் கண்களில் பட்டது. அவளால் நிற்கமுடியவில்லை. கைப்பிடி சுவரின்மேல் வலது கையை ஊன்றிக்கொண்டு, இடது பாதத்தைத் தரையில் ஊன்றி, வலது காலைச் சுவரின்மேல் மடக்கி அமர்ந்தாள்.

"ஸீதா கௌரீ! வாகீச்வரியனு......

ஸ்ரீ ரூபமுலந்தா? கோவிந்தா? ? ஏதாவுனரா? ? ?" என்ற அனுபல்லவி அதியற்புதமாய் அவள் காதில் கேட்டது. "எங்கோ இருக்கிறான். எங்கிருந்தால் என்ன? மனித உலகில் கல்லாய் இருக்கிறான். அது நிச்சயம். அதில் ஐயமில்லை..." என்று தன்னுள் வெறுப்புடன் சொல்லிக்கொண்டாள்.

"ஏன் அப்படிச் சொல்கிறாய்? கடவுள் இல்லாமலா இந்த உலகம் நடக்கிறது?" என்று உசாவியது அவள் புத்தி.

"இருப்பதுதான் தெரிகிறதே!" என்று ஏசியது அவள் மனம்.

"உன் பாபம் அப்படியிருந்தால்..." என்றது அவள் விதி.

"எல்லோரும் செய்யாத பாபத்தை நான் என்ன செய்தேன்?" என்றது அவள் சுயநலம்.

"அதை வாய்விட்டுச் சொல்லவும் வேண்டுமா?" என்றது விதி.

"ஆம், சொல்வானேன்? எல்லோரும் உன்னைப் பார்ப்பதைப் பார்த்தாலேயே தெரியவில்லையா?" என்றது சாந்தம். அவள் நெஞ்சம் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பாரம் கொண்டு கனத்தது. மெள்ள ஒரு பெருமூச்சு விட்டாள். அத்துடன்கூட எண்ண அலைகள் வெளிப்பட்டன.

2

அன்று காலைதான் அவசர அவசரமாகத் தன் வேலைகளை முடித்துக்கொண்டு, அண்ணன் எழுந்திருப்பதற்காகக் காத்திருந்த போது, எதிர் வீட்டு வாயிலில் நாதஸ்வரம் வாசிப்பது கேட்டது. அடுக்களையில் ஒரு காலும் தெரு வாயிற்படியில் ஒருகாலுமாக, குட்டிபோட்ட பூனையைப்போல் சுற்றி வந்த கனகத்திற்கு அவள் அண்ணன் எழுந்தது தெரியவில்லை. தெரு வாயிற்படியில் தூணில் சாய்ந்தவாறு நின்றிருந்தாள். ஒரு வண்டி வந்து எதிர்வீட்டு வாயிலில் நின்றது. அதிலிருந்து மூன்று ஸ்திரீகளும், ஓர் ஆடவனும் இறங்கினர். அவர்களைப் பார்த்துக் கொண்டே நின்றிருந்தாள். அதே சமயம் "கனகம்!" என்ற அவள் சகோதரனின் குரல் கேட்டது. அவள் பதில் சொல்வதற்குள்வந்தவர்களை வரவேற்கத் தெருவில்வந்த எதிர் வீட்டு மாது "கனகம்! வரல்லையா?" என்றாள்.

அம்மாதின் வார்த்தை முடிவதற்குள் "க...ன...க...ம்" என்று அவள் அண்ணன் அழுத்தமாய் அழைத்தான்.

"வந்தேன் அண்ணா!" என்று சொல்லிக் கொண்டே வேகமாய் அடுக்களைக்குள் சென்று, 'காப்பி'யுடன் அண்ணன் முன் வந்து நின்றாள். அவள் கையிலிருந்த காப்பியை வாங்கிக்கொண்டு "கனகம் நீ நேற்று

வரை கல்யாணராமையர் வீட்டுக்குச் சென்று காரியம் செய்தது சரி. அவர்கள் வீட்டுக்கலியாணம் முடிந்து, வந்தவர்களெல்லாம் ஊர்போய்ச் சேரும்வரை நீ அவர்கள் வீட்டுக்குப் போகவேண்டாம், சரியா?'' என்று காப்பியை உறிஞ்சினான். அவள் கட்டிவைத்த ஆசைக் கட்டிடம் அப்படியே இடிந்து தரைமட்டமாய்ச் சாய்ந்தது. பதில் பேசாது தரையை உற்றுப்பார்த்தாள். அப்படியே எந்நேரம் நின்றாளோ அறியாள்.

''இந்தா! டம்ளரை வாங்கிக்கோ!'' என்ற அண்ணனின் குரல் அவளை வேதனைக் கோட்டையிலிருந்து வெளியில் இழுத்தது. மெதுவாய்க் கையை நீட்டினாள். கண்களை மெல்ல மேலுக்குயர்த்தினாள். அக்கண்கள் நிறைய மின்னும் அந்த நீர்......அனந்த கிருஷ்ணனின் குடலைக் கலக்கியது. ஆம் அனந்தகிருஷ்ணன் கனகத்தின் அண்ணன். அவனுக்கு அது குடலைக் கலக்கும் பாதரஸமாய்த் தோன்றியதுபோலும். அவன் வயிறு கலங்கிவிட்டது. ஏன் அப்படிச்சொன்னோம். என்று நினைத்தான். சொல்லிவிட்டான். இனி, போவென்றாலும் அவள் போகமாட்டாள். சடாரென்று அவ்விடத்தைவிட்டகன்றான். கனகம் கண்களில் நிறைந்த நீர் நிலத்தில் விழுந்து சிதறுவதற்குள் அவள் அடுக்களைக்குள் சென்றுவிட்டாள்.

அனந்தகிருஷ்ணனின் மனைவி அவள் தம்பியின் கலியாணத்திற்காகப் பிறந்தகம் சென்றிருந்தாள். அனந்தகிருஷ்ணன் மூத்தவன். இரண்டாமவன் ராஜதுரை. மூன்றாமவன் முகுந்தகிருஷ்ணன். ராஜதுரை திருநெல்லையிலும், முகுந்தன் வடக்கே எங்கோ வேலையிலிருந்தனர். ராஜதுரையும், முகுந்தனும் கனகத்திற்கு இளையவர்கள். கணவன் பாக்கியத்தை அறியாத கனகம் சகோதரர்களுக்குச் சகாயமாய், தன் சரீரத்தை ஒப்படைத்தாள், எந்தச் சகோதரன் வீட்டிற்குச் சகாயத்திற்கு வேண்டுமோ அங்கு அழைக்கப்படுவாள். முக்காலும் மூத்தவனிடம்தான் இருப்பாள். அனந்தகிருஷ்ணன் I G. F, போலீஸில் வேலையிலிருக்கிறான். எதுவாயினும் அவன் சொன்னால் சொன்னதுதான். மாற்ற முடியாது, அனந்தகிருஷ்ணன் ஆபீசுக்குச் சென்றுவிட்டான். தெருக் கதவைத் தாளிடச் சென்றாள்.

அச்சமயம் தெருவில் யாருடனோ பேசிக்கொண்டிருந்த எதிர் வீட்டம்மாள் ''கனகம்! உங்கண்ணா ஆபீசுக்குப் போயிட்டானோன்னோ? இன்னும் வீட்டிலே என்ன செய்றே? கதவை இழுத்து பூட்டிண்டு வா?'' என்றாள்.

பாத்ருடுவின்

பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

48 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான தழந்தைகளை இக்கொடிய குலைக் கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதினால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறுதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில்
கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு,
தெப்பக்குளம் போஸ்டு.

"ஆகட்டுமென்று தலையை அசைத்துத் திரும்பினாள்.

"இந்தக் கனகம் அந்த கனகந்தானே! குப்பண்ணுபிள்ளை நாணுக்குட்டிக்கு கொடுத்திருந்தார்களே......" என்று தன் சந்தேகத்தை நீள இழுத்தாள், பேச்சை முடிக்காமல் மற்றொரு மாது தன் சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ள.

"அதே கனகம்தான்! என்னவோ பாவம்!! அவள் தலை எழுத்து அப்படியிருந்தது" என்று அலுப்பாய்க் கூறினாள் அந்தம்மாள். கதவைச்சார்த்திய பின்னும் இவர்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டு ரேழியில் நின்றுகொண்டிருந்தாள் கனகம். அண்ணன் எதிர் வீட்டிற்குப் போகவேண்டாமென்று சொன்னதும் நல்லதுதான் என்று நினைத்துக்கொண்டு உள்ளே சென்றாள். அவளுக்கு உள்ளேயும் இருக்கைகொள்ளவில்லை. ஜன்னலருகில் வந்து நின்றாள்.

"பெண் ஜன்மமும் ஒரு ஜன்மமா? இருந்தாலும் வாயில் மண்ணைப் போட்டுக்கொண்டு இருக்கிறதுகள்; செத்தாலும் மண்ணைப் போட்டுக்கொண்டு சாகிறதுகள். இதற்காகத்தான் பொறந்ததும், பொண்ணுங்க வேண்டியிருக்கு, நன்னாயிருந்தால் பொண்ணு பொன்னுதான். நலங்கெட்டால் பெரிய புண்ணுன்னு!" என்று கல்யாணராமய்யர் மனைவி சொல்வது கேட்டது, கலங்கும் கண்களைத் துடைத்துக்கொண்டு அப்படியே நின்றாள்.

3

மாலை கல்யாணவீட்டிற்கு அழைக்க வந்தனர். அனந்தகிருஷ்ணனின் சொல்லுக்கிணங்கி கனகம் அவர்கள் வீட்டுக்குப் போகாமல் இருந்தாள். ஆனாலும் மத்தியானம் எதிர் வீட்டில் அவர்கள் பேசியது இவளைத் துன்புறுத்திக்கொண்டேயிருந்தது. ஊர்வலம் நடுத்தெருவில் வந்துவிட்டது. தன் யோசனையிலிருந்து விடுபட்டு ஊர்வலத்தில் வரும் ஜனங்களைப் பார்த்தாள். முதலில் தன்னை நோக்கும் தன் அண்ணனின் கண்களைக் கண்டாள். ஆண்கள் கூட்டத்தில் மற்ற இரண்டொரு பார்வைகளும் மேல்நோக்கி யிருந்ததைப் பார்த்ததும் அவள் மனம் ஆயிரம் துண்டாகிவிட்டதோ என்னும்படி கிடுகிடுவென்றாடியது. சடக்கென்று பின்னுக்கு நகர்ந்துகொண்டு நின்றாள். அவள் தனக்குள் "கடவுளே! என்னை மாத்திரம் ஏன் இப்படிப் படைத்தாய்? நான் ஒருத்தி நன்றாயிருந்துவிட்டால் அதனால் உனக்காகும் செலவென்ன? எக்குறையை அனுபவித்தாலும் கணவன் குறையைமாத்திரம் அனுபவிப்பது மிகமிகக் கஷ்டம். அதிலும்........." அவள் யோசனையைக்கூட நீடிக்க விடுவதில் கடவுளுக்கு இஷ்டமில்லைபோல் தோன்றுகிறது. தடதடவென்று அனந்தகிருஷ்ணன் கதவையிடிப்பது தெரிந்தது, பரபரவென்று மாடியைவிட்டு இறங்கிவந்து கதவைத் திறந்தாள்.

"இன்னும் தூங்கவில்லையா? கனகம்!" என்று அவள் முகத்தை உற்றுப்பார்த்தான். அவள் முகம் விபரீத மேக ஓட்டத்தால் கனத்துக்கிடக்கும் ஆகாயத்தைப்போலிருந்தது. அவனுக்கே பயமாகிவிட்டது. அன்று காலை தான் சொன்னதின் விளைவோ? என்றஞ்சினான். மேற்கொண்டு கேட்கத் தோன்றவில்லை. அவளுக்கும் அவன் கேள்விக்குப் பதில் விடுக்கப் பயமாயிருந்தது. அவன் மௌனமாய் மாடிக்குச் சென்றான். கனகம் வாயிற்கதவைச் சார்த்திக்கொண்டு தெருப்புறமுள்ள அறையில் ஜன்னலுக்கருகில் சாய்வு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு ஊர்வலத்தைப் பார்த்தபடியே அமர்ந்திருந்தாள்.

அவள் மூளையும் கனத்துக்கிடந்தது. அப்படியே கற்சிலைபோல் அமர்ந்திருந்தாள். அவள் உணர்வற்ற தன்மையை மாற்றின சில சொற்கள்.

"நாணுக்குட்டி அகமுடையாள் நன்னாயிருக்காளே! இன்னிக்குக் காத்தாலே வண்டியெவிட்டு இறங்கும்போது வாசல்லே நின்னுண்டிருந்தாள். என் மச்சினிதான் மத்தியானம் சொன்னாள். எதிராளாத்துலே காத்தாலே நின்னுண்டிருந்தாளே அவதான் நாணுக்குட்டி சம்சாரமுன்னு, பாவம்! விதி!! அவளை அப்படிச்செய்தது" என்றார்.

"கொடுத்துவைக்கலை அந்த மாபாவி அவள் காரியத்தில் கப்பல்தான், அந்தக் காலத்தில் படிப்பு இத்தனை மலிந்திருக்கவில்லை. இப்பன்னா குப்பைக்காரன் முதல் கோடீச்வரன் வரை பெண்களைப் படிக்க வைக்கிறார்கள். ஏதோ ரெண்டு புஸ்தகம் படித்திருப்பாள்போல் தோன்றுகிறது. வீட்டு வேலைகளில் அவளை மிஞ்சுபவர்களே கிடையாது" என்றார் மற்றொருவர்.

"அவள் காரியத்தில் எமனாயிருக்கிறதினாலேதான் வீடுவீடாய்ப் போய் உழைக்கிறாள். அவன் பாவியோ, கொடும்பாவியோ அதற்குத் தக்கபடிதான் அனுபவிக்

கிறான்.'' கனகத்தின் மனம் இதைக் கேட்டதும் திடுக்கிட்டது. சரியாய் எழுந்து உட்கார்ந்தாள்.

''அனுபவிப்பதென்னவந்தது? நிர்விசாரமாய்ச் சம்பாதித்துக்கொண்டு, வண்டைப்போல் அழகு இருக்கும் இடத்திலெல்லாம் அலைந்துகொண்டிருந்தானே!''

''அழகுமாச்சு, மண்ணுமாச்சு. அவன் உடம்புதான் அழுகிவழியறதே! அய்யோ பாவம்! பெண்பாவம் பொல்லாது. கலி காலத்தில் கைகண்ட பலன் அனுபவிக்கிறான்...'' என்றது மூன்றாவது பெண் குரல்.

அவள் மனதில் தோன்றியது. ''நான் அவர் துன்புறவேண்டுமென்று கனவில்கூட நினைக்கவில்லையே?''

''நீ நினைக்காவிட்டால்............''என்றது அவள் புத்தி.

''அப்படியானால் என் சகோதரர்கள்.....'' அதை அவளால் நினைக்கக்கூட முடியவில்லை. ''அம்மா!'' என்று பெருமூச்சுவிட்டாள்.

''எங்கிருக்கிறான்? தம்பிகளுடனா?''

''தம்பிமார்களெல்லாம் குழந்தை குட்டி சம்சாரிகளாகிவிட்டனர். அவர்கள் பங்கை எல்லாம் இவனுக்கே விற்றுவிட்டனர். 'எக்ஸைஸ்' டிபார்ட்மெண்டிலிருந்து கொள்ளையடித்த இவன் எங்கு இஷ்டமோ அங்கே பணத்தைக் கொட்டிக்கொண்டிருந்தான். ஆனால் பிள்ளை நல்லது......ன்னு சொல்வார்களே அதைப்போல் அவன் ஆரோக்கியமாயிருக்குமட்டில் எல்லோரும் வைத்துக்கொண்டிருந்தனர். இப்பொழுது அந்த அழுகைச் சதையை வைத்துக்கொள்ள யாரும் ஒப்பவில்லை. பணம் இருந்து என்ன செய்கிறது? அவனுக்குப் பரிஞ்சிண்டு கஞ்சியோ காடியோ கொடுப்பவர் இப்போ யாருமில்லை. கண்ணீரும் கம்பலையுமாய்க் கட்டிலில் படுத்திருக்கிறான். பணம் படைத்தவர்களுக்காகவென்றே படைக்கப்பட்ட ஏழைச்சிறுவன் ஒருவன் அவனுக்குச் சகாயமாய் இருக்கிறான். டாக்டர் வந்து மருந்து கொடுக்கிறார். காப்பியோ பாலோ ஹோட்டலிலிருந்து வரவழைத்துக் குடிக்கிறான். தம்பிகள் நேர்ந்தன்னிக்கு வந்து பார்த்துப் போகிறார்கள். என்ன வாழ்வு? அநாதைவாழ்வு?'' என்று முடித்தாள். அதற்குமேல் அவர்கள் பேசுவது அவள் காதில் விழவில்லை. அவள் படித்த பதிவிரதைகளின் கதைகள்தான் அவள் முன்தோன்றின.

— 4 —

ஏதோதோ சிந்தனையில் சிக்குண்டு திணறிய அவள் புத்தியில் ''அன்று நளாயனி தன் கணவன் பெரும் வியாதிக்காரனாயிருந்தும், எவ்வளவு பொறுமையுடன் அவனுக்குச் சேவைசெய்து, பெண் குலத்திற்கே பொறுக்கமுடியாத பெரும் தியாகத்தைச் செய்தாள் தேவடியாள் வீட்டிற்கு அழைத்துசென்று.

''சியவனரின் மனைவி 'சுகன்ய' அரசகுமாரியாயிருந்தும் கானகத்தில் கண்ணில்லாக் கபோதியுடன் பெண்ணின் பெருமையை உணர்த்தவில்லையா? கணவன்மார்கள் அருகிலிருந்தும் பணிப்பெண்ணாய் வேலைசெய்து கொண்டு த்ரௌபதி இருக்கவில்லையா?'' அதைப்போல் நானும் பாரதநாட்டில் பிறந்த பெண்தானே! பண்பாடு வேண்டாமா? அதைப்போலக் காண உலகக் கடவுள்பெண்களை நினைப்பானேன்? நம் கண்முன் இருந்து மறைந்த அன்னை கஸ்தூரி பாயை நினைத்துக்கொள்ளலாமே! மகாத்மாவிற்கு விருப்பமில்லாததைத் துறந்து, அவர் வாழ்க்கைத் துணைவியாய்க் கஷ்டநிஷ்டூரங்களைச் சமமாய் அனுபவிக்கவில்லையா? இத்தனை நாள் அவர் ஆரோக்கியமாயிருந்தார். என் அவசியம் வேண்டியிருக்கவில்லை. இன்று ஆரோக்கியம் குன்றி, ஆதரவற்ற நிலையிலிருக்கும்போது, பணிவிடை செய்வது சதியின் தர்மமல்லவா?''

''அவர் வேண்டாமென்றால்......''

''நீ அவரிடம் விரும்புவது யாது? அவரின் சேவையைச் செய்து, அவர் சந்தோஷமாய் இருப்பதைப் பார்க்கத்தானே!''

''அவன் எப்படியிருப்பினும் உன் கடமையை நீ செய்யவேண்டுமல்லவா? அவன் ஆண். எத்தனை கொடுமை செய்தாலும் ஆணவம் படைத்த உலகம் அதைப் பொறுக்கும். பெண் செய்வதைப் பேதை உலகம் பொறுக்காது. கனகம்! யோசனை செய். அவன்தான் புருஷன். ஸ்திரீ தர்மமென்ன? நீ இப்பொழுது மாத்திரம் என்ன செய்கிறாய்? சகோதரர்களுக்கும், ஊர் ஜனங்களுக்கும் உழைக்கிறாய். அதனால் அடைந்த பலன்... 'உபகாரி' என்ற பெயர். அவனுக்குச் செய்தால் உன் மங்கல்யத்தைத் தீர்க்கமாய் வைத்துக்கொள்ள முடியும். விவஸ்தையில்லாமல் ஜனங்கள் பேசும் விதவைப் பட்டம் தொலைந்துவிடும்...'' என்ற எதிரொலி மனதினுள் ஒலித்ததும், அவள் நடுநடுங்கிவிட்டாள்.

2000 வருஷங்களுக்குமுன்
முன்னோர்கள் சந்தனத்தை குறைவற்ற தன்மைக்கு ஒப்பிட்டார்கள். இன்று நாம், ஒரு நல்ல பொருளை அந்த வர்க்கத்தின் "ரோல்ஸ் ராய்ஸ்" என்று சொல்லுகிறோம். அதேபோல முன்னோர்கள் ஒவ்வொரு உயர்ந்த பொருளையும் சந்தனத்திற்கு சமமாகச் சொல்லுவார்கள். ஸ்நானத்திற்கு அனுகுணமான வாசனைத் திரவியங்களின் சேர்க்கைக்கு சந்தனத்தைலம் இன்றி யமையாததாக இருப்பதின் காரணம் அதன் சுகந்த மணமும் குளிர்ச்சியளிக்கும் குணமுமேயாம். அசோகனுண்ட காலத்தின் உண்மை என்றும் உண்மையே.
மைசூர்
சந்தண சோப்
சந்தணம் குறிப்பது குற்றமற்ற குணமே

அதே மறுநாள் காலை 'காபி' வைத்து விட்டு அண்ணா எழுந்திருக்கவில்லையே என்று வேதனையுடன் மாடிக்குச் செல்வதும், கீழே இறங்குவதுமாய் இருந்தாள். அவள் மனநிலைமை அவளை அமைதியாய் இருக்கவிடவில்லை. எப்படி இருப்பாள். அவள் பாக்கிய தேவனல்லவா? அவள் சௌபாக்கிய தேவன் அவளைச் சித்திர வதை செய்தாலும் சிரித்துக்கொண்டே திரியச் சிரஞ்சீவி ஸ்தானத்தைப் பெறத் தக்கவனல்லவா? கடவுள் படத்தைப் பார்க்கிறாள். அதைப் பார்க்கும் போதெல்லாம் அவள் மனம் கலங்கியது. அச்சமயம் ரேடியோவில் "அலையும் மோதுதே! அறியாத என் மனமும் அலையும் மோதுதே!" என்றலறியது. அவள் அப்படியே தூணில் சாய்ந்து மோட்டுவாயைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அனந்த கிருஷ்ணன் இறங்கி வந்ததையும் அவள் கவனிக்கவில்லை. அவன் தான் முதல்நாள் சொன்னதை நினைத்துத் தான் அவள் முகம் அப்படியிருக்கிறதோ என்றையுற்றவனாய், கனிந்த குரலில் "கனகம்!" என்றான். அலைமோதும் அவள் நெஞ்சத்தில் ஒரு துள்ளல் துள்ளியது. உடனே எங்கிருந்தோ அமைதியும் நிலவியது. சட்டென்று மிஷினைப்போல் அடுக்களையில் ஓடி, காப்பி டம்ளருடன் வெளியில்வந்தாள். "ஏன்.........கண்கள்......... இடிந்திருக்கிறது? இரவு தூங்கவில்லையா?" என்று கேட்டபடியே காப்பியை வாங்கிக் கொண்டான். அவள் பேசாது தரையைப் பார்த்துத் தலையைக் கவிழ்த்தாள். அவள் சாதாரணமாகவே வெட்கப்படுபவளாதலால் அவன் மறுபடியும் கேட்காமல், காப்பியைக் குடித்து டம்ளரைக்கொடுக்க "இந்தா!" என்றான். அவள் கையை நீட்டினாள்.

"கனகம்! நேற்று நான் உன்னைக் கல்யாணராமய்யர் வீட்டுக்குப் போகவேண்டாமென்றது... உனக்குக் கஷ்டமாயிருந்தால் தாராளமாய்ப் போய்வா! அதற்காக மனதை வாட்டிக்கொண்டு கண் கலங்காதே!" என்றான், வேதனையுடன் வேகும் அவள் முகத்தைப் பார்த்துப் பொறுக்காமல். அவளுக்குக் கொஞ்சம் தைரியம் வந்துவிட்டது.

"அண்.........ணா!" என்றாள். வெடித்த குரலில்.

"ஏன் கனகம்?"

"அண்ணா! வந்து......" அதற்குமேல் சொல்லத் தைரியமில்லை. தயங்கினாள், தடுமாடினாள்.

"என்ன சொல்லு" என்று ஊக்கத்தையளித்தான், அவள் தடுமாற்றத்தைக்கண்ட அனந்தகிருஷ்ணன்.

"ஒ...ன்...றுமி...ல்லை" எப்படித் தைரியமாய்க் கேட்பது? அவள் பிறந்து வளர்ந்து ஒருநாள்கூட அவள் கணவன் வீட்டுப் பேர்களைச் சொன்னதில்லை. அவளுக்குத் தாலி கட்டிய தோஷம்தான். அவன் விரும்பிய அழகு அவளிடம் அவன் காணாததால் அழைத்துக்கொண்டு போகவில்லை. ஒன்றல்ல, இரண்டல்ல. அவள் கழுத்தில் தாலி ஏறி ஈரெட்டு ஆண்டுகளாகிவிட்டன. அன்றையிலிருந்து வயிற்றைவிட்டு வெளியில் வந்தனளே தவிர வாயிலைவிட்டு வெளியேறினதில்லை. அவளுக்குக் கன்னிமாடம் கட்டவில்லையே ஒழிய அவள் தாலிகட்டிய கன்னிதான்.

"என்னவேணும் அம்மா! கேள்! ஏதாவது செலவுக்கு வேண்டுமா?"

அவள் வேண்டாமென்று தலையசைத்தாள். அவள் கண்கள் மாத்திரம் நீர்த்துளிகளை வடித்தன. மூச்சுத் திணறிக்கொண்டு வெளிவந்தது.

"ஏன் கனகம்! ஏன் அழுகிறாய்!! என்ன செய்கிறது சொல்!!!" அவளுக்குச் சற்றே தைரியம் வந்தது. மெல்ல "அண்ணா! அவரைப் போய்ப் பார்த்துவிட்டு வரேனே!"

அவனை அவனே நம்பவில்லை. "முப்பது வயதுக்குமேலாகிவிட்டது. பெண்மைகூட ஒடுங்க ஆரம்பித்துவிட்டது. இவளுக்குத் திடீரென்று இப்படித் தோன்றவேண்டிய காரணம்?' என்று நினைத்து ஆச்சரியத்துடன் நின்றான்.

"அண்ணா! உனக்கு இஷ்டமில்லாவிட்டால் வேண்டாம்...ஆனால்......அவர்......" அதற்குமேல் அவள் நெஞ்சு அடைத்துக் கொண்டது, பேசமுடியவில்லை. தேம்பித் தேம்பி அழத்தொடங்கிவிட்டாள். அனந்த கிருஷ்ணனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. "என்றைக்குமில்லாத ஆசை! இதென்ன பைத்தியம் கனகம்?"

எப்பேர்ப்பட்ட மூடக்கேள்வி. தோன்றிய ஆசையே தோன்றுவது சகஜம். தோன்றாத ஆசை...என்றெண்ணிக்கொண்டான் தனக்குள்.

"ஆசையில்லையண்ணா! அவர் ரொம்ப படுத்திருக்கிறாராம். அவர் தம்பிகள்கூடக் கவனிப்பதில்லையாம். கஷ்டப்படுகிறாராம். நான் இருந்தும்......" என்று அண்ணனின் முகத்தைப் பார்த்தாள், அனந்தகிருஷ்ணன் வாயை மூடிக்கொண்டிருக்கவே,

"இல்லையண்ணா! ஊருக்கெல்லாம் கூப்பிட்ட குரலுக்கு ஏன்னாட்டு, கட்டின ஆம்படையான் படுத்திருக்கும்போது போய் சேஞ்சாளா? என்று நாளைக்கு உலகமே சொல்லிக்காட்டாதா?" என்று பரிதாபமாய் அவன் முகத்தைப் பார்த்தாள்.

"உலகம் சொல்லும் ஒருகோடி, அவனால் நீ அடையப்போவதென்ன? அப்படியாவது அவனுக்கு செய்யறத்துக்கு..." என்று முடிப்பதற்குள்,

"ஆனால் இப்பொழுது அல்லு அசலுக்கு நம்மாலானதை எதற்காகச் செய்கிறோம்?" என்று வெடுக்கென்று கேட்டுவிட்டாள். அவள் அப்படிக் கேட்க நினைக்கவில்லை. அவள் கணவனைக் காணவேண்டுமென்ற ஆவல் அவளை அப்படிப் பேசச் செய்தது. அவன் அதிர்ந்துவிட்டான். அனந்தகிருஷ்ணன் மெல்லத் தன்னைச் சமாளித்துக்கொண்டு "அது புண்ணியம் கனகம்!" என்றான்.

"அண்ணா! அது புண்ணியம், உங்களுக்குப் பணிசெய்வது நீங்கள் வைத்து ரட்சிப்பதற்காக. ஆனால் பெண்ணின் கடமை கட்டினவன் கசடனாயிருந்தாலும் அவன் பணிவிடை செய்யவேண்டியதுதானே கடமை அண்ணா!" என்று கெஞ்சியபடியே காலில் வீழ்ந்து நமஸ்கரித்தாள். அனந்தகிருஷ்ணன் மனம் நெகிழ்ந்துவிட்டது. "அவனுக்கு என்ன உடம்பென்று உனக்குத் தெரியுமா?"

"அண்ணா! அவருக்கு உடம்பு சரியாய் இல்லை என்று நேற்று ராத்திரி கல்யாணராமய்யர் வீட்டில் பேசிக்கொண்டனர். கீழ் அறையில் படுத்துக்கொண்டிருந்த என் காதுகளில் அவ்வார்த்தை விழுந்தப்ப இருந்து என் மனம் என்னவோபோலிருக்கிறது. அண்ணா! என்னவானாலும் என் சௌபாக்கியத்திற்கு......இந்த மங்கள சின்னத்திற்கு....நோயாளியோ... பைத்தியமோ ...கூனோ......குருடோ எப்படி இருந்தாலும் உயிருடன் இருந்தால்தானே அண்ணா நல்லது. குட்டிச்சுவரானாலும் இருந்தால்தானே குழந்தைச் சித்திரமானாலும் வரையலாம்." என்றாள் உருக்கமாய்.

எந்தக் காரணத்தை உத்தேசித்துக் கல்யாணராமய்யர் வீட்டுக் கல்யாணத்திற்குக் கனகத்தைப் போகவேண்டாமென்று உத்தரவிட்டானோ அதே அவளுக்குத் தெரிந்துவிட்டது. இனி அடக்குவதில் பலனில்லை. அவன் செய்த பாபம் அவன் அனுபவிக்கிறான் என்று நினைத்தவனாய் "கனகம்! எப்பொழுது போகவேண்டுமென்கிறாய்?"

"இன்று ராத்திரி வண்டிக்குப் புறப்பட்டால்......"

"இன்று வெள்ளிக்கிழமை வேண்டாம். நாளைக் காலை வண்டிக்குப் புறப்படலாம். கவலைப்படாதே. வேண்டியதை எடுத்துக்

கட்டிக்கொள்..." என்று சொல்லிச் சென்றான்.

யாத்திரைக்குப் புறப்படுபவள்போல் எல்லாச் சாமான்களிலும் கொஞ்சம் கொஞ்சம் எடுத்துக்கொண்டு, காலை அண்ணனுடன் புறப்பட்டுவிட்டாள். ரெயில் ஆட்டம் கொடுத்துக் கிளம்பியபோது அவள் உள்ளமும் ஆட்டம்கொடுத்துக் கிளம்பியது. அவர் எப்படியிருக்கிறாரோ? என்ற யோசனை அவளுக்கு. அனந்தகிருஷ்ணனுக்கு அங்கு எப்படிப் போகிறதென்று. எப்படியோ இருவர்களின் மனமும் கனத்துக்கொண்டிருக்க ரெயில் ஊரை அடைந்தது.

இரவு எட்டுமணி! ஆகாயத்தில் கலாதரனும் கலகலவென்று நகைத்துக்கொண்டிருந்தான். ஒரு மணி நேரமாய்ச் சரியான விலாசம் தெரியாமல் அலைந்து கால்கள் தவள சந்திர வெளிச்சத்தில் சலனமற்று நின்று கொண்டிருந்த அந்த வீட்டின் முன்வந்து நின்று, அனந்தகிருஷ்ணன் கையிலிருந்த விலாசத்தையும் கதவு லக்கத்தையும் பார்த்துக்கொண்டு "ஸார்!" என்று கதவை இடித்தான். உள்ளேயிருந்து ஒரு குரல் "வெறும் கதவுதான், யார் அது? உள்ளே வாருங்கள்" என்று வெளிவந்தது. இருவரும் ஏகோபித்து உள்ளே சென்றனர். அதே சமயம் "அலையும் மோதுதே" என்று அடுத்த வீட்டில் இசைத்தட்டு ஒலித்தது. தன்னையறியாத சக்தியால் உந்தப்பட்டவளாய் அவன் முகத்தருகில் சென்று குனிந்து பார்த்தாள். அவன் சிறிது சிரமத்துடன் கண்களைமூடி ஆயாசத்துடன் வருபவர்கள் யார் என்று யோசனை செய்துகொண்டிருந்தான். முகமெல்லாம் தடித்து, கை கால்களெல்லாம் பார்க்கப் பயங்கரமாய் வீங்கிப் படுத்திருக்கும் நாணுக்குட்டியைப் பார்த்து அனந்தகிருஷ்ணன் மனதிற்குள்ளேயே வெறுத்துக்கொண்டான். தாய்மைக்கே பிறப்பிடமாயுள்ள அவள் பெண் மனம் துடிதுடித்து ஊசலாடியது. சட்டென்று யாரோ பறித்துக்கொண்டு போய் விட்டதைப்போல் மங்கலியச்சரடை அழுத்திப்பிடித்துக்கொண்டாள். "எவ்வளவு நாளாய் அவஸ்தைப்படுகிறீர்கள்?" என்றாள் தாய உள்ளத்துடன். அதற்குள் அனந்தகிருஷ்ணன் தன் வெறுப்பு முழுவதும் குரலில் ஒலிக்க,

"நாணு! கனகம் இச்சமயம் உனக்குப்பணிவிடைசெய்ய வேண்டுமென்று பலவந்தப் படுத்தினாள், அழைத்துவந்தேன்" என்றான்.

நாணுக்குட்டி வியாதியின் கொடுமையால் கனத்துக்கிடக்கும் கண்களைத் திறந்து இருவரையும் பார்த்தான். பொறுமைத் தேவியாகிய கனகத்தின் நெற்றியில் மின்னும் சிவப்புக் குங்குமமும், அனந்தகிருஷ்ணனின் அகங்காரக் கண்களின் மின்னலும் அவன் செய்து சேர்த்த பாபக்குவியலைக் கிளற ஆரம்பிக்கும் இரும்புக் கோல்களாய்த் தோன்றின. ஆனால் என்ன செய்யக்கூடும். அவன் முகத்தில் அவன் செய்த தவறும், பாபக் கிருத்தியங்களும் பரிதாபமுடன் பணிந்து நின்றன.

"அனந்தகிருஷ்ணா! எத்தனையோ பாபம் செய்தேன். அதில் கடுகளவு புண்ணியமும் செய்திருக்கிறேன். உனக்குக் கடிதம் எழுதிக்கனகத்தை வரவழைக்கவேண்டுமென்று ஆசையிருந்தது. ஆனால் எழுதத் தைரியமில்லை. அவள்......" என்று சொல்லும் [illegible] "என்னடா செய்றே!" என்று கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தான். அங்கு நின்றிருக்கும் அனந்தகிருஷ்ணனையும், கனகத்தையும் கண்டு அப்படியே கற்சிலையாய் நின்றான். "இதென்ன? இத்தனை நாளில்லாமல் 'சாகற காலத்தில் சங்கரா!' என்பதைப்போல் இவள் வந்து சேர்ந்தாள்" என்று தனக்குள் சொல்லியபடியே "அனந்தகிருஷ்ணா! வா! எப்பொ வந்தே? நாணு உடம்பு சரியில்லைன்னு கடிதம் போட்டானா?"

"அவர் ஏன் கடிதம் போடுகிறார்? கட்டிண்டவளுக்குத் தீரவில்லை. இப்படிப் படுத்திருப்பதை நேத்துக் கேள்விப்பட்டதும் என்னை நேத்து முழுதும் துளைத்துவிட்டாள். அழைத்துக்கொண்டு வந்தேன். வருஷப்பொறப்புப் பண்டிகை நாலுநாள் தானிருக்கு. அது ஆனபின் வரலாம்னு நினைத்தேன். அழுது தீர்த்துவிட்டாள். நான் சற்று வெளியே போய்வருகிறேன்" என்று ஒருவர் பதிலையும் எதிர்பாராமல் சென்றான். அவன் பின்பே நாணுவின் தம்பியும் சென்றான். கனகம் மாத்திரம் "எனக்குப் புது வருஷம் இன்றே பிறந்து விட்டது" என்றாள்.

கனகம் கட்டில் விளிம்பில் அமர்ந்து "இவ்வளவு கொடிய வியாதி வந்தும் செவிக்காமல் இருந்தீர்களே!" என்று அ[illegible] நெற்றியைத் தொட்டுப் பார்த்த[illegible] அவன் மனதில் இன்ப துன்ப அலைகள் இரண்டும் மோதின.

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

சென்ட்ரல்
ஸ்டுடியோஸ்.
தயாரித்த
வால்மீகி
ஹொன்னப்பா
T. R. ராஜகுமாரி
N. C. வஸந்தகோகிலம்
U. R. ஜீவரத்னம்
T. S. பாலையா
முதலானவர்கள் நடித்த
ஜூபிடர் ரிலீஸ்

Regd. No. M. 4405

Cauveri

— டி. எஸ். ஆர். கோகுல் தைலத்தை —

தொடர்ந்து உபயோகித்த இம்மங்கை தனது கூந்தல்
அடர்ந்து கவர்ச்சியாக வளர்ந்திருப்பதைக் கண்டு
— அகமகிழ்கிறாள் —

இம் மகிழ்ச்சியை நீங்களும்
- எளிதில் அடையலாம் -

டி. எஸ். ஆர்.

கோகுல் கூந்தல் தைலம்

சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைலம்

இவைகள் குற்றால ஸ்நானத்தின் குளிர்ச்சிக்கு நிகரானவை!

மதராஸ் ஸிடி ஏஜண்டு **புஷ்பவனம் ஸ்டோர்ஸ்** பைக்ராப்ஸ் ரோடு,
திருவல்லிக்கேணி.

T. S. R. & CO. PERFUMERS KUMBAKONAM

Cauveri Colou ess, Kumbakonam.